# சத்தியத்தின் குரல்



## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

பயன்படுத்தப்படாமல் வெறுமனே
ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்
'திருமறை ஆசான்'
'கிருபையுள்ள வார்த்தை'
'வேர்டு ஆப் கிரைஸ்ட்'


மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385



சத்தியத்தின் குரல் Volume - 43 THE VOICE OF TRUTH INTERNATIONAL



மலர் : 43


# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH INTERNATIONAL

TAMIL EDITION

**Volume - 43**

# ✯ சத்தியத்தின் குரல் ✯


## Editorial Team

Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Translating Editor
**B.Benny Martin**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Kingsly rajah
Abel R. Nayagam

Publishing Consultant
**Betty Choate**



தேவையான பிரதிகளுக்கு...
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
86-A, Dharapuram Road,
Kangayam - 638701. TN. India.
Cell : 98427 30382, 99655 30385

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**


# 5 நிமிட வேத பாடம்

## கர்த்தருக்குப் பயப்படுங்கள்

Paula Bates

1. கர்த்தருக்குப் ............ அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் [சங்கீதம் 128:1].

2. அவருடைய இரக்கம் அவருக்கு ........................... தலைமுறை தலைமுறைக்குமுள்ளது [லூக்கா 1:50].

3. எந்த ஜனத்திலாயினும் அவருக்கு .................... நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு ................. என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் [அப்போஸ்தலர் 10:35].

4. ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும்........... நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும் அதிக ................. நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறை வேறப் பிரயாசப்படுங்கள். [பிலிப்பயர் 2:12].

5. ஆதலால் அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் .............................. பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி .................. பற்றிக்கொள்ளக்கடவோம் [எபிரேயர் 12:28].

6. மேலும் நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப்.................. சிறியோரும் பெரியோருமானவர்களே நீங்கள் யாவரும் அவரைக் துதியுங்கள் என்று ஒரு ......................... சிங்காசனத்திலிருந்து பிறந்தது. [வெளி 19:5].

For Further Information, Please Contact :



## ஆசிரியர் உரை

# உதவிக்காரரே ஊழியஞ் செய்யுங்கள்

# Deacons Serve

Louis Rushmore

உதவிக்காரர்கள் பிராந்திய சபையை வழிநடத்துகிறவர்களாக அல்ல ஊழியக்காரர்களுக்கும், மூப்பர்களுக்கும் உதவி செய்வதற்குத்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தேவன் வெளிப்படுத்தியிருக்கிற தகுதியம்சங்களுக்கு உட்படும் மூப்பர்களால் கர்த்தருடைய சபையானது வழிநடத்தப்பட வேண்டுமென்பது தேவனுடைய தீர்மானமாயிருக்கிறது [I தீமோத்தேயு 3:1–7; தீத்து 1:59].

நம் பரலோகத்தின் பரிசுத்த தேவன் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வீட்டிலும், சபையிலும் தனித்தனிப் பங்குகளை கொடுத்திருக்கிறார் [I கொரிந்தியர் 11:3; 14:34–35; I தீமோத்தேயு 2:11–14]. எனவே, வேதாகமத்தில் உதவிக்காரருக்கான தகுதியம்சங்கள் பெண்களுக்கு அல்ல ஆண்களுக்கே பொருந்தும் [I தீமோத்தேயு 3:8–13].

ஆகவே, உதவிக்காரர்களுக்கு சபையிலுள்ள ஆண் அங்கத்தினர்களை விட மேலான தலைமைத்துவ பொறுப்புகள் எதுவும் கொடுக்கப்படுவதில்லை. அதாவது, தேவன் அவர்களை தலைமைத்துவ பொறுப்புகளுக்கென்று நியமிக்கவில்லை. உதவிக்காரர்கள் ஜூனியர் மூப்பர்கள் போன்றவர்களல்ல. அதுமட்டுமல்ல, ஒருவர் உதவிக்காரராயிருப்பதனால் அவர் ஒரு நாளில் மூப்பராக உயர்த்தப்படுவார் என்று பொருள்படாது. மூப்பர்களால் உதவிக்காரர்களுக்கு சில பணிகள் கொடுக்கப்படும் போது அதில் வேறு ஏதாவது முடிவு எடுக்கப்பட வேண்டுமென்றால் மூப்பர்களின் அனுமதி அவசியமாகிறது. இருந்தபோதிலும், உதவிக்காரரின் பொறுப்பு, பணி தகுதியம்சங்கள் பற்றி புதிய ஏற்பாடு என்ன சொல்கிறது என்பது பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

உதவிக்காரர் எனும் வார்த்தையை [I தீமோத்தேயு 3:10,13; பிலிப்பியர் 1:1: I தீமோத்தேயு 3:8,12] போன்ற வசனங்களில் நாம் காண முடியும். கிரேக்க மொழி Diakonos எனும் பொருளைக்

கொடுக்கிறது. அதேபோல் Diakoneo எனும் கிரேக்க வார்த்தை ஒருவருக்காக காத்திருந்து அவரிடத்தில் அக்கறைப்படுவது. இன்னும், Diakonos க்கு பொருந்தக் கூடிய அர்த்தங்கள் எல்லாமே Diakoneo க்கும் பொருந்தும்.

உதவிக்காரரின் பொறுப்பு, பணி, தகுதியம்சங்கள் பற்றி புதிய ஏற்பாட்டில் போதுமான அளவு தகவல்கள் தரப்பட்டுள்ளன. பெரும் பாலான வசனப்பகுதிகள் உதவிக்காரர் அல்லது வேலை செய்பவர் என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையையே பயன்படுத்துகின்றன. விசேஷித்த வேலையாட்களை உதவிக்காரருக்கான தகுதியம் சங்களை நாம் [I தீமோத்தேயு 3:8–13] வசனங்களில் காண முடியும்.

உதவிக்காரர்கள் ஊழியம் செய்கிறார்கள். எந்த மொழியாக்கத்தில் பார்த்தாலும் உதவிக்காரர் எனும் வார்த்தை தாழ்மையோடு வேலைகளைச் செய்வது, மேஜையில் சேவை செய்வது, ஒருவருக் காக காத்திருந்து அவரை பராமரிப்பது போன்ற அர்த்தங்களைக் கொடுத்து ஊக்கமான வேலையைச் செய்வதைத் தான் குறிக்கிறது.

Diakonos எனும் கிரேக்க வார்த்தை உதவிக்காரர் அல்லது வேலைக்காரர் என்று பொருள் கொடுப்பதை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். ஆனால், இந்த Diakonos, Donlos எனும் கிரேக்க வார்த்தையிலிருந்து வேறுபடுகிறது. Donlos என்றால் அடிமை என்ற பொருள். இவ்வார்த்தை ஒருவர் தன் எஜமானிடத்தில் கொள்ளும் உறவைக் குறிக்கிறது. ஆனால், Diakonos எனும் வார்த்தை ஒருவர் செய்யும் ஊக்கமான வேலையைக் குறிக்கிறது. சபையில் ஒவ்வொருவரும் வகிக்கும் பதவி உண்மையில் பதவி அல்ல, மாறாக, அது ஒரு பொறுப்பாக இருக்கிறது. பிரசங்கியார்கள் பிரசங்கிக்கிறார்கள், போதகர்கள் போதிக்கிறார்கள், மூப்பர்கள் கண்காணிக்கிறார்கள் அல்லது மேய்க்கிறார்கள் [அப்போஸ்தலர் 20:28] உதவிக்காரர்கள் ஊழியம் செய்கிறார்கள்.

உதவிக்காரருக்கு சபையில் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. உதவிக்காரர் தாங்கள் செய்ய வேண்டிய வேலையைச் செய்யாமலிருப்பது வேத வசனங்களுக்குப் புறம்பானது. ஒரு பிரசங்கியார் பிரசங்கியாமலும், போதகர் போதிக்காமலும் இருந்தால் எப்படி இருக்கும்? உதவிக்காரரின் பிரதான பணி சேவை செய்வது தான். Diakonos என்ற கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் வீட்டு வேலைக்காரர் அல்லது ஊழியக்காரர் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது [யோவான் 2:5,9] இயேசு கிறிஸ்து கூட ஊழியக்காரராக சொல்லப்பட்டிருக்கிறார் [ரோமர் 15:8]

கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் ஊழியக்காரர்களாக சொல்லப் பட்டிருக்கிறார்கள். மேலும், சுவிசேஷ ஊழியக்காரர்கள் என்று புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் நாம் பார்க்கிறோம். எபேசியர் 3:7; 6:21; கொலோசெயர் 1:7;I கொரிந்தியர் 3:5; I I தெசலோனிக்கேயர் 3:2; I தீமோத்தேயு 4:6 [I தீமோத்தேயு 3:8–13] வசனங்களில் மிகத் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. உதவிக்காரர் இருநாக்குள்ளவர்களாக இருக்கக்கூடாது. அதாவது, ஒரு நபரைப் பிரியப்படுத்த எதையாவது பேசிவிட்டு, மற்றொரு சமயத்தில் வேறுவிதமாக வஞ்சகமாக மாற்றிப் பேசக்கூடாது. மேலும், உதவிக்காரர் மதுபானப்பிரியராக இருக்கக்கூடாது என்று எழுதப்பட்டிருக் கிறது. ஆனால், I தீமோத்தேயு 3:3 இல் மதுபானம் குடிக்கிறவராக இருக்கக்கூடாது என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறபடியால், மூப்பர்கள் மதுபானம் குடிக்கக்கூடாது என்ற தடையெல்லாம் இல்லை என்று போதிப்பது மிகவும் தவறான உபதேசமாகும். மாறாக, வேதாகமம் இந்த வசனப்பகுதியிலும் சரி, வேறு வசனப்பகுதிகளிலும் சரி மதுபானம் குடிப்பதை முற்றிலுமாக தடைசெய்கிறது.

உதவிக்காரரின் அடுத்த தகுதியம்சம் அவர்கள் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. உதவிக்காரர் பணத்தைச் சரியாக கையாளத் தெரிந்தவர்களாயிருக்க வேண்டும். அதாவது, யூதாஸ்காரியோத்துக்கு நேரெதிரான குணாதிசயத்தைப் பெற்றிருக்க வேண்டும். மேலும், இவர்கள் விசுவாசத்தின் இரகசியத்தை சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும். இதன் பொருள், உதவிக்காரருக்கு தேவனுடைய வார்த்தையைக் குறித்த ஒரு தெளிவான புரிந்து கொள்ளுதல் இருந்து அதன்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறவனாக இருக்க வேண்டும். இவர்கள் கிறிஸ்தவத்தை உண்மையாக பின்பற்றுவதற்கு நம்பத்தகுந்தவர்களாக இருக்க வேண்டும். இங்கே, சுவிசேஷம், என்பது இரகசியமாகத்தான் இருந்தது [ எபேசியர் 3:3–11].

சபையில் உதவிக்காரரை நியமிப்பதற்கு முன்பாக கிறிஸ்தவச் சேவையில் அவருடைய அனுபவத்தைச் சோதிக்க வேண்டும். அவர் அதிக நாட்கள் கிறிஸ்தவச் சேவையில் ஈடுபட்ட வரலாறு உடையவராக இருக்க வேண்டும். உதவிக்காரராக நியமிக்கப் படுவதொன்றும் ஒரு கௌரவ மிக்க பதவி அல்ல. இன்னும் கூடுதலாகச் சொல்லப்பட வேண்டுமென்றால் உதவிக்காரர் குற்றஞ்சாட்டப்படாதவராக இருக்க வேண்டும். அதுமட்டுமில்லாமல் எல்லா கிறிஸ்தவர்களுமே குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்க வேண்டும் [I கொரிந்தியர் 1:8]. என்ற வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஒருவரை உதவிக்காரராக நியமிக்க வேண்டுமென்றால் அந்த நபர் ஒரே

மனைவியை உடைய புருஷராக இருக்க வேண்டும். அவர் பலதார புருஷராக இருக்கக்கூடாது. இந்த வசனத்தை எடுத்துக்கொண்டு விவாகரத்தானவர் அல்லது மறுமணம் செய்து கொண்டவர் உதவிக்காரராயிருப்பதற்கு தகுதியற்றவர் எனச் சொல்வது முற்றிலும் தவறானதாகும். மேலும், உதவிக்காரரானவர்கள் தங்கள் பிள்ளைகளையும், சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும்.

Diakoneo எனும் கிரேக்க வார்த்தைக்கு பந்தி விசாரணை செய்வது என்னும் ஒரு பொருள் உண்டு. அப்போஸ்தலர் 6:1–7 வசனங்களில் எருசலேம் சபையில் வேலை செய்ய ஏழு விசேஷித்த வேலைக்காரர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். ஆனால், அப்போஸ்தலர் 6 ஆம் அதிகாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய தகுதியம்சத்திற்கும் I தீமோத்தேயு 3:8–13 வசனங்களில் சொல்லப்பட்டுள்ள உதவிக்காரருடைய தகுதியம்சத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றவர்களாயிருந்தால் மட்டும் போதுமானதாயிருந்தது.

**உதவிக்காரரின் உப - தகுதிகள்**

ஒருவர் உதவிக்காரராக நியமிக்கப்பட வேண்டுமென்றால் அவருடைய மனைவி தெய்வீகத் தன்மை அல்லது தேவ பக்தியுள்ள குணாதிசயங்களைப் பெற்றிருக்க வேண்டும். அந்த நபருடைய மனைவியால் அவரை வேத வசனத்தின்படி உதவிக்காரராக தகுதிப்படுத்தவும் முடியும், தகுதியில்லாதவராக ஆக்கவும் முடியும் (ஜ இந்த காரியம் சபையில் வேறு பொறுப்புகளிலிருப்பவர்களுக்கும் பொருந்தும். உதாரணமாக, மூப்பர்களும், பிரசங்கியார்களும் கர்த்தருக்காகப் படுகிற பிரயாசங்களில் அவர்களின் மனைவிமார்கள் பெருந் தடையாக இருக்க முடியும்.

உதவிக்காரரின் தகுதியம்சங்களையும், அவர்களுடைய மனைவிமார்களின் தகுதியம்சத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மனைவிமார்களின் தகுதியம்சம் மிகக்குறைவே. மனைவிமார்கள்

நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவதூறு பண்ணா தவர்களாயிருக்க வேண்டும். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். [I தீமோத்தேயு 3-11] அது போலவே, உதவிக்காரரின் மனைவிமார்கள் எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். அதாவது, இரகசியங்களை வெளியில் அறிவிக்காதவர் களாயிருக்க வேண்டும்.

**முடிவுரை :**

உதவிக்காரர் ஊழியஞ் செய்ய வேண்டும். உதவிக்காரரின் தகுதியம்சங்களுக்கு உட்படாத ஒருவரால் உதவிக்காரராக ஆக முடியாது [I தீமோத்தேயு 3: 8-13]. உதவிக்காரருடைய மனைவியும் தகுதியம்சங்களுக்கு உட்பட வேண்டும். உதவிக்காரர் அவருடைய மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் தலைவராக இருக்கிறார். இவருக்கு கிறிஸ்தவ சேவையில் இருந்ததற்கான முன்மாதிரி இருக்க வேண்டும். இவர் செய்வதற்கென்று நிறைய வேலைகள் உண்டு. இவரால், அதை சிறப்பாகச் செய்ய முடியும்.

உண்மையுள்ள உதவிக்காரருக்கு விசேஷித்த பலன்கள் காத்திருக் கின்றன [I தீமோத்தேயு 3:13]. உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடை வார்கள். கணக்கொப்புவிக்கப்பட வேண்டிய எல்லா ஆத்துமாக்களும் கிறிஸ்தவ சேவைக்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். அதிலும் குறிப்பாக, உதவிக்காரர் கிறிஸ்தவ சேவையில் கடுமையாக உழைக்க வேண்டும்.

# கிறிஸ்து சபைக்காக என்ன செய்திருக்கிறார்

**சபையைக் கட்டினவர் அவரே [ மத்தேயு 16 :18 ]**

**சபைக்கு அவர் இரட்சகராயிருக்கிறார் [ எபேசியர் 5:23 ]**

**சபைக்கு அவர் தலையாயிருக்கிறார் [ எபேசியர் 5:23,24 ]**

**சபைக்காக இரத்தத்தைச் சிந்தினார் [ அப்போஸ்தலர் 20:28 ]**

**சபைக்காக அவர் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார் [ எபேசியர் 5:27 ]**



### நிர்வாக ஆசிரியர் உரை

## கூடாரத்தில் யார்? பர்வதத்தில் யார்?

## *Who Shall be in Tabernacle?*
## *Who Shall be in the Holy hill?*

*E.Z.S. Rajanayagam*

**பொ**துவாக, சங்கீதங்கள் என்றாலே அவைகள் ஒட்டு மொத்தமாக தாவீது அரசனுக்குச் சொந்தமானவை என்று பெரும் பாலான கிறிஸ்தவர்கள் எண்ணுகின்றனர். ஆனால், உண்மை அப்படி இல்லை . 150 சங்கீதங்களை எழுத தேவன் ஏழு தேவதாசர்களைப் பயன்படுத்தியுள்ளார். அவர்களில் கிட்டத்தட்ட பாதி சங்கீதங்களுக்கு உரிமை கொண்டாடும் தகுதி தாவீதுக்கு உண்டு. இந்தப் 15ம் சங்கீதம், சீயோன் மலையின் மீது ஆசாரிப்புக் கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டதற்குப் பிறகு எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. முந்தின 14–ம் சங்கீதத்தில், ஒரு நீதிமானுக்குக் கிடைக்கும் சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் பற்றி வெகுவாகப் பேசப்பட்டுள்ளது. ஆனால், இச்சங்கீதத்தில் அந்த நீதிமான் யார்? சீயோனுக்குச் சொந்தமாகும் அந்த நீதிமான் எப்படிப்பட்ட தகுதி உடையவராக இருக்க வேண்டு மென்பதை வலியுறுத்தும் விதமாக எழுதப்பட்டுள்ளது.

அதற்கு முன்பாக, கூடாரத்தில் – தங்குவான் மற்றும் பர்வதத்தில் வாசம் பண்ணுவான் என்பது பற்றிக் கொஞ்சம் விளக்க முற்படுகிறேன். பொதுவாகக் கூடாரம் என்பது நிலைத்த தன்மைக்கு அடையா ளமானதல்ல. நிலையாக ஓரிடத்தில் குடியிருக்க விரும்பும் ஒருவர் கூடாரம் அமைத்துத் தங்கமாட்டார். மாறாக, அடிக்கடி இடம் மாறுவோரே கூடாரத்தைப் பயன்படுத்துவர். ஏனெனில், கூடாரம் என்பது தூக்கிச் செல்ல சுலபமாக இருக்கும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேலர்கள் வனாந்திர யாத்திரையில் கூடார வாசிகளாகவே இருந்தனர். [எண் 2 – 2] தேவனும் கூடார வாசிகளாக இருந்த இஸ்ரவேலர்களின் தொழுகைக்கு, ஆசாரியர்கள் தூக்கிச் செல்லும் வகையில் ஆசரிப்புக் கூடாரத்தைக் கொடுத்தார் [எண்4:1–49].

சங்கீதம் 15:1ல் உள்ள கூடாரத்தை நாம் புதிய ஏற்பாட்டு சபைக்கு ஒப்பிடலாம். எப்படியெனில், சபை என்பது ஒரு கட்டிடத்தைக் குறிக்கும் வார்த்தை அல்ல. இது, சபையாகக் கூடி வரும் விசுவாசிகளைக் குறிக்கும் வார்த்தை. வேதவசனங்களின்படி கிறிஸ்தவர்கள் இப்பூமியில் நிலையற்றவர்களாகவே உள்ளனர் [2கொரி 5:1,2 பேது. 13,14] அப்போஸ்தலன் பவுலடியார், நம்முடைய [கிறிஸ்தவர்கள்] குடியிருப்பு பரலோகம் என்கிறார் பிலி 3:20] அப்படியானால், பூமி நிலையானது அல்ல என்பது தானே இதன் பொருள்.

தாவீது அரசன் இந்தக் கூடாரத்தோடு சம்பந்தப்படுத்தியிருக்கும் வார்த்தை தங்குவான் என்பது. தங்குதல் என்பது ஒரு நிரந்தரத்தைக் குறிக்கும் வார்த்தையல்ல. பட்டணங்களில் தங்கும் விடுதிகள்'' என்று தொங்கும் விளம்பரப் பலகைகளைப் பார்க்கிறோம். யார் அதிலே தங்குவார்கள்? பிரயாணத்தில் இருப்பவர்களோ அல்லது ஒரு குறிப்பிட்ட வேலையினிமித்தம் வெளியூரிலிருந்து வருபவர்களோதான் தங்குவார்கள். அதுவும் சில நாட்களுக்குத் தான் தங்குவார்கள். மாதக் கணக்கிலும், வருடக் கணக்கிலும் தங்கமாட்டார்கள் அதுபோலவே, சத்தியத்தின்படியான ஒரு கிறிஸ்தவனும், கூடார வாசியைப் போல நிலையற்றவனாக இப்பூமியில் இருந்து, தங்கும் விடுதியில் தற்காலிகமாக இருப்பவர்போல, கிறிஸ்துவால் இரத்தம் சிந்தி சம்பாதிக்கப்பட்ட சபையில் [அப் 20.28] கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டுமோ அல்லது தன்னுடைய மரணம் வரைக்குமோ தற்காலிகமாகத் தங்கியிருப்பவனாக உள்ளான்.

அடுத்து, பர்வதம் - வாசம் பண்ணுவான் என்னும் பதங்களை தாவீது ஆவியின் ஏவுதலால் பயன்படுத்தியிருப்பதை கவனியுங்கள் கூடாரம் என்பதற்கு எதிராகப் பர்வதம் என்பது நிலைத்த தன்மையுடையதாக இருக்கிறது. ஒரு பர்வதமோ அல்லது ஒரு மலையோ உலகம் தோன்றியது முதல் அந்தந்த இடத்திலே தான் உள்ளது. சங்கீதக்காரன் இந்தப் பர்வதத்தை பரிசுத்த பர்வதம் என்று அழைக்கிறார். ஏனெனில், சீயோன் பர்வதத்தின் மீதுதான் தேவாலயம் நிரந்தரமாகக் கட்டப்பட்டது. அத்தோடு தேவாலயம், தேவன் வாசம் செய்யும் இடமாகவும் அன்றைக்கு இருந்தது. ஆகவேதான், அது பரிசுத்த பர்வதம். இந்த பரிசுத்த பர்வதத்தை நாம் பரலோகத்திற்கு ஒப்பிடமுடியும். எப்படியெனில், பரலோகம் நிலைத்த தன்மையுடையதாகவும், பரிசுத்த தேவன் இருக்கும் இடமாகவும் உள்ளது.

ஆகையால், சங்கீதம் 15:1ல் கேட்கப்பட்டிருக்கும் கேள்வி நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது. பாருங்கள்,'கர்த்தாவே யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? என்ற கேள்விகளுக்கான பதில், 15:2

இப்படியாக உள்ளது. **உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன் தானே என்று.** எவ்வளவு அருமையான, அவசியமான தகுதிகளாக உள்ளது. தாவீதைக் கொண்டு ஆவியானவர் வெளிப்படுத்தும் இந்தத் தகுதிகள், கர்த்தராலே அவருடைய சபையில் கிறிஸ்துவின் உபதேசப்படி சேர்க்கப்பட்டு, இப்பூமியில் கிறிஸ்து வரும் வரைக்கும் தற்காலிகமாக வாழ்வதற்கும், கிறிஸ்துவின் வருகையில் அவரால் நியாயந் தீர்க்கப்பட்டு, பரலோகத்தில் பிதாவாகிய தேவனோடும். கிறிஸ்து வோடும், ஆவியானவரோடும் என்றென்றும் வாழ்வதற்கும் அவசியமாயிருக்கிறபடியால், இத்தகுதிகள் மூன்றைப் பற்றியும் கொஞ்சம் விபரமாகக் கீழே பார்த்து, நாம் ஒவ்வொருவருக்கும் இத்தகுதிகள் இருக்கிறதா என்று நம்மை நாமே சோதித்துப் பார்ப்போம்.

I **உத்தமமாய் நடக்க வேண்டும்.**

இப்பூமியின் வாழ்க்கையில் ஒருவர் கூடாரமாகிய சபையில் தற்காலிகமாகத் தங்கியிருந்து, மறுமையில் பர்வதமாகிய பரலோகத் தில் நிரந்தரமாக வாசம் பண்ணுவதற்குத் தேவையான தகுதி, உத்தம மான நடக்கை.

**உத்தமம்** என்பது ஓர் உயரிய குணம். தேவ அங்கீகாரத்தை அப்படியே பெற்றுத்தரும் அருங்குணம். ஏனெனில், தேவன் உத்தம குணத்தில் பிரியப்படுவதாக நாளாகம நூலில் நாம் பார்க்க முடியும் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாய் இருக்கிறீர் என்பதை அறிவேன்... (1நாளா 29:17). ஆவியானவர் பக்தியாயிருந்தவர்களையெல்லாம் உத்தமமாக இருந்தார்கள் என்று வேதாகமத்தில் வெளிப்படுத்தாமல் இக்குணத்திற்கென்று நோவா (ஆதி 6:9) யோபு 1:1). காலேப் (எண் 14:24) போன்ற வெகு சிலரை மாத்திரம் அடையாளப்படுத்தியிருக்கிறார். இவர்களெல்லாரும், இவர்கள் காலத்தில் வாழ்ந்த மற்ற எல்லாரைப் பார்க்கிலும், தேவனை முற்றிலும் சார்ந்த ஓர் ஒப்பற்ற பக்தி வாழ்க்கையை நடத்திக் காட்டியவர்கள். ஆவியானவர் தாவீதைக் கொண்டு இது போன்ற ஓர் உத்தம குணம் சபைக்கும், பரலோகத்திற்கும் தேவை என்கிறார்.

II **நீதியைச் செய்ய வேண்டும்.**

இப்பூமியின் வாழ்க்கையில் ஒருவர் கூடாரமாகிய சபையில் தற்காலிகமாகத் தங்கியிருந்து, மறுமையில் பர்வதமாகிய பரலோகத்தில் நிரந்தரமாகக் குடியேறுவதற்குத் தேவையான இரண்டாவது தகுதி நீதி செய்தல், **உத்தமம்** போன்றே **நீதி** என்பது தேவ குணமாகவும், தேவன் **பிரியப்படுகின்ற** குணமாகவும் உள்ளது. சங்கீதத்தில் கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப்படுவார்;

அவருடைய முகம் **செம்மையானவைகளை** நோக்கியிருக்கிறது (சங்.11:7) என்றுள்ளது. புதிய ஏற்பாட்டில் எபிரெய ஆசிரியரும் இதே கருத்தை ஆவியானவரைக் கொண்டு வெளிப்படுத்தியுள்ளார். நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர். (எபி. 1:9) என்று. நம் இயேசுவானவர் இப்பூமியில் இருந்தபோது, நீதியை நிறைவேற்ற வேண்டுமென்பதில் குறியாயிருந்தார். ''இயேசு யோவானுக்குப் பிரதியுத்திரமாக இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார் (மத்.3:15).

நீதி, நீதி என்று நாம் பேசும் போது, முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒரு வசனப்பகுதி உண்டு. ஆம், அப்போஸ்தலன் பவுல் தான் நேசித்த பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு இவ்விதம் எழுது கிறார். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுய நீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடைய வனாயிருந்து... '' என்கிறார் (பிலி 3:9). இவ்வசனத்தில், அவர் இரண்டு நீதி பற்றிக் கூறுகிறார். ஒன்று **சுயநீதி** மற்றொன்று **தேவநீதி.** அதாவது, நியாயப்பிரமாணமாகிய பழைய ஏற்பாட்டைக் கைக்கொள்வ தால் வருவது சுயநீதி என்றும், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தால், கிறிஸ்துவின் உபதேசத்தின் மூலம் வருவது தேவநீதி என்றும் கூறுகிறார். கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தால் வராத யாவும் பாவமாகவே (ரோமர் 14:23) உள்ளது. ஒருவேளை, அவைகளைச் செய்கிறவர்கள், தாங்கள் செய்கிறவைகளை நீதியானவைகளாக எண்ணிச் செய்து, தங்களை நீதி செய்கிறவர்கள் என்று கூறிக் கொண்டாலும், அப்படிப்பட்ட நீதி, தேவனுடைய பார்வையில் சுய நீதியாகவே எண்ணப்படும்.

III **மனதாரச் சத்தியத்தைப் பேச வேண்டும்**

இப்பூமியின் வாழ்க்கையில் ஒருவன் கூடாரமாகிய சபையில் தற்காலிகமாகத் தங்கியிருந்து, மறுமையில் பர்வதமாகிய பரலோகத்தில் வாசம் செய்வதற்குத் தேவையான மூன்றாவது தகுதி, மனதாரச் சத்தியத்தைப் பேசுதல். மல்கியா தீர்க்கன் கூறும் போது, ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும், வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன் (மல். 2:7) என்கிறார். இவர் இங்கே வேதத்தை வாயோடு சம்பந்தப்படுத்துகிறார். ஆனால், நமது தியானப் பகுதியோ, சத்தியத்தை

வாயோடு சம்பந்தப்படுத்தாமல், மனதோடு சம்பந்தப்படுத்திப் பேசுகிறது. அதாவது, சத்தியம் புறம்பான மனுஷனோடு சம்பந்தமுடையதாயிராமல், உள்ளான மனுஷனோடு சம்பந்தமுடையதாயிருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது. இக்கருத்து நம்முடைய நாட்களுக்கு அப்படியே பொருந்துகிறதாக உள்ளது. எப்படியெனில், மனதளவிலும் செயல் அளவிலும் இல்லாமல், வெறும் வாயளவில் தான் பேசப்படுகிறது.

அன்பானவர்களே, நம்முடைய தேவன் இருதயத்தின் தேவனாக உள்ளார். தள்ளப்பட்ட சவுலுக்குப் பதிலாக இஸ்ரவேலுக்கு ராஜாவைத் தெரிந்தெடுக்கச் சென்ற சாமுவேல் தீர்க்கனிடம் இவ்விதம் கூறினார். ...நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம். நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார் (1 சாமு 16:7 ). ஆம், அவர் இருதயத்தை அறிகிறவராகவும் (சங் 44:21) ஆராய்கிறவராகவும் (1நாளா 28:9) சோதிக்கிறவராகவும் இருக்கிறார் (எரே 12:3). ஆகவே, நம்முடைய பக்திச் செயல்பாடுகளும், சத்தியம் சம்பந்தப்பட்ட காரியங்களும் இருதயத்திலிருந்து வரவேண்டுமென்று தான் எதிர்பார்க்கிறார்.

நம்முடைய வாழ்க்கையில் நாம் மனதாரச் சத்தியத்தை நேசிக்கிறவர்களாக இருந்தால், முதலாவது, நாம் கிறிஸ்துவின் உபதேசப்படி, விசுவாசித்து (மாற் 16:16), மனந்திரும்பி (அப். 2:38), அறிக்கையிட்டு (அப். 8:37), பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16) ஆவிக்குரிய விடுதலை பெற வேண்டும். **அடுத்து, நாம் மனதாரச் சத்தியத்தைப் பேசவேண்டும்.** இயேசுவின் பிரதான கட்டளை, அவருடைய சீடர்கள் சத்தியத்தைப் பேச வேண்டுமென்பதே (மத்.28:18–20). பழைய ஏற்பாட்டின் தானியேல் தீர்க்கன் **ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள் (தானி 12:3) என்கிறார். தன் வாழ்க்கையில் சத்தியம் அறிவித்த பவுல், இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது** என்கிறார் (2தீமோ 4:8). ✝

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| உதவிக்காரரே ஊழியஞ் செய்யுங்கள் | Louis Rushmore | ... 1 |
| கூடாரத்தில் யார்? பர்வதத்தில் யார்? | E.Z.S. Rajanayagam | ... 6 |
| கிறிஸ்தவரும் தேவதூதர்களும் | Jerry Bates | ... 13 |
| கால்வின் கொள்கையின் உபதேசங்கள் | J.C. Choate | ... 17 |
| ஏன் முடியவில்லை? | E.Z.Selvanayagam | ... 22 |
| ஆண்டவர் இயேசுவைப் ... | P.C. Philemon Rajah | ... 25 |
| அவருடைய சந்நிதானத்தில் .... | Benny Martin | ... 29 |
| உண்மையோடு தொழுது ... | B. Arjunan | ... 32 |
| உறுதியான அஸ்திபாரத்தில் ... | | ... 35 |


## தேவன் – God


| | | |
|---|---|---|
| கொஞ்சம் சுவாரஸ்யமான தகவல் ... | | ... 36 |
| தேவன் துன்பத்தைக் கூட ... | Gary C.Hampton | ... 38 |
| சிருஷ்டிகராகிய கிறிஸ்து ... | Keitn Kasarjian | ... 40 |
| தேவனைக் குறித்து மனம்சலித்துப்... | Therman Hodge | ... 41 |


## சாட்சியங்கள் – Evidences


| | | |
|---|---|---|
| உடனடி மீன் | David Everson | ... 43 |
| பூமி என்றென்றும் நிலைத்திருக்குமா? | David Everson | ... 45 |
| தகப்பனே... | | ... 47 |


## தேவனுடைய வார்த்தை The Word of God


| | | |
|---|---|---|
| தேவனுடைய வார்த்தை மீதான நம் ... | Dan R.Owen | ... 48 |
| தேவனுடைய வார்த்தை | Cecil may. Jr | ... 51 |
| வேதாகமத்தின்படி ஏன் வாழ வேண்டும்? | Larry Murdock | ... 54 |


## இரட்சிப்பு – Salvation


| | | |
|---|---|---|
| நியாயத்தீர்ப்பில் ஐந்து வகையான ... | E. Clande Gardnet | ... 61 |
| தேவனால் கோணலாகக்கபப்பபட்டது | Denny Petrillo | ... 67 |
| நியாயத்தீர்ப்பில் இருக்காத சில காரியங்கள் | Denny Petrillo | ... 69 |

சபை – The Church

| | | |
|---|---|---|
| கொரிந்து பட்டணத்து சபை | **Dennis Gulledge** | ...73 |
| சபை என்பது என்ன? | **Dwight Inqna** | ...75 |
| 21 ஆம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டு... | **Robert Johnson** | ...77 |
| ஜெப ஆலோசனைகள் | | ...79 |
| பணக்கார முட்டாள் | **Randall Evans** | ...80 |

வாழ்வதற்கான உபதேசம் – Doctrine to Live by

| | | |
|---|---|---|
| உயிர்த்தெழுதலை உணர்ந்து வாழ்தல் | **Royce Frederick** | ...82 |
| மரித்தவர்கள் எங்கே இருக்கிறார்கள்? | | ...86 |

செயலில் கிறிஸ்தவம் – Christianity in Action

| | | |
|---|---|---|
| போர்ச்சேவகன் விளையாட்டு வீரன் ... | **Glenn Colley** | ...87 |
| கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ... | **Dale Grisson** | ...89 |
| தலைமைத்துவத்துக்கு அழைக்கப்பட்டிருக் ... | **Claude Thompson** | ... 91 |

ஆராதனை – Worship

| | | |
|---|---|---|
| ஆராதனையின் குறிக்கோள் | **Louis Rushmore** | ... 94 |
| நீங்கள் எங்கே இருப்பீர்கள்? | **Dalton Krey** | ... 95 |
| ஆராதனையை மேம்படுத்த பத்து... | | ... 96 |

கிறிஸ்தவ இல்லம் – The Christian Home

| | | |
|---|---|---|
| கிறிஸ்துவுக்காக தகுதியாய் ... | **Martha Lynn Rushmore** | ... 98 |

அனுதின கிறிஸ்தவ ஜீவியம் – Daliy Christian Living

| | | |
|---|---|---|
| சீஷன் என்பவன் யார்? | **Donny Weimar** | ...101 |
| பரலோகம் போவதை சாத்தியமாக்குதல் | **Wes Mc Adams** | ...103 |
| அதிக மேன்மையான வழி | | ... 107 |



# கிறிஸ்தவரும், தேவதூதர்களும்

## The Christian And Angels

*Jerry Bates*

இன்றைய நவநாகரீக உலகில், தேவ தூதர்களைக்குறித்து அதிகமாகப் பேசுவதை நாம் கேட்கிறோம். அப்படிப்பட்ட பேச்சுகள் உண்மையாகவே வேத ஆதாரமற்றவைகளாகவே இருக்கின்றன. இதன் காரணங்களுள் ஒன்று என்னவென்றால் வேதாகமத்தில் தேவதூதர்களைப் பற்றி குறைவாகத்தான் சொல்லப்பட்டிருக்கின்றது. சபையிலும் கூட தேவதூதர்களைப் பற்றி குறைவான பிரசங்கங் களையே நாம் கேட்டிருக்கிறோம். தேவதூதர்களைப் பற்றிய கீழ்காணும் கருத்துக்களை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

முதலாவதாக, தேவதூதர்கள் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, அவர்கள் தேவனைப் போன்றவர்களல்ல. நீர் வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும் உண்டாக்கினீர் [நெகேமியா 9:6]. வான சேனையில் தேவ தூதர்களும் உள்ளடக்கம். அவ்விதத்தில் பார்த்தால் தேவதூதர்கள் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகள் என்பது தெளிவாகிறது. மேலும், தேவன் பூமியை அஸ்திபாரப்படுத்துகிற போது, தேவ புத்திரர் எல்லாரும் கெம்பீரித்தார்களே என்று [யோபு 38:4 –7] வசனங்களில் வாசிக்கிறோம். இங்கே தேவபுத்திரர் என்பது தேவதூதர்களைத்தான் குறிக்க வேண்டும். ஏனென்றால், பூமியும், வான சேனைகளும் உண்டாக்கப்பட்ட போது [மனிதன் உட்பட] தேவ தூதர்கள் இருந்துள்ளார். தேவதூதர்கள் தேவன் என்ன வேலையைச் சொல்கிறாரோ அதைச் செய்ய வல்லமை பெற்ற வேலையாட்களாக இருக்கிறார்கள். தானியேல் சிங்ககெபியிலே தூக்கி எறியப்பட்ட போது தேவன் தூதர்களை அனுப்பி சிங்கங்களின் வாயைக்கட்டிப் போட்டார் [தானியேல் 6:22] ல் தேவ தூதர்கள் மகிமைப்படுத்தப்பட்ட ஜீவராசிகளல்ல. உண்மையுள்ள தேவனுடைய பிள்ளைகள் மரிக்கும் போது அவர்கள் தேவதூதர்களாகிறார்கள் என்பதற்கு வேதாகமத்தில் எந்த ஒரு ஆதாரமுமில்லை.

தேவதூதர்களின் எண்ணிக்கை ஏராளமாக இருக்கிறது. நம் இயேசு கிறிஸ்து (மத்தேயு 26:53) நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரெண்டு லேகியோனுக்கும் அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? என்றார். லேகியோன் என்பது பழங்கால ரோம ராணுவத்தில் 6000 படை வீரர்களை குறிக்கும் வார்த்தையாகும். எனவே, இங்கே அந்த எண்ணிக்கை என்பது சொல் அர்த்த ரீதியாக 72000 தேவ தூதர்களை குறிக்கும். இங்கே எண்ணிக்கையை சொல், அர்த்த ரீதியாக எடுத்துக் கொள்ளயைக்கூடாது. ஆனால்,ஏராளமான தேவ தூதர்கள் தேவனுடைய சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்கள்.

இதனால் தான் எபிரெய எழுத்தாளர் கிறிஸ்தவர்கள் சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகர மாகிய பரம எருசலேமினிடத் திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கும் வந்து சேர்ந்தார்கள் என்று எழுதுகிறார் (எபிரெயர் 12:22). யோவான் தன்னுடைய தரிசனத்தில் சிங் காசனத்தைச் சுற்றி சூழ்ந்திருந்த



தேவ தூதர்களின் எண்ணிக்கையைப் பற்றிச் சொல்லும் போது பதினாயிரம் பதினாயிரமாகவும் ஆயிரமாயிரமாகவுமிருந்தது என்று சொல்கிறார் ( வெளிப்படுத்தின விசேஷம் 5:11 ). தேவதூதர்கள் மனிதர்களை விடமேலானவர்கள் என்றே தெரிகிறது. ஏனென்றால், எபிரெய ஆசிரியர் அவனை தேவ தூதரிலும் சற்றுச் சிறியவனார்க்கினீர் என்று சொல்கிறார் (எபிரெயர் 2:7).

தேவ தூதர்களைப் பற்றி மக்களிடத்தில் காணப்படும் தவறான எண்ணங்களுள் ஒன்று தூதர்கள் பெண்களாக இருந்து சிறகுகளை அடித்து பறப்பதாக எண்ணுகிறார்கள். பொதுவாகவே, பெண்கள், ஆண்களை விட அன்பாகவும் இரக்கமுள்ளவர்களாகவும் இருப்பதால் இப்படி ஒரு எண்ணம் பலரிடம் காணப்படலாம். உண்மையில் தேவதூதர்கள் ஆவிகளாயிருக்கிறபடியால் அவர்களை ஆணினம் என்றோ, பெண்ணினம் என்றோ பிரிக்க முடியாது. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதல் சம்மந்தமாக (மத்தேயு 22:30)ல் உயிர்த்தெழுதலில் கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவ தூதரைப்போல் இருப்பார்கள்.

தேவ தூதர்களைப் பற்றி, மக்களிடத்தில் காணப்படும் தவறான எண்ணம் அவர்கள் எப்போதும் நன்மையை மட்டுமே செய்வார்கள் என்பதாயிருக்கிறது. ஆனால், அதுவும் உண்மையில்லை. தங்களுடைய ஆதிமேன்மையை காத்துக்கொள்ளாத, தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும் மகா நாளின் நியாயந் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் தேவன் அடைத்து வைத்திருக்கிறார். சாத்தானுக்கும், தூதர்கள் இருப்பதாகவும் நித்திய அக்கினி அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிறதாகவும் பார்க்கிறோம் (மத்தேயு 25:41). பழைய ஏற் பாட்டில் கீழ்ப்படியாதவர்களை தேவ தூதர்கள் தண்டிபப்பதை பல உதாரணங்களில் பார்க்க முடியும் (II சாமுவேல் 24:15-16;II இராஜாக்கள் 19:35; எண்ணாகமம் 25:9; ). அவர்கள் வல்லமை பொருந்தியவர்களாக காணப்பட்டாலும் கூட அவர்கள் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். (II சாமுவேல் 24:16) ல் **தேவ தூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதன் மேல் நீட்டின போது கர்த்தர் அந்தத் தீங்கிற்கு மனஸ்தாபப்பட்டு தூதனை நோக்கி** போதும், இப்போது உன் கையை நிறுத்து என்றார். பவுல் (II தெசலோனிக்கேயர் 1:78) வசனங்களில் தேவனை அறியாதவர்களு க்கும், நம் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் நித்திய ஆக்கினியை செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினி யோடும் வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும் என்று சொல்கிறார்.

தேவதூதர்களுக்கு இழந்த போன ஆத்துமாக்கள் மீது அன்பு உண்டு. மனம் திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாக சந்தோஷமுண்டாயிருக்கிறது (லூக்கா 55:10) இயேசு கிறிஸ்து பிறந்த போது பரமசேனையின் திரள் உன்னதத் திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர், மேல் பிரியமும்உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள் ( லூக்கா 2:14) நிச்சயயமாகவே, தேவனுடைய பிள்ளைகள் மரிக்கும் போது தேவ தூதர்கள் சேவை செய்கிறார்கள். (லுக்கா 6:22)ல் லாசரு மரித்த போது தேவ தூதர்கள் தான் அவரை ஆபிரகாமின் மடியினிடத்தில் கொண்டு போனார்கள்.

தேவதூதர்களின் செயல்பாடுகளும், கடமைகளும் என்ன? ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் ஒரு காவல் தூதன் உண்டு என்று பலர் தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். தேவதூதர்களின் நோக்கம் கிறிஸ்தவர்களின் உபத்திரவங்களில் அவர்களுக்கு உதவுவது என்று சிலர் சொல்கிறார்கள். அது உண்மையாக இருக்குமானால் கிறிஸ்தவர்கள் பெரும்பாலான வேளைகளில் பாடுகள், உபத்திர வங்கள், விபத்துக்கள் போன்றவைகளை சந்திக்கிறார்களே. அப்போது,

தேவ தூதர்கள் வந்து உதவ வேண்டுமே எனவே இது உண்மையாக இருக்க முடியாது. தேவதூதர்கள் கிறிஸ்தவர்களுக்கு ஏதோ ஒருவிதத்தில் பணிவிடை செய்கிறார்கள். ஆனால், அது எந்த விதமான சேவை என்று நிச்சயமாக நம்மால் சொல்லமுடியாது. நம் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையின் பல கட்டங்களில் தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ் செய்திருக்கிறார்கள் [உதாரணமாக சோதனை மத்தேயு 4:11; கெத்சமனே தோட்டத்தில் [லூக்கா 22:43]. எபிரெய எழுத்தாளர் 1:14ல் இவ்விதமாக எழுதுகிறார். இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தம் ஊழியஞ்செய்யும்படிக்கு அவர் களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறவர் களல்லவா?. மேலும், இயேசு கிறிஸ்து சிறுபிள்ளைகளைப் பற்றிச் சொல்லும் போது இந்தச்சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக் கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் [மத்தேயு 18:10] என்று சொல்கிறார். இவ்வசனப்பகுதியெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, ஏதோ ஒரு விதத்தில் பணிவிடை செய்கிறார்கள் என்று நம்மால் சொல்ல முடியும். ஆனால், அது இவ்விதமான சேவை தான் என்று நம்மால் உறுதியாகச் சொல்ல முடியாது.

தேவதூதர்கள் தேவனுக்கு முன்பாக நின்று அவரை ஆராதிக் கிறார்கள். ஆனாலும், அவர்கள் ஆராதிக்கப்படத்தக்கவர்கள் அல்ல. யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன் நான் கேட்டுக் கண்டபோது, இவைகளைக் எனக்கு காண்பித்த தூதனை வணங்கும் படி அவன் பாதத்தில் விழுந்தேன். அதற்கு அந்தத் தூதன் நீ இப்படிச் செய்யாதபடிக்குப்பார் நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுது கொள் என்றான் [வெளிப்படுத்தின விசேஷம் 22:9].

ஆகவே, தேவதூதர்கள் எத்தனை வல்லமை பொருந்தியவர் களாக இருந்தாலும் சரி, அவர்களும் நம்மைப் போல் தேவனுக்கு பணி விடை செய்கிறவர்கள்தான். தேவன் மாத்திரமே ஆராதிக்கப்படத் தக்கவர்.

நாம் தேவதூதர்களைக் குறித்து அதிகமாகக் கேள்விப்பட்டு ஈர்க்கப்பட்டிருக்கலாம். ஆனாலும், தேவனுடைய சேவையில் கவனச்சிதறல் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் ஒரு போதும் தேவ தூதர்களைத் வணங்குவதற்கோ, அவர்களை தேவனுக்கு சமமாக வைப்பதற்கோ நம்மை நாம் அனுமதிக்கக்கூடாது. அந்த சோதனையில் விழுந்துவிடவும் கூடாது. இருந்த போதிலும், பாவஞ் செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல் அந்தகாரச் சங்கிலி களினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப் பட்டவர்களாக ஒப்புக்கொடுத்திருக்கும் போது [II பேதுரு 2:4] அவரு டைய சித்தத்திற்கு விரோதமாக கலகம் செய்தால் தேவன் நம்மை எவ்வளவாக தண்டிப்பார்?



1932—2008

# கால்வின் கொள்கையின் உபதேசங்கள்

## The Doctrines Of Calvinism

## *J.C. Choate*

**ஜா**ன் கால்வின் எனும் பேர் கொண்ட மனிதன் பிரான்ஸ் நாட்டிலுள்ள "Noyon" என்னும் இடத்தில், 1509 ஆம் ஆண்டில் கத்தோலிக்கப் பெற்றோர்க்குப் பிறந்தார். அவர் முதிர்ச்சி அடைந்தபோது அந்நாட்களில், ஐரோப்பிய கண்டத்தில் நிலவிய உபதேசங்களுக்கு எதிராக இரட்சிப்பு சம்மந்தமாக தன் சொந்த கொள்கைகளை உருவாக்க கத்தோலிக்க மார்க்கத்திலிருந்து வெளியேறினார். கால்வின் இரட்சிப்பு சம்மந்தமாக கொள்கைகளை உருவாக்கினாலும், தனியாக அவர் ஓர் அமைப்பை ஏற்படுத்த வில்லை. ஆனால், அவருடைய உபதேசங்களை ஏற்றுக்கொண்ட மக்கள் தங்களைக் **கால்வின் கொள்கைக்காரர்கள்** என்று அழைத்துக் கொண்டார்கள். இன்று பல மார்க்கப் பிரிவனை கூட்டங்கள் கால்வினின் உபதேசங்களை தங்கள் விசுவாசப் பிரமாணத்தில் இணைத்திருக் கிறார்கள்.



கால்வினின் அடிப் படை நம்பிக்கை முறை யை ஆங்கிலத்தில் "*TULIP*" என்று அழைக் கிறார்கள். இந்த *TULIP* என்பது எதைக் குறிக் கிறது. இந்த உபதேச த்தை தேவனுடைய வார்த்தையோடு எப்படி நாம் ஒப்பிட முடியும்?

*John Calvin* இந்த *Tulip* என்பது *Total Depravity, Unconditional Election, Limited Grace, Irresistible Grace, Perseverence of the Saints* என்று விரிவாக்கம் செய்யப்படுகிறது. இப்போது நாம் இதை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

## Total depravity (ஓட்டு மொத்த ஒழுக்கக்கேடு)

இது ஒட்டு மொத்த மனிதர்களும் பிறக்கும்போதே ஒழுக்கக் கேட்டில் அல்லது பாவத்தில் பிறக்கிறார்கள் என்று கூறுகிறது. அதாவது, ஒட்டுமொத்த மனித இனமும், ஆதாமின் பாவத்தை தன்னகத்தே கொண்டிருக்கிறார்கள். எனவே, மனித இனத்தால் தேவனை தங்கள் விருப்பப்படி தெரிந்து கொள்ள முடியாது. இரட்சிக்கப்படப்போகும் மனிதர்களை தேவனால்தான் தெரிந்து கொள்ள முடியும் என்று இந்த உபதேசம் கூறுகிறது.

**ஆனால் தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது?**

பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும், குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரம த்தைச் சுமப்பதில்லை நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும். துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும் [எசேக்கியேல் 18:20] என்று கூறப்பட்டுள்ளது.

**நீங்கள் மனந்திரும்பிப் சிறு பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்த பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான், இப்படிப் பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள் கிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான் [மத்தேயு 18:3-5].**

**அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும் [யாக்கோபு 1:14,15].**

**சங்கீதம் 51:5 ல் நாம் வாசிக்கும் போது என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந் தரித்தாள் என்று வாக்கியமானது ஒரு குழந்தை பாவத்தால் பிறக்கிறது என்று பலரால் தவறாக போதிக்கப்படுகிறது. ஆனால், இங்கே சங்கீதக்காரன் தன்னுடைய பாவத்தைப்பற்றி பேசவில்லை. மாறாக, தன்னுடைய தாயின் பாவத்தைப் பற்றி பேசுகிறார்.**

**நிபந்தனையற்ற தெரிந்து கொள்ளுதல்**

இதன் பொருள் இவ்வுலகில் யாரெல்லாம் இரட்சிக்கப்பட வேண்டும், யாரெல்லாம் இழந்து போக வேண்டுமென்று தேவன் முன்குறித்து விடுவதாகவும் இந்தக் காரியத்தில் ஒரு தனி நபருக்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படுவதில்லை என்று இந்த கொள்கை போதிக்கிறது. அதாவது, சிலர் உலகத் தோற்றத்துக்கு முன்பாகவே தேவனால் இரட்சிக்கப்படுவதற்கோ அல்லது இழந்து போவதற்கோ முன்குறிக்கப்படுவதாகவும், இதை யாராலும் மாற்ற முடியாது என்றும் தவறாகப் போதிக்கிறது.

**தேவனுடைய வார்த்தை:**

**பின்பு, அவர் அவர்களை நோக்கி, நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்** (மாற்கு 16:15,16).

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்** (மத்தேயு 11:28) **என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்: அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்** (ஏசாயா 1:18).

ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17).

**நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப் புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்** (ரோமர் 10:10)

**நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்குப் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்து மிருக்கிறேன்.** (II தீமோத்தேயு 1:12).

**நான் ஜீவனையும், மரணத்தையும், ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும், பூமியையும் இன்று சாட்சியாக வைக்கிறேன். ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு நீ ஜீவனைத் தெரிந்து கொள்** (உபாகமம் 30:19).

தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுவதற்கும், தேவனுடைய அழைப்புக்கும் பதிலளிக்க, மனிதர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட வில்லையென்றால் தம்மிடம் வர எல்லோருக்கும் அழைப்பு விடுக்கும் தேவன் வஞ்சகமாக அல்லவா செயல்படுகிறார்.

**வரையறுக்கப்பட்ட கிருபை**

இக்கொள்கை கிறிஸ்து யாரையெல்லாம் முன் குறித்தாரோ அவர்கள் தான் இரட்சிக்கப்படுவார்கள், அவர்களுக்காகத்தான் கிறிஸ்து மரித்தார் என்று போதிக்கிறது.

**தேவனுடைய வார்த்தை :**

நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரா பலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் [I யோவான் 2:2]

எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் [I தீமோத்தேயு 2:4].

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு , அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகதில் அன்பு கூர்ந்தார். [யோவான் 3:16].

வேத வாக்கியங்கள் திரும்ப திரும்ப தம்மிடத்தில் வருகிற எல்லோருக்கும் பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக கிறிஸ்துவே இருக்கிறார் என்று சொல்கிறது.

**எவனோ** எனும் சொல் புதிய ஏற்பாட்டில் ஏறத்தாழ100 முறைகள் வருகிறது. **எவனோ,** எந்த வசனங்களிலெல்லாம் இடம் பெற்றிருக்கிறதோ அங்கெல்லாம் அது கால்வினின் இந்த **"TULIP"** கொள்கையின் தவறை தைரியமாகவும், உரத்த சத்தமாகவும் சுட்டிக்காட்டுகிறது.

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் [அப்போஸ்தலர் 2:21].

அவரை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசி களெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சி கொடுக்கிறார்கள் என்றான். [அப்:10:43].

இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலை யையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப் பவன் எவனோ, அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிற படியாயிற்று [ரோம் 9:33]

ஆதலால், கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். [ரோமர் : 10:13]

பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் [I யோவான்: 3:4].

இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்; பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூருகிறான் [I யோவான் :5:1].

**எதிர்க்க முடியாத கிருபை:**

தேவனுடைய முன் குறிப்பினால், இரட்சிக்கப்படப்போகிறவர்களால் தேவனுடைய கிருபையை வெற்றிகரமாக எதிர்க்க முடியாது. அதாவது, இரட்சிக்கப்படும்படி தேவனால் முன்குறிக்கப்பட்டவர்களால் தேவனிடத்தில் வராமல் இருக்கவே முடியாது.

**தேவனுடைய வார்த்தை**

இஸ்ரவேலரைக் குறித்தோ, கீழ்ப்படியாதவர்களும் எதிர்த்துப் பேசுகிறவர்ளுமாயிருக்கிற ஜனங்களிடத்திற்கு நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன் [ரோமர் 10:21]. வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்து சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை [யோவான் 5:39,40].

ஜீவன் உண்டாகும்படி தம்மிடத்தில் வராதவர்கள் மீது தேவன் துக்கமாயிருக்கிறார்.

**பரிசுத்தவான்களின் நிலைத்திருக்கும் தன்மை**

தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களால் இழந்து போகவே முடியாது. ஒருவர் விசுவாசத்தை விட்டு விலகிப் போனால், அவர் ஆரம்பத்தில் இரட்சிக்கப்படவில்லை.

**தேவனுடைய வார்த்தை**

கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பினவர்கள் மறுபடியும். அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலமையிலும் கேடுள்ளதாயிருக்கும் [II பேதுரு 2:20].

தேவனுடைய வார்த்தை மாத்திரமே உண்மையாயிருந்து, மனுஷருடைய உபதேசங்களை மறுக்கட்டும்.

# ஏன் முடியவில்லை?

## *Why not able to do?*

### *E.Z.Selvanayagam*

**எ**த்தனையோ அருளுரைகள் ஆற்றினேன், பயனில்லை. எத்தனையோ, எத்தனையோ அறிவுரைகள் கூறினேன்; கேட்பாரில்லை. எத்தனையோ முயற்சி தோல்வி தான். நான் கண்ட பலன். எத்தனை நற்பணிகள் செய்தேன் எதுவும் எடுபடவில்லை.

அப்போஸ்தலர் காலத்தில் பனிரெண்டுக்கும் குறைவான எண்ணிக்கையுள்ளவர்கள் ஐம்பது ஆண்டு காலங்களுக்குள் அன்றைக்குப் பரவி ஸ்தாபித்திருந்த உரோமைப் பேரரசு முழுவதையும் சுவிசேஷத்தால் நிரப்பி விட்டு, இனிப் போவதற்கு இடம் காணோமே என்று அங்கலாய்த்தார்கள். ரோமர் 15 : 23 அப்பொழுது இன்றைக்கு இருக்கும் நவீன வசதிகளில் பல இல்லை. ஒலிபெருக்கிகளும், வானொலிகளும், தொலைக்காட்சிப் பெட்டிகளும், பறக்கும் விமானங்களும் கிடையாது.

இன்றைக்கு இவ்வளவு வசதிகளையும் கைவசம் வைத்துக் கொண்டு ஆயிரத்தெட்டு அமைப்புகள் சுமார் முன்னூறு ஆண்டுகள் பாடுபட்டு இந்தியாவில் மூன்று விழுக்காடு மக்களைக் கூட கிறிஸ்துவுக்குள் கொண்டுவர முடியவில்லையே.

ஏன் கூடாமற் போயிற்று? முறை தவறா? முயற்சி குறைவா? பக்திக் குறைவா? சத்தியத்தின் வலிமை குறைந்து விட்டதா? பயிற்சி போதாதா? ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இரண்டு முக்கியமான காரியங்கள் தெளிவாகத் தெரிகின்றன. 1. அர்ப்பணிப்பு உணர்வும், ஐக்கிய உணர்வும் இல்லாத ஊழியர்கள் 2. சத்தியத்தை முறையாகப் பகுத்துப் போதிக்கும் அளவுக்கு வேத அறிவு இல்லாமை.

நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி, ஒருவரையொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்' (கலா 5:15) என்று அன்றே சொல்லி வைத்தார் பவுல். அது இன்று கனகச்சிதமாய் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. ஒரே ஆவியினால் உந்தப்பட்டவர்கள் இவ்வளவு முரண்பாடாக எப்படிப் பேசமுடிகிறது? என்று மக்கள் வியப்படை கிறார்கள். ஆனால், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் அதை பற்றிக் கவலைப்பட்டதாகக் காணோம். இந்தக் கட்டுரை அச்சேறி வெளியே வருவதற்குள் ஒரு புதிய அமைப்பு உதயமானால் கூட ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கிறிஸ்தவர்களே! முதலில் ஒன்றுபடுங்கள்.

இரண்டாவது, உங்களைக் கடவுளுக்கு அர்ப்பணியுங்கள். உங்கள் தேவன் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடத்தைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தராயிருங்கள் [1 பேது 1: 15] நம்மை பரிசுத்தம் பண்ணுதல் என்னும் போது ஒருவித போலித்தனமான மார்க்க வாழ்க்கை வாழ்வதல்ல, கடவுளே நம்மைத் தமக்கேற்ப மாற்றும்படி நம்மை ஒப்புக்கொடுத்து விடுவதாகும். நம்முடைய மீறுதல்கள் நமக்கே தெரியாது. தாவீது அரசன் நாத்தான் தீர்க்கதரிசி சொன்ன கற்பனைக் கதையில் அநியாயமாய் நடந்து கொண்ட மனிதனைக் கண்டு கோபமடைந்தான். ஆனால், அதே போன்ற தவறொன்றைத் தான் செய்து கொண்டிருந்ததை நாத்தான் தீர்க்கதரிசி சொல்லும்வரையிலும் புரிந்துகொள்ளவில்லை. ஆகவே, 'கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். வேதனை உண்டாக்கும் வழி என்னில் உண்டோ? எனப் பார்த்து நித்திய வழியில் என்னை நடத்தும்' என்று சொல்லுவோமாக [சங். 139 : 1; 24.] அப்பொழுது, நம்மைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரை நாம் சந்திப்போம் [லேவி 21:23]. ஏசாயா வைப் போன்று அனுதினமும் நம்மை ஜெபம் என்னும் பலிபீடத்தில் வைக்கும் போது அவர் தமது தூய்மை என்னும் அக்கினித் தழலால் நம்மை சுத்தமாக்குவார் [ஏசாயா 6:6,7]

அடுத்து, நமக்கு போதிய கல்வி அறிவும், வேத அறிவும் இருக்க வேண்டும். மருத்துவம், கல்வி, தொழில், பாட்டு, நடனம் என்று எல்லா வற்றிற்கும் முறையான கல்வியும், பயிற்சியும் இருக்கின்றன. ஆனால், திருமறையைத் தூக்கிக் கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்கிறேன் என்று புறப்படுகிறவர்கள் பயிற்சி, கல்வித் தகுதி ஆகியவைகளைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. இது தேவனையும், அவருடைய வார்த்தையையும், அவமதிக்கும் செயலாகும்.

என்ன ஐயா, பெரிய படிப்பு! இயேசுகிறிஸ்து மீன் பிடிக்கிறவர் களையும், ஆயக்காரர்களையும், பாமரர்களையும் தானே ஊழியத்துக்காக தெரிந்தெடுத்துக் கொண்டார் என்று எங்கேயோ முணுமுணுக்கிற சத்தம் காதில் விழுகிறது. ஐயா, தயவு செய்து அப் 4: 13-ஐ வாசியுங்கள். அவர்கள் படிப்பறியாத பேதைகளாக ஒரு காலத்தில் இருந்தது மெய்தான். ஆனால், இயேசுகிறிஸ்து அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் கொடுத்த கடுமையான பயிற்சியின் காரணமாக மெத்தப் படித்திருக்கிறோம் என்று எண்ணி கொள்ளக் கூடிய கர்வம் கொண்டிருந்த அந்த கும்பலே வியந்து ஒப்புக் கெள்ளுமளவு தெளிவு பெற்றிருந்தார்கள் என்பதை நாம் மறந்து விடலாமா?

இயேசு அவர்களுக்குச் சகல காரியங்களிலும் பயிற்சி கொடுத்திருந்தார். ஜெபம் பண்ணக் கற்றுக் கொடுத்திருந்தார் யாருக்கு எப்படி பதில் பேச வேண்டும் என்று கற்றுக் கொடுத்திருந்தார். வீடு சந்திக்கக் கற்றுக்கொடுத்திருந்தார். விருந்து வீட்டிற்கோ திருமண வீட்டிற்கோ சென்றால் எங்கே தங்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்திருந்தார்.

நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன். **என் நுகத்தை என் உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு** என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். ஆனால், நாமோ அவருடைய உபதேசங்களை விட்டு விட்டு மனிதனுடைய ஞானத்தால் கறைப்படுத்தி திரித்தும், சேர்த்தும், போதிக்கிறோம். சுவிசேஷமே இரட்சிப்புக்கு தேவ பெலன் என்ற நிலை மாறி அஞ்ஞானிகள் கூட நம்ப மறுத்துச் செய்கிற மூட நம்பிக்கைகளுக்குத் தீனி போட்டு புது மெருகு போடுகிறோம். இதன் மூலம் இயேசுவின் பெயருக்கு எவ்வளவு கேவலத்தை உண்டு பண்ணுகிறோம்!.

இவ்வளவு காரியங்களையும் நம்முடைய மனதும், மாமிசம் விரும்பினபடி செய்துவிட்டு முதலாம் நூற்றாண்டில் அப்போஸ்தலர் களால் பெற்ற வெற்றி நமக்குக் கிட்டவில்லையே என்று புலம்பினால் எப்படி முடியும்? ஆகவே, முதலாம் நூற்றாண்டைப் போல் அப்போஸ்தலர்களுடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் உறுதியாய்த் தரித்திருப்போம், வெற்றி பெறுவோம். ✝

---

## இன்றைய தேவை!

**சிரிப்பு பிரசங்கமல்ல**
**சீர்படுத்தும் பிரசங்கமே**
**பயமுறுத்தும் பிரசங்கமல்ல**
**பயபக்தி உண்டாக்கும் பிரசங்கமே**
**வசீகரிக்கும் பிரசங்கமல்ல**
**வாழ்வை வளமாக்கும் பிரசங்கமே**
**ஆசீர்வாதமான பிரசங்கமல்ல**
**ஆரோக்கியமான பிரசங்கமே**
**உடைக்கும் பிரசங்கமல்ல**
**உருவாக்கும் பிரசங்கமே.**

# ஆண்டவர் இயேசுவைப் போல ...

## Imitating Jesus

### *P.C.* பிலமோன் ராஜா

**யோ**வான் 13:15 நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் என்று நமது ஆண்டவர் சீடர்களிடம் சொன்னார். நாம் அவர் நடந்ததுபோலவே, அதாவது அவரைப்போலவே வாழும்படியாக நம்மை உற்சாகப் படுத்துகிறார். ஆகையால், நமது ஆண்டவர் இயேசு விடமிருந்து, நமக்கான, அதாவது நமது வாழ்விற்கான முன் மாதிரிகளை கற்றுக்கொள்வோம்.

**1. அன்பு செலுத்துவதில்....**

எபே 5:2 கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துவினுடைய அன்பு மெய்சிலிர்க்க வைக்கின்றது. நமக்காக சிலுவையில் அவர் அடைந்த அகால மரணமும், அவர் சந்தித்த அவமானங்களும் உண்மையிலேயே மகா கொடியது. ஆயினும், அவர் நமக்காக பட்ட பாடுகளையும், அவமானங்களையும், வலிகளையும் குறித்து வருத்தப்படாமல், அதினால் நாம் அடையப்போகின்ற நித்தியமான மகிழ்ச்சியை நினைத்து மகிழக் கூடியவராக இருந்தார். என்ன ஒரு மேன்மையான அன்பு! எபி 12:2 அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

ஆண்டவர், தான் அன்பு செலுத்திய யாரும் அந்த அன்பை பெற தகுதியற்றவர்களாகவும், மறுதலிக்கிறவர்களாகவும், ஆபத்தில் விட்டுவிட்டு ஓடினவர்களாகவும் இருந்தபோதும், அவர் தன்னுடைய அன்பின் குணத்தை மாற்றிக்கொள்ளவில்லை. அவர்கள் இவ்வாறு செய்வார்கள் என தெரிந்தும், அவரால் எப்படி அன்பு கூர முடிந்தது என்பது நமக்கு ஆச்சரியமாகவே இருக்கின்றது. ஒருவர் சரியில்லை என தெரிந்தால், அவரை நமது அன்பின் எல்லையைவிட்டே துரத்திவிடுவதுதான் நமது இயல்பு. ஆனால் ஆண்டவர் இயேசு, துவக்கத்தில் எப்படி அன்புகூர்ந்தாரோ அப்படியே முடிவு பரியந்தம் அன்புகூர்ந்தார் (யோவான் 13:1). தூய்மையான உள்ளத்துடன், எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி அவர் அன்புகூருகிறவராக இருந்தார் என்பதை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

**உ. மனத்தாழ்மையில்....**

மத்தேயு 11:29 நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

ஆண்டவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள கூடிய அடுத்த பண்பு மனத்தாழ்மை. அவருடைய மனத்தாழ்மைக்கு ஒரு மிகச்சிறந்த உதாரணம் யோவான் 13ம் அதிகாரத்தில் நாம் படிக்கின்றோம். ஆண்டவர் சீடர்களின் கால்களை கழுவினார் மற்றும் துடைத்து தூய்மைப்படுத்தினார். இந்த அளவு தன்னை தாழ்மைப்படுத்த எப்படி அவரால் முடிந்தது? அவர் பெரியவராயிருந்தும், தன்னை பெரிதாக காண்பித்துக் கொள்ளவில்லை. அவர் பெருமைக்கு எதிரானவராக தாழ்மையுடன் இருந்தார். கொஞ்சம் அறிவு, படிப்பு, பணம், திறமை இருந்தால் தன்னை கடவுளுக்கு சமமாக பாவித்துக்கொள்ளும் அழிந்து போகும் தன்மையுடைய மனிதர்களின் மத்தியில், மனித உருவில் வந்த கடவுளாகிய அவர் தன்னை தாழ்த்தியது நம்மை பரவசமடையச் செய்கின்றது.

சிலர் தாழ்மையாக இருப்பது போல பேசுவார்கள். ஆனால், செயல்கள் ஒவ்வொன்றும் பேர் பிரஸ்தாபத்திற்காக, பெருமை மிக்கதாக இருக்கும். காரணம், அவர்கள் மனதில் தாழ்மை இல்லாததே! ஆனால் ஆண்டவர் , மனத்தாழ்மையின் மொத்த வடிவாக இருந்தார். பிலிப்பியர் 2:5–8 கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்.

மனத்தாழ்மை அவரை பிதாவிற்கு கீழ்படிவதற்கு நேராக வழிநடத்துவதாகவும் மற்றும் உன்னதமான உயர்வை பெற்றுத் தருவதாகவும் இருந்தது (பிலிப்பியர் 2:9–11).

**௩. மன்னிப்பதில்....**

லூக்கா 23:34 அப்பொழுது இயேசு; பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப் போட்டார்கள்.

ஆண்டவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய அடுத்த முன்மாதிரியான பண்பு, 'மன்னித்தல்.' மன்னித்தல் என்பது ஒரு மாபெரும் தெய்வீக பண்பு. ஆண்டவர் இயேசு தன்னை அவமான படுத்தியவர்களையும், தன்னை அடித்தவர்களையும், தனக்கு எதிராக பொய்சாட்சி சொன்னவர்களையும், தன்னை அழித்துவிட மனதில் வன்மம் கொண்டு செயல்பட்டவர்களையும் என எல்லோரையும் மன்னித்தார். அதோடு மாத்திரமல்ல, பரம பிதாவும் அவர்களை மன்னிக்கும் படியாக வேண்டுதலும் செய்தார். என்ன ஒரு மாண்புமிக்க பண்பு!

வேதாகமம், நம்மையும் அவரைப் போலவே மன்னிக்கிறவர்களாக இருக்க சொல்கின்றது. கொலேசெயர் 3:13, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவக்கொருவர் மன்னியுங்கள். ஆகையால் கோபம், வெறுப்பு, கசப்பு, வீணான வைராக்கியம், வன்மம், பொறாமை போன்ற குணங்களை மனதிலிருந்து தூக்கியெறிந்து, ஆண்டவரைப் போல மன்னிக்கிறவர்களாக இருப்போம். மன்னிப்பை சக மனிதர்களுக்கு விதைக்கிறவர்கள் (கொடுக்கிறவர்கள்), மன்னிப்பை இறைவனிடம் அறுப்பார்கள் (பெறுவார்கள்) என ஆண்டவர் சொன்னதை நினைவில் கொள்வோம். மத்தேயு 6:14 மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

**4. சுயத்தை வெறுப்பதில்...**

யோவான் 8:28 ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனை உயர்த்தின பின்பு, நானே அவரென்றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.

சுயத்தை வெறுத்தல்' என்பது, நாம் ஆண்டவரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய அடுத்த முன்மாதிரியாக உள்ளது. ஒருவன் என் பின்னே வர விரும்பினால், தன்னைத்தான் வெறுக்க வேண்டும் என ஆண்டவர் போதித்தார் (மாற்கு 8:34). முன்னதாக, அவ்வாறே அவர் வாழ்ந்து காண்பித்தவராக இருக்கிறார்.

ஆண்டவர் இயேசு சுயமாக எல்லாவற்றையும் செய்யும் அதிகாரமும், சுதந்திரமும், வல்லமையும் உடையவராக இருந்த போதும், ஒரு மனிதனாக இந்த பூமிக்கு சுயமாக வரவில்லை ; மாறாக, தேவனே அவரை அனுப்பினார். யோவா 8:42 இயேசு அவர்களை

நோக்கி: தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில், நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார்.

ஆண்டவருடைய பேச்சும் போதனையும் சுயமாக இருக்கவில்லை யோவான் 12:49, நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும், உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும், என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். மேலும், அவருடைய தீர்ப்புகளும் சுயமானதாக இருக்கவில்லை. யோவா 5:30, நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை ; நான் கேட்கிறபடியே நியாயந் தீர்க்கிறேன்; எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால், என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.

ஆண்டவர் ஒவ்வொன்றிலும் தன்னை முன்னிலைப்படுத்தாமல், பரலோக பிதாவையே முன்னிலைப்படுத்தி, அவருடைய நாமம் மகிமைப்படும்படி ஒவ்வொன்றையும் செய்தார் என்பது, அவர் சுயத்தை எவ்வளவு வெறுத்து செயல்பட்டார் என்பதை உணர்த்துகிறது. யோவா 7:18 சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மை யுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை.

சுயத்தை வெறுக்கின்றவர்களால் தான், தங்கள் வாழ்வில் கிறிஸ்துவை முழுமையாகப் பிரதிபலிக்க முடியும். நாம் நமக்கான அடையாளங்களை (கோபக்காரன், குடிகாரன், சண்டைக்காரி, வாயாடி, முரடன்) அழிக்கும் போது தான், கிறிஸ்துவை என்னால் வெளிப்படுத்த முடியும். அதை தான் யோவான் அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் (யோவான் 3:30) என்று சொன்னார்.

இறுதியாக, அன்பானவர்களே! நம் ஆண்டவரிடமிருந்து இன்னும் அநேக காரியங்களை முன்மாதிரிகளாக நாம் படிக்க இயலும். ஏனெனில், அவரே நமக்கு பூரணமான முன்மாதிரியாகவும், நம் வாழ்வில் போதுமானவராகவும் இருக்கின்றார். அவரது அடிச்சுவடுகளை பின்பற்றுகிற அடியார்களாக (1 பேதுரு 2:21), அவரையே கவனித்து பார்த்து (எபி 3:1), அவர் நடந்தபடியே நடக்கின்றவர்களாக (1 யோவான் 2:6) இருப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

# அவருடைய சந்நிதானத்தில் சமாதானம்

## Peace in His Presence

### Bro. பென்னி மார்ட்டின்

இன்றைய இயந்திரமயமான வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாக சமாதானம் இருந்தும் அது பலரிடம் இல்லாமலிருப்பது எல்லையில்லா தொல்லைக்கு வழிவகுத்துவிடுகிறது. இந்த சமாதான த்திற்காக உலகிலுள்ள ஏராளமானோர் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். உலகின் பல நாடுகளில் சமாதானம் எனும் வார்த்தையைத் தான் வாழ்த்துக்களாகவும், வந்தனங்களாகவும் பரிமாறிக்கொள்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஈராயிரம் வருடங்களுக்கு முன்பாக நம் இரட்ச கராகிய இயேசு கிறிஸ்து பிறந்த இஸ்ரவேல் தேசத்தில் ஒருவரை யொருவர் சந்திக்கும் போது சமாதானம் எனும் பொருள் கொண்ட **ஷாலோம்** என்னும் எபிரெய வார்த்தை பரவலாக பயன்படுத்தப் படுகிறது. காரியங்கள் அசுர வேகத்தில் அரங்கேறிவரும் இந்த அவசரமான உலகில் ஒரு சராசரி மனிதனுக்கு சமதானம் சரளமாக கிடைப்பதில்லை. உலகச் சந்தையில் சமாதானம் என்பது தடையில்லா மல் கிடைக்கும் கடைச்சரக்கல்ல. அப்படியிருந்திருந்தால் நுகர்வு கலாச்சாரத்தில் முகர்ந்து பார்ப்பதை எல்லாம் முயற்சிக்க நினைக்கும் செல்வச் செருக்குள்ளவர்களிடத்தில் இந்த சமாதானம் சம்ரிதியாக இருந்திருக்கும். இன்றைய தேதியில் உலகில் எத்தனை சதவீத மக்கள் சமாதானமாக இருக்கிறார்கள் என்று ஆய்வு மேற்கொண்டால், மிகவும் குறைவான சதவீதத்தினரே சமாதானமாக இருப்பதாகக் காண முடியும்.

நாம் பொதுவான அர்த்தத்தில் பார்த்தால் சமாதானம் என்பது சண்டை, சச்சரவு இல்லா நிலையையே குறிக்கிறது. ஆனால், இது உள்ளத்தின் ஆழத்தில் உருவாகும் ஓர் உன்னதமான உணர்வாகும். வாழ்க்கைப் புயலால் புரட்டி போடப்பட்டிருக்கும் பலர் புனரமைக்கப்பட புருவங்களை உயர்த்தி இந்த சமாதானத்திற்காகத்தான் சதா காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சமாதானம் என்பது தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காக கொடுக்கும் ஈவாகத்தான் இருக்கிறது. கிறிஸ்தவ மார்க்கத்துக்கும், சமாதானத்திற்கும் இடையே நெடிய நெருங்கிய தொடர்பு உண்டு. நம் தேவன் சமாதானத்தின் தேவனாக வேத வாக்கியங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறார் (I தெசலோனி க்கேயர் 5:23). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாதானப் பிரபு என்றழைக்கப்படுகிறார். பரிசுத்த ஆவியின் கனிகளுள் ஒன்றாக, இந்த சமாதானம் இருக்கிறது. இத்தனையிருந்தும் சமாதானத்தின் தேவனைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் சமாதானத்தை முழுமையான அளவில் அனுபவிக்கிறார்களா? அல்லது அரைகுறையாக அனுபவிக்கிறார்களா? சமாதானத்திற்கு

சவாலாக இருக்கும் காரியங்கள் என்னென்ன? போன்ற கேள்விக்கு வேதத்தின் வெளிச்சத்தில் விடை தேட விழைவோம்.

### I. சமாதானத்தின் ஆதாரம்

சமாதானம் என்பது அநேகரால் ஆசைப்பட்டும் அரிதாக கிடைக்கும் ஒன்றாக இருக்கிறபடியால் அதன் ஆதாரத்தை அறிவது அவசியமாயிருக்கிறது. சமாதானத்தின் ஆதாரம் மற்றும் அதை தாராளமாகத் தரக்கூடியவர் கிறிஸ்து தான். சமாதான பிரபுவாகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூலோகில் பிறந்த போது தேவ தூதர்கள் உன்னதத்தி லிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 2:14). இவ்வுலகில் சமாதானத்திற்கு பலவிதமான விளக்கமும், வியாக்கியானமும் கொடுக்கப்பட்டாலும் கூட உண்மை யான சமாதானம் அவரிட மிருந்தே ஊற்றெடுத்து வருகிறது. உலகத் தால் தர முடியாத உண்மையான சமாதானத்தை அவரால் மாத்திரமே தர முடியும். இன்று உலகில் பலர் பொய் சமாதானத்தை பொன்னையும், பொருளையும் கொடுத்து வாங்கிக் கொண்டிருக் கிறார்கள். அதன் காரணமாகவே சந்தையில் இறங்கிவிட்டார்கள் சாமியார்கள் பலர். நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து (யோவான் : 14:27) ல் சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக என்று சொன்னார்.

உலக சரித்திரத்தை கி.மு. மற்றும் கி.பி என்று இரண்டாகப் பிரித்த நம் இரட்சகர் சமாதானத்தையும் இரண்டாகப் பிரிக்கிறார். ஒன்று அவர் தருகிற சமாதானம், இன்னொன்று உலகம் தருகிற சமாதானம். இவ்வுலகின் பலர் வாழ்க்கையில் புதிய உயரங்களைத் தொட்டால், நினைத்த காரியங்கள் நிறைவேறினால் சண்டை சச்சரவற்ற நிலை நீடித்தால் தாங்கள் சமாதானமாக இருப்பதாக சொல்கிறார்கள். உள்ளபடி பார்த்தால் உலகம் தரும் சமாதானம் சமகால நிலவரப்படி சில நிமிடங்களுக்கே தாக்குப்பிடிக்கும் தன்மைக் கொண்டுள்ளது. பாடுகள் நிறைந்த பாழாய்ப்போன இவ்வுலகத்தால் சமாதானத்தை சம்பூரண மாகத் தரவே முடியாது, இவ்வுலகில் சமாதானத்தைத் தேடி அலைவது காற்றைப்பிடிக்க முயற்சிப்பது போன்றதாகும். மெய் சிலிர்க்க வைக்கும் மெய் சமாதானத்தின் ஆதாரமாக கிறிஸ்து இருப்பதால் நாம் கிறிஸ்துவுக்குள் வேரூன்றி, விசுவாசத்தில் விருத்தியடைந்து, அவரைச் சார்ந்து வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் பூரணமான சமாதானத்தை பெற்றுக் கொள்ள முடியும் கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவியின்படி நடந்து ஆவியின் கனிகளைக் கொடுப்பது நமக்கான கடமையாகவும், கட்டளையாகவும் இருக்கிறது. சமாதானம் என்பது ஆவியின் கனிகளுள் ஒன்று என்பதை மறந்துவிட வேண்டாம் (கலாத்தியர் :5:22,23).

நாம் ஆரம்பத்தில் ஷாலோம் என்னும் எபிரெய வார்த்தை சமாதானத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று பார்த்தோம். புதிய ஏற்பாட்டில் **ஐரின்** என்னும் கிரேக்க வார்த்தை சமாதானத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வார்த்தை தேவனிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் ஒரு கிறிஸ்தவனுடைய உள்ளான மனதில் நிலவும் சலனமற்ற நிலையை நினைவுபடுத்துகிறது. (சூழ்நிலைகள் எப்படிப்பட்டதாக இருந்தாலும்). இத்தகைய மகத்துவமுள்ள சமாதானம் எல்லோருக்கும் கிடைக்கிறதா என்றால் இல்லை (ஏசாயா 48:22)ல் துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லையென்று பார்க்கிறோம். பெரும்பாலான நேரங்களில் நம் சமாதானக் குலைச்சலுக்கு நம் பாவங்களே காரணங்களாக அமைந்து விடுகின்றன. நாம் மாம்சத்தின் கிரியைகளை வெளிப்படுத்தும் போது நட்பில், குடும்பத்தில், சபையில், சமுதாயத்தில் சமாதானக் குலைச்சலை ஏற்படுத்திவிடுகிறது (கலாத்தியர் 5:19-21). தேவனுடைய காரியங்களை நாம் முதன்மை படுத்த மறக்கும் போது, மறுக்கும்போது நாம் சமாதானத்தை தொலைத்துவிடுகிறோம். இவைகள் நம் சமாதானக் கனவை கலைத்து விடுகின்றன (லூக்கா 8:14). பல வேளைகளில் பண ஆசை சமாதானத்தை நோக்கிய நம் பயணத்தை பதம் பார்த்து விடுகிறது (I தீமோத்தேயு 6:10). பலர் போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் எனும் சமாதானத்திற்கான தாரக மந்திரத்தை மறந்துவிட்டு மனம் போன போக்கில் போகிறபடியால் சமாதானம் அவர்கள் வாழ்வில் மங்கிப்போகிறது.

பிரியமானவர்களே, சமாதானம் எனும் வார்த்தை இவ்வுலகில் பலரின் பேசுபொருளாகவும் ஆசுவாசத்தை அளிக்கும் அருமருந் தாகவும் அமைந்திருக்கிற படியால் அனைவருக்கும் இதன் மீது கவனமும் கவர்ச்சியும் இருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. எல்லோருக்கும் சமாதானமாக இவ்வுலகில் வாழ வேண்டுமென்று ஆசை இருப்பதிலும் ஆச்சரியமில்லை. ஆனால், சமாதானம் இல்லை இல்லை என்று புலம்புவதைவிட அதை பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகளை அறிந்து வெற்றி வாழ்க்கையை வாழ வேண்டும். சமாதானம் நம்மைத்தேடி வருமென்று காத்திருக்காமல் அதைத் தேடி, அதைத் தொடர வேண்டும் (சங்கீதம் 34:14). உலகம் தருகிற சமாதானம் நமக்குத் தேவையில்லை. காரணம் அவை நீடித்து நிலைப்பதில்லை. இன்றைய நாட்களில் நமக்குத் தேவை பூரணமான சமாதானம் அதை நமக்கு சமாதானத்தின் தேவனும், சமாதானப் பிரபுவும் மாத்திரமே தர முடியும். நாம் தேவனையும், இயேசு கிறிஸ்து வையும் விட்டுவிட்டு சமாதானத்திற்காக எங்கே போக முடியும்? உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன், உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசாயா 26:3).

# உண்மையோடு தொழுது கொள்ளுகிறாயா?

# Do you Worship in Truth?

B.Arjunan

**ந**ம்மை உண்டாக்கின நம் சிருஷ்டிகராகிய தேவனை நாம் கனப்படுத்தும் செய்கையை தொழுது கொள்ளுதல் என்கிறோம். உலகம் எங்கும் மனுஷரை தேவன் குடியிருக்கச் செய்ததின் நோக்கமே மக்கள் தேவனைத் தடவியாகிலும் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் (அப். 17:26,27) நியாயப்படி நாம் அவருக்குப் பயந்து அவர் ஒருவருக்கே ஆராதனை செய்ய வேண்டும்! ஆண்டவர் இயேசுவும் இதை வலியுறுத்துகிறார் (மத். 4:10, யோவான் 4:24) உண்மையோடு தொழுது கொள்வது பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகப் பார்ப்போம்.

## I. ஆராதனைக்கு ஆயத்தம் உண்டா ?

நமக்கு திருஷ்டாந்தமாகவும், நிழலாகவும் உள்ள பழைய உடன் படிக்கையில் தேவன் ஓய்வு நாளை விசேஷப்படுத்தி அதற்கு ஆயத்தமாகும் நாள் பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் (யாத். 16:29; மாற்கு 15:42) இதற்கு ஒப்பனையாக புதிய உடன்படிக்கையின் விசேஷித்த நாளாகிய வாரத்தின் முதல் நாளை (ஞாயிற்றுக்கிழமை) நாம் ஆராதிக்கின்ற நாள் இருப்பதினாலே சனிக்கிழமை நமக்கு ஆயத்த நாளாக இருப்பதை நாம் கவனத்தில் கொண்டு பயபக்தியோடு நாம் ஆயத்தமாக வேண்டும். சிலர் சனிக்கிழமை இரவு நீண்ட நேரம் கண் விழித்து மறுநாள் ஆராதனையில் உற்சாகமின்றிக் கலந்து கொள்வது தேவ விசாரணைக்குரியதாயிருக்கிறது (எண் 15:32-36). எனவே, ஆராதனைக்கு நம்மை தயார் செய்து கொள்ள வேண்டியது (2தீமோ. 2:21,22) அவசியமாகும்.

## II. உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துகிறாயா?

அநேகர் நினைப்பது போல் ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படிவது மட்டுமே போதுமானது அல்ல. தொடர்ந்து நம்முடைய குறைகளைக் களைந்து தேவனுக்கு முன்பாக நிற்க பிரயாசப்படுவது மிகவும் அவசியமாகும். அதற்கு உறுதுணையாய் இருப்பது ஆராதனையாகும். உலக வாழ்க்கையில் நாம் கறைப்பட்டுக் கொண்டே இருக்கிறோம் (யூதா 23-25). அவைகளை தேவ சமூகத்தில் அறிக்கையிட்டு நம்மை பரிசுத்தப்படுத்திக்கொள்வது (1 கொரி. 11:28-31, 1 யோவான் 1:7-9) ஆராதனையின் மிக முக்கியப் பங்காக இருக்கிறது (ரோம 12:12) அதுவே புத்தியுள்ள ஆராதனையாக இருக்கிறது. பாவத்தோடு அனுசரிக்கும் ஜெபமோ, துதியோ தேவசமூகத்தில் செல்லாது.

III. **பயபக்தியோடு கலந்துகொள்கிறாயா?**

நம்முடைய தேவபயத்தை வெறும் பேச்சிலே அல்ல அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிவதின் மூலமே காண்பிக்க வேண்டும். தேவ பக்தி என்பது நாம் அவரிடத்தில் அன்பு கூர்ந்து நம் வாழ்க்கையில் அவருக்கு முதலிடம் கொடுப்பதாகும் [மத். 22:37] தேவ சித்தத்தை நிறைவேற்ற வந்த ஆண்டவர், ஒருவன் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும் என்றார் [யோவா 14:15]. அதுவே பயபக்தி. நாம் நேரப்படி ஆராதனையில் கலந்து கொள்வது நமது பயபக்தியை தெரிவிக்கும் அளவுகோலாகும். அவருக்கு பயந்தவர்களுக்கு தேவன் நன்மைகளை வழங்கும் இரக்கமுள்ள தகப்பனாக இருக்கிறார்.

IV. **மனமகிழ்ச்சியோடு ஆராதிக்கின்றாயா?**

உண்மைக் கிறிஸ்தவர்களின் ஆராதனை மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். சிலர் சபைக்கு ஒருவிதக் கட்டாயத்தோடும், இறுக்கமான சிந்தையோடும் வருவார்கள். எனக்கன்பான சகோதரனே, சகோதரியே தேவன் நம் வாழ்வில் எவ்வளவாய் நன்மைகளைச் செய்து ஜீவனோடும் சுவாசத்தோடும் நம்மை வைத்துள்ளார்? [சங். 116:12, 13,17] அதற்காக நாம் மகிழ்ச்சியோடு துதிக்க வேண்டாமா? நீ ஆராதனையில் எரிச்சலோடும், வருத்தத்தோடும் காணப்பட்டால் ஒரு வேளை பிசாசானவன் சந்தோஷப் படலாம். ஏனெனில், கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்பது தான் நம் பெலன் [நெகே 8:10]. எனவே, பிசாசு வெட்கப்படும்படி நாம் இனி மனமகிழ்ச்சியோடே ஆராதனையில் காணப்படுவோமாக [2 நாளா 29:30, சங். 100:2].

ஆண்டவர் இயேசு சொன்ன ஆவியோடும், உண்மையோடும் என்பதில் ஆவியோடு ஆராதனை என்பதை மக்கள் தவறாக புரிந்து கொண்டு கைதட்டி கூக்குரலிட்டு ஆர்ப்பாட்டம் செய்வதைக் காண்கிறோம். நம்மில் இருக்கும் உள்ளான மனுஷனாகிய ஆவியோடு நாம் தேவனை கனப்படுத்துவதே அதன் உள்ளான அர்த்தமாக இருக்கிறது. பவுல் அத்தேனே பட்டணத்தில் விக்கிரகங் களைப் பார்த்த போது ஆவியில் வைராக்கியங் கொண்டு [அப். 17:16] சரியான சத்தியத்தை அமைதலோடு தெளிவாகப் பிரசங்கித்தானே தவிர கூக்குரலிடவில்லை. மாறாக, தெய்வமல்லாத விக்கிரகங்களை வணங்குபவர்களே கூக்குரலிடுவார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.]

தேவனுடைய பிள்ளைகளே! நம்முடைய சிருஷ்டிகர் நமக்காக அநேக நன்மைகளை செய்திருப்பதால் நாம் அவருக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய தேவைகளில், ஆபத்தில்,

வியாதியில் நாம் வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாக நம் ஜெபத்திற்கு பதிலளித்த தேவனை நாம் கனப்படுத்த வேண்டும். யாரை தொழுது கொள்ள வேண்டும் என்ற கேள்விக்கு பதிலாக ஆண்டவர் இயேசுவின் மூலமாக எப்படி நாம் பரலோகத்தின் தேவனிடம் ஜெபிக்கிறோமோ, அவரையே இயேசுவின் நாமத்தில் நாம் தொழுது கொள்கிறோம். (எபேசி. 5:19,20, கொலே 3:17) வாழ்க்கையில் நெருக்கத்தை சந்தித்த எசேக்கியா ராஜா தேவ சமூகத்தை சேர்ந்து வெற்றி பெற்றான் (ஏசா 37:1)

நம்முடைய வாழ்விலும் நமக்கு நேரிடுகிற இடுக்கணில் உதவி செய்பவராகவும், ஆறுதல் அளிப்பவராகவும் நம்முடைய பிதாவாகிய தேவனே இருப்பதால் (2கொரி.1:3,4) நாம் மனமகிழச்சியோடு ஆராதனையில் கலந்து கொள்வோம். எல்லாவற்றிற்கும் மேலாக நம் ஆத்துமா பாதாளத்தில் அழியாமல் தப்புவித்திருக்கிற வல்லமையுள்ள தேவனை நாம் (சங். 30:3) ஆயத்தத்தோடும், பரிசுத்தத்தோடும், பயபக்தியோடும், மனமகிழ்ச்சியோடும் அதாவது ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்போமாக, தேவ கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக ஆமென். ✝

---

## வேதாகமத்தில் குமாரனாக இயேசு கிறிஸ்து

| | |
|---|---|
| இயேசு தச்சனுடைய குமாரன் | (மத்தேயு 13:55) |
| இயேசு மனுஷ குமாரன் | (மத்தேயு 16:13) |
| இயேசு தேவகுமாரன் | (மத்தேயு 1:1) |
| இயேசு தாவீதின் குமாரன் | (மத்தேயு 22:42) |
| இயேசு ஆபிரகாமின் குமாரன் | (கலாத்தியர் 3:16) |

## உறுதியான அஸ்திபாரத்தில் கட்டுதல்

Building on Strong Foundation

நீங்கள் ஒரு வீட்டை எப்படிக் கட்டுகிறீர்கள்? மணலின் மீது கட்டுகிறீர்களா? அல்லது உறுதியான அஸ்திபாரத்தின் மீது கட்டுகிறீர்களா? ஒரு முட்டாள் தன் வீட்டை மணலின் மீது கட்டுகிறான். புத்தியுள்ள மனுஷன் தன் வீட்டை கற்பாறையின் மீது கட்டுகிறான். நாம் [மத்தேயு 7:24–27] வசனங்களின்படி உறுதியான அஸ்திபாரத்தின் மீது கட்டுகிறவர்களாக இருக்க வேண்டுமென்று கட்டளையிடப் பட்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்து நம் உறுதியான அஸ்திபார மாயிருக்கிறார்.

நாம் நம் வாழ்க்கையை இயேசுவின் மீதும் அவருடைய வார்த்தையின் மீதும் கட்ட வேண்டும். வீடுகட்டுகிறவர் மாதிரிப் படத்தை வைத்து வீட்டைக்கட்டுவது போல நாமும் வேதாகம மாதிரியைப் பின்பற்றி நம் வாழ்க்கையை கட்ட வேண்டும். மாதிரி சரியாகப் பின்பற்றவில்லையென்றால் வீடு சரியாக வராது. நாமும் இரட்சிப்பின் திட்டத்தை சரியாகப் பின்பற்றப்படவில்லையென்றால், அதாவது, **கேள்விப்படுதல்** [ரோமர் 10:17], **விசுவாசித்தல்** [அப்போஸ்தலர் 2:38], **மனந்திரும்புதல்** [லூக்கா 13:35], **கிறிஸ்துவை அறிக்கையிடுதல்** [ரோமர் 10:910] [பாவ மன்னிப்புக்கென்று **ஞானஸ்நானம் பெறுதல்** [மாற்கு 16:16] போன்றவைகளை நாம் சரியாகப் பின்பற்றவில்லை யென்றால் இரட்சிப்பு சம்மந்தமாக உறுதியான அஸ்திபாரத்தின் மீது கட்டவில்லை. கடைசியாக, நாம் மரண பரியந்தம் உண்மையுள்ளவர் களாக இருக்க வேண்டும் [வெளிப்படுத்தின விசேஷம் 2:10].

எனவே, நீங்கள் வாழ்வை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னும் உறுதியான அஸ்திபாரத்தின் மீது கட்டிக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது உங்கள் வாழ்வை மணலின் மீது கட்டிக் கொண்டிருக்கிறீர்களா? என்பதை சற்றே யோசியுங்கள்.

## தேவன்
## கொஞ்சம் சுவாரஸ்யமான தகவல்
## தேவன் நல்லவர்!
## God Is Good

**இது உண்மையாகவே சுவாரஸ்யமானது**

**தே**வன் நம் பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் போது அவருடைய திறமையில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. தேவன் நம் பிரச்சனைகளைத் தீர்க்காத போது. நம்முடைய திறமைகளில் அவருக்கு நம்பிக்கை இருக்கிறது.

ஒருவர் தேவனுடைய துல்லியத்தை முட்டைகள் குஞ்சு பொரிப்பதில் காணமுடியும். மஞ்சள் நிற பறவை 14 நாட்களில் குஞ்சு பொரிக்கிறது. கோழி 21 நாட்களில் குஞ்சு பொரிக்கிறது. வாத்து 28 நாட்களில் குஞ்சு பொரிக்கிறது. காட்டு வாத்து 35 நாட்களில் குஞ்சு பொரிக்கிறது; கிளியும், தீக்கோழியும் 42 நாட்களில் குஞ்சு பொரிக்கின்றன.

மேற்சொல்லப்பட்ட எண்கள் எல்லாமே ஏழால் வகுக்கக்கூடியது தான், வாரத்தில் ஏழு நாட்கள் தானே இருக்கிறது.

யானையைப் படைத்ததில் தேவ ஞானத்தைப் பாருங்கள். இந்த யானையின் நான்கு கால்களும் எவ்வளவு நேர்த்தியாக முன்னோக்கி ஒரே திசையில் செல்கின்றன. மிகப்பெரிய உருவத்தைக் கொண்ட இந்த மிருகத்தால் இரண்டு கால்களால் வாழ முடியாது என்பதை, உணர்ந்த தேவன் யானைக்கு நான்கு கால்களைக் கொடுத்தார். அதுமட்டுமல்லாமல், யானை அந்த நான்கு கால்களைக் கொண்டு எளிதாக தரையிலிருந்து எழும்பும்படி கால்களை தேவன் வடிவமைத்திருக்கிறார். குதிரை முதலில் தன் முன்னங்கால்களை கொண்டு தரையிலிருந்து எழுந்திருக்கிறது. அதேநேரத்தில், மாடு தன் பின்னங் கால்களைக் கொண்டு முதலில் தரையிலிருந்து எழுந்திருக்கிறது.

தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியைகளிலெல்லாம் எவ்வளவு ஞானமாக இருக்கிறார் என்பதைப் பாருங்கள்!

ஒவ்வொரு தர்ப்பூசணிபழத்தின் தோலிலும், கோடுகள் இரட்டைப்படையில் தான் இருக்கும்.

ஒவ்வொரு மக்காச்சோளத்தின் வரிசை இரட்டைப்படை எண்ணிக்கையில் தான் இருக்கும்.

ஒவ்வொரு கோதுமை தண்டிலும் மணிகள் இரட்டைப்படை எண்ணிக்கையில் தான் இருக்கும்.

எல்லா தண்டுகளிலும் தானியங்கள் இரட்டைப்படை எண்ணிக்கையில் தான் இருக்கின்றன.

தேவன் நாளின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மலர்களை மலரச்செய்கிறார். பிரசத்தி பெற்ற தாவரவியலரான Linnaeus என்பவர் தன்னிடம் சரியான மண் ஈரப்பதம், மற்றும் தட்பவெப்பத்தை உள்ளடக்கிய இளம்பயிர்களை வளர்த்து காப்பாற்றும் ஒரு தோட்டம் இருந்தால், மலர்ந்திருக்கும், திறந்திருக்கும் அல்லது மொட்டாயிருக்கும் மலரைப் பார்த்து பகல் அல்லது இரவின் நேரத்தை தன்னால் சொல்ல முடியும் என்று சொல்கிறார்.

நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும், தேவனால் அவருடைய மகிமைக்காக, அழகாக ஒழுங்குபடுத்தப்படமுடியும். ஆனால், அதற்கு நாம் நம் ஜீவியங்களை அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். நம் ஜீவியங்களை நாமே ஒழுங்குபடுத்த முயற்சித்தால் பிரச்சனைகளும், தோல்விகளும் தான் மிஞ்சும்.

நம் இருதயங்களையும், மூளைகளையும் உருவாக்கிய தேவனால், மட்டுமே இனிமையான முடிவுக்குள் வெற்றிகரமாக வழிநடத்த முடியும்.

நீங்கள் வேதாகமத்தை சுமந்து செல்லும் போது சாத்தானுக்கு பெரிய தலைவலியாயிருக்கிறது. நீங்கள் வேதாகமத்தை திறக்கும் போது அவன் விழுந்து விடுகிறான். நீங்கள் அதை வாசிப்பதை அவன் கண்டால் அவன் பெலனை இழந்து விடுகிறான். நீங்கள் தேவனுடைய வார்த்தையில் உறுதியாய் நிற்கும் போது, சாத்தானால் உங்களை காயப்படுத்த முடியாது.

தேவனில்லாத வாழ்க்கை, கூர்மைப்படுத்தப்படாத பென்சில் என்பது உங்களுக்கு தெரியுமா?

பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக; உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக, அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்.

நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேட்கமுமானவர். அவருடைய பரிசுத்த நாமத்தை நாம் நம்பியிருக்கிறபடியால், நம்முடைய இருதயம் அவருக்குள் களிகூரும்.

கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்புகிறபடியே உமது கிருபை எங்கள் மேல் இருப்பதாக. (சங்கீதம் 33:8–9;20 – 22).

# தேவன்
## தேவன் துன்பத்தைக் கூட பயன்படுத்துகிறார்
## God Uses Trouble
Gary C. Hampton

**தொ**டர்ச்சியான போதனை மற்றும் உற்சாகப்படுத்துதலின் முக்கியத்துவத்தை அறிந்த பவுல் ஏற்கனவே, தான் யாருக்கெல்லாம் சுவிசேஷத்தை பிரசங்கித்தாரோ அந்த சகோதரர்களைப் போய் சந்திப்பதற்காக பர்னபாவை அணுகினார். அப்பொழுது பர்னபா, மாற்கு எனும் பேர்கொண்ட யோவனைக் கூட அழைத்துக்கொண்டு போக வேண்டும் என்றார். அதற்கு பவுல், அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வராததினாலே அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றார். இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமூண்டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள்.

இவ்விரு விசுவாச மனிதர்களிடையே காணப்பட்ட கருத்து வேறுபாட்டை, சுவிசேஷத்தை பரப்ப இரு அணிகளாக பிரிந்து நன்மைக்காக பயன்படுத்தினார். பர்னபா மாற்குவை கூட்டிக்கொண்டு தன் சொந்த நாடான சீப்புரு தீவுக்குப்போனார். (அப்போஸ்தலர் 15:39) பவுல் எருசலேம் சபையில் முக்கியமான நபராகிய சீலாவை கூட்டிக்கொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு புறப்பட்டு சீரியாவிலும், சிலிசியாவிலும் திரிந்து சபைகளை திடப்படுத்தினார் (அப்போஸ்தலர் 15:40,41).

இந்த கருத்து வேறுபாடு சம்பவத்தில் நாம் கவனிக்கத்தக்க விஷயம் என்னவென்றால், இங்கே, இரு தேவ மனிதர்களுக்குமே இதை தேவனுடைய வேலையை தடைசெய்ய அனுமதிக்கவில்லை. அப்படி அனுமதித்திருந்தால், இந்த கருத்து வேறுபாடு சம்பவம் சந்தோஷமற்ற, வருந்தத்தக்க ஒன்றாக அமைந்திருக்கும். பிற்பாடு கைத்தொழில் ஒன்றை செய்து அந்த வருமானத்தில் ஊழியம் செய்கிறதற்கு பர்னபாவை ஒரு சிறந்த முன்னுதாரணமாக குறிப்பிட்டார். மேலும், மாற்கு தனக்கு ஊழியத்தில் பிரயோஜனமுள்ளவன் என்றும் குறிப்பிடுகிறார். (I கொரிந்தியர் 9:6 ; II தீமோத்தேயு 4:11).

கிறிஸ்தவர்கள் இடையே காணப்படும் கருத்துவேறபாடுகள் நற்கிரியைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க சாத்தானின் கருவியா யிருக்கிறது. வேதனையான சம்பவங்களை சாக்காகக்காட்டி, வேண்டுமென்றே எதையும் செய்யாமல் வெறுமனே ஒருவர் இருந்தால், அவர் சாத்தானை ஜெயிக்கவிடுகிறார் என்றே அர்த்தம். தடைகளை தகர்த்து முன்னேறிச் செல்லும் ஒருவரால் சுவிசேஷத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். [பிலிப்பியர் 1:12]

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு இரண்டு நோக்கங்கள் உண்டு. – சுயநலமான ஆசை அல்லது அன்பு. நம் வேலை இருதய பரிசோதகர் போல, தவறான நோக்கத்தில் பிரசங்கிப்பவர்களை திருத்துவதாக இருக்கக்கூடாது. மாறாக, பவுலைப்போல நாம் இதினாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது, கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார். அதனால், சந்தோஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படுவேன் [ பிலிப்பியர் 1:18].

✝

# முடியாது

**போராட்டமில்லா வாழ்வில் மாற்றங்களை காணமுடியாது**
**யோபு 14:14**

**உபத்திரவமில்லா வாழ்வில் எங்கும் உருவாக முடியாது**
**ஏசாயா 48:10**

**சோதனையற்ற வாழ்வில் எவரும் சாதிக்க முடியாது**
**யாக்கோபு 1:12**

**சிட்சைக்கு நில்லாத எவரும் தேவனுக்கு பிள்ளையாக முடியாது**
**எபிரெயர் 12:5**

**பாடுகளின் வழி செல்லாமல் பரமதேசம் செல்ல முடியாது**
**I பேதுரு 4:13**

# தேவன்
## சிருஷ்டிகராகிய கிறிஸ்து
## Christ the Creator

Keitn Kasarjian

ஒரு சிறு பெண்ணும், அவளுடைய தாயும் ஞாயிறு பள்ளி பாடத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்து எப்படி? பரமேறி இப்போது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்பதைக் குறித்தும் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து அந்தத்தாய் ஒரு வானவில்லை பார்த்தார், தேவனைப் பற்றி சொல்வதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதை வீணடிக்கக்கூடாது என்று நினைத்த தாய் தன் மகளிடம் தேவன் நமக்காக உண்டாக்கியிருக்கிற வண்ணமயமான வானவில்லைப் பார் என்று சொன்னார். அந்தச், சிறு பெண் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அம்மா, தேவன் இந்த வானவில்லை தம்முடைய இடது கையைக் கொண்டு தான் உண்டாக்கினார். தாய் குழப்பமடைந்து தேவனால் இரண்டு கைகளையும் உபயோகப்படுத்த முடியாதா? என்று கேட்டார். அதற்கு சிறு பெண் நிச்சயம் இல்லை. ஏனென்றால், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசு கிறிஸ்து வீற்றிருக்கிறார் என்றாள். இயேசு கிறிஸ்துவின் சிருஷ்டிப்பின் வல்லமையைப் பற்றி ஆழமாக எப்போதாவது சிந்திக்கிறீர்களா?

**கிறிஸ்து இவ்வுலகின் சிருஷ்டிகராயிருக்கிறார்:**

அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது [ கொலோ 1:16]. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை [யோவான் 1:3]; அவருக்குள் எல்லாம் நிலை நிற்கிறது.

இதன் பொருள், கிறிஸ்துவே நம் புதிய ஜீவனின் அஸ்திபாரமாக யிருந்து புதிய ஜீவனை சாத்தியப்படுத்துகிறார். ஒருவன் கிறிஸ்து வுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின [II கொரிந்தியர் 5:17]. கிறிஸ்து இல்லையென்றால் நாம் நம் பாவத்தில் மரித்து மாம்ச இச்சைகளுக்கு நம்மை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாயிருந் திருப்போம் [எபேசியர் 2:1-3]. இருந்த போதிலும், இயேசு கிறிஸ்து வினால் நம் வாழ்க்கை வித்தியாசமாக மாற முடியும். அன்பு, சந்தோஷம், மன்னிப்பு மற்றும் நம்பிக்கையை உள்ளடக்கிய புதிய ஜீவனை ஜீவிக்க முடியும்.

## தேவன்
## தேவனைக் குறித்து மனம்சலித்துப்போனாயோ?
## Have You Grown Tired Of God?
Therman Hodge

மல்கியாவின் நாட்களைப் போலவே இன்றைய நாட்களிலும் பலர் வேத உபதேசத்துக்கு மேலாக தங்கள் ஆள்த்துவத்தை வைக்க விரும்புவதையும், அறியாமையின் காரணமாக அதிலும் குறிப்பாக வேத வாக்கியங்களின் அறியாமை காரணமாக எத்திசையிலும் பயணிக்க அவர்கள் நாட்டமுடையவர்களாக இருப்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது. Franklin Camp எனும் வேத அறிஞர் ஒரு முறை இவ்விதமாகச் சொன்னார். வேதாகமத்தின் அதிகாரத்திற்கான அவசியத்தின் விதியிலிருந்து நீங்கள் விலகிப்போகும் போது உங்களுடைய பயணம் எங்கே போய் முடியும் என்பதற்கு முடிவே கிடையாது.

இது இன்றும் உண்மை என்பதை நம்மால் பார்க்க முடிய வில்லையா? இது, இப்படியே தொடர்ந்தால் ஆராதனை சம்மந்தமான காரியங்களும் தேவன் விரும்புகிறவிதமாக அல்லாமல், முடி வெடுக்கப்படும் [நீதிமொழிகள் 14:12 எரோமியா 10:23; லேவியராகமம் 10:1-2; I யோவான் 2:3-5]; மல்கியாவின் நாட்களில் வாழ்ந்த மக்கள் அந்நாட்களின் பாவங்களைத் தழுவி, உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றும் உலகத்தின் புகழைப் பெற வேண்டுமென்றும், விரும்பியிருக்கிறார்கள். அவர்கள் அந்நாட்களில் மதங்களோடு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்த தீர்மானித்தார்கள். எனவே, அவர்கள் விக்கிரக ஆராதனையை ஏற்றுக் கொண்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை. அதேபோல் தேவன் அவர்களைப் பார்த்து நீ என்னைக் குறித்து மனஞ்சலித்துப்போனாயோ? என்கிறார்.

இங்கே காரியங்கள் ஒன்றன்பின் ஒன்றாக முன்னேறுகிறதை நம்மால் காண முடியும். சகிப்புத்தன்மை ஏற்றுக்கொள்ளுதலுக்கு வழிவகுத்தது. என் நண்பர்களே இந்த மூன்று காரியங்களும் காலங்காலமாக மதங்களின் மீது மட்டும் தாக்கத்தை ஏற்படுத்த வில்லை. ஒழுக்க ரீதியான பிரச்சனைகள் மீதும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அவைகளுள் ஓரினச்சேர்க்கை மற்றும் கரு கலைப்பு போன்றவற்றை மாத்திரம் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒழுக்கக்கேட்டிலும், மதப்பிழையிலும் தலைகுப்புற விழுந்ததால் அவர்கள் தேவனைக் குறித்து மனஞ்சலித்துப் போயிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா? [ரோமர் 1:24-32; நீதி மொழிகள் 23:23]. ஓசியாவைப் போல் மீகாவும் யெகோவாவின் மண வாட்டியாகிய இஸ்ரவேலின் மாயமாலத்தைக் குறித்து துக்கப்பட்டு

அவர்களுக்கு எதிராக தைரியமாக பிரசங்கித்தார். அவ்விதமான தைரியமான பிரசங்கங்கள்தான் இன்றைய நாட்களில் அவசியமாகிறது.

மீகாவின் நாட்களில் நடந்த மூன்று காரியங்களுக்கும், நம்முடைய நாட்களில் நடந்து கொண்டிருக்கும் மூன்று காரியங்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை நம்மால் காண முடிகிறதா? தேவனுடைய வார்த்தையைக் குறித்த அறியாமையின் காரணமாக அந்த ஜனங்கள் தங்களைச் சுற்றிலும் இருந்த உலகத்தாலும், தவறான மதங்களாலும் செல்வாக்கு செலுத்தப்பட்டார்கள். அந்த மக்கள் உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமென்பதில் எவ்வளவு ஆசை கொண்டார்கள் என்பதை எண்ணும் போது வேதனையாக இருக்கிறது. உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பதற்காக அவர்கள் சத்தியத்தோடு சமரசம் செய்து கொண்டது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. சத்தியத்தின் மீது அவர்கள் மெத்தனப் போக்கை கடைபிடித்தது, அவர்கள் தேவனை விட்டு விலகுவதற்கு காரணமாக அமைந்தது.

முதலாவது, அந்த ஜனங்கள் சரியான மனநிலையோடு தேவனை ஆராதிக்கவில்லை. அவர்கள் இருதயத்தை நிலைநிறுத்தி தேவனை ஆராதிக்காமல் உதட்டளவில் தேவனை ஆராதித்து விடலாம் என்று எண்ணி விட்டார்கள். இரண்டாவது அவர்கள் நீதியை புறக்கணித்து விட்டு சடங்காச்சாரங்களில் கவனம் செலுத்தினார்கள். மூன்றாவது தாங்கள் ஆராதனை முறையில் அயலகத்தாரின் மதசம்மந்தமான பழக்கவழக்கங்களை சேர்ந்தாலும் அதனால், எந்த தீங்குமில்லை என்று தப்பு கணக்கு போட்டுவிட்டார்கள். ஆனால், இது அவர்கள் தேவனை விட்டும், சத்தியத்தையும் விட்டுவிலகுவதற்கும் வழி வகுத்து விட்டது. தேவனுடைய மாதிரியிலிருந்து அவர்கள் எடுத்து வைத்த சிறிய அடிகள் தேவனை விட்டு நீண்டதூரம் வழிவிலகிச் செல்வதற்கு வழிவகுத்துவிட்டது.

இன்றைய நாட்களில் ஆராதனை எப்படி இருக்கிறது? அது ஒரு வெறும் சடங்காச்சாரமா அல்லது பழக்கவழக்கமா? ஆராதனையில் நாம் துடிப்புடன் பங்கெடுக்கிறோமா? அல்லது பார்வையாளர்களாக இருக்கிறோமா? மெய்யான ஜீவனுள்ள தேவனுக்கு முன்பாக நம் இருதயங்கள் தாழ்மைப்பட்டிருக்கிறதா? ஆராதனையில் எவைகளெல்லாம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறித்து எனக்கு அக்கறை இருக்கிறதா? (யோவான் 9:24; ரோமர் 1:9; கொலேசேயர் 3:17). வேதத்தில் உள்ள மூவரின் பிரசன்னமும் ஆராதனை வேளையில் இருக்கிறது என்பதை உணர்ந்து தேவனுக்கு பிரியமான ஆராதனையை ஏறெடுக்கிறோமா? தேவனுக்குப் பிரியமானது எது? என்பதை அறிய ஒரே வழி அவருடைய வார்த்தைகளை படிப்பது தான் என்பதை மீண்டும் நினைப்பூட்டுவது இன்றும் கூட பலருக்கு ஒரு நல்ல கேள்வி தேவனைக் குறித்து மனஞ்சலித்துப்போய்விட்டோமா?

## சாட்சியங்கள்
## உடனடி மீன்
## Instant Fish

**David Everson**

அழுக்கில் தண்ணீரை ஊற்றின உடனே, இதோ பத்து நிமிடங்களில் உடனடி மீன் தயார் இது. ஏதோ புத்தம் புதிய உணவுப் பொருளுக்கான விளம்பரம் போல் தோன்றுகிறதா? ஆனால், அப்படி இல்லை. இது தேவனால் படைக்கப்பட்ட வினோதமான படைப்புகளில் ஒன்று. இந்த வினோதமான படைப்பைக்குறித்து நாம் சற்றுக் கற்றுக்கொள்வோம்.



இந்த வினோதமான படைப்பு என்னவென்றால் Salamander Fish எனப்படும் ஒருவகை மீனாகும். இவ்வகை மீன் ஆஸ்திரேலியாவில் வாழ்கிறது. இவ்வகை மீன் இரண்டு அங்குலம் நீளமுள்ளதாகும். இது சிறு குளங்களிலும், ஆழமற்ற ஏரிகளிலும் வாழ்கிறது. இது முதலில் பார்க்கும் போது சாதாரண மீன் போன்று தான் தோற்றமளிக்கும். ஆனால், இம்மீனின் சிறப்பம்சங்கள் நீண்ட வறண்ட கோடை காலம் வரை தெரியாது. இந்த மீன் வாழும் குளத்தில் நீர் வற்றும் போது, மீன் மறைந்து போகிறது. அடுத்த மழைபெய்து குளத்தில் நீர் நிரம்பும் வரை இந்த மீனைப் பார்க்கவே முடியாது. ஆனால், குளத்தில் தண்ணீர் வந்து சில நிமிடங்களிலேயே மறுபடியும் இந்த மீனை நாம் காண முடியும். இவ்வகை மீன் தண்ணீர் இல்லாமல் பல மாதங்கள் வாழ்கின்றன. எப்படி ஒரு மீனால் தண்ணீரில்லாமல் பல மாதங்கள் வாழ முடியும்?

தேவனுடைய அற்புதமான இந்த சிருஷ்டிப்புக்கு தோல் மூலமாக சுவாசிக்கும் ஓர் அபாரசக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது சாதாரண தட்பவெட்ப சூழ்நிலையில் இந்த மீன் எல்லா மீன்களைப் போலவே அதன் செதில்களைக் கொண்டு சுவாசிக்கிறது. ஆனால், நீண்ட வறட்சியான காலங்களில் அதன் தோல் மூலமாக நேரடியாக ஆக்ஸிஜனை உள் இழுத்துக் கொள்கிறது. குளத்தில் நீர் வற்றும் போது இவ்வகை மீன் சகதியில் ஒரு சிறிய குழியைத் தோண்டி அங்கே வாழ்கிறது. குளத்தின் அடிப்பகுதியில் எப்போதும் சற்று

ஈரப்பதம் இருந்து கொண்டேயிருக்கும். மீன் தோலில் ஈரப்பதம் இருக்கும் வரை சுவாசித்துக் கொண்டு அதனால் உயிர் வாழ முடியும். இத்தகைய காலகட்டத்தில் இவ்வகை மீன் செயல்பாடற்ற நிலையில் இருப்பதால் சுவாசிப்பதற்கான ஆக்ஸிஜன் அளவும் குறைந்து விடுகிறது. மறுபடியும் மழை பெய்து குளத்தின் உலர்ந்த தரையை தண்ணீர் நனைத்த சில நிமிடங்களிலேயே இந்த Salamander மீண்டும் சகதியிலிருந்து எழும்பி தண்ணீரின் மேலே வந்து விடுகிறது.

இந்த நம்பமுடியாத ஆச்சரியமான மீன்வகையை குறித்து படித்தும், ஆராய்ச்சியும் செய்து கொண்டிருக்கும் விஞ்ஞானிகள் தண்ணீரில்லாமலேயே பல மாதங்கள் வாழக்கூடிய இதன் சிறப்பம்சங்களைப் பார்த்து வியந்து போயிருக்கின்றனர். ஒரு சாதாரண நாளில் ஆஸ்திரேலிய குளங்களில் தட்பவெட்பநிலை 30 டிகிரி செல்ஷியஸ் வரை இருக்கும். அங்கு தான் இவ்வகை மீன்கள் வாழ்கின்றன. இந்த அசாதாரண தட்ப வெட்ப நிலையை சகித்துக்கொண்டு இவ்வகை மீன்களால் எப்படி உயிர் வாழ முடிகிறது என்பது இன்னும் தெளிவாகவில்லை. இதில் இன்னும் ஓர் ஆச்சரியமான உண்மை என்னவென்றால், சுற்றுச்சூழலில் அதிக பட்ச அமிலத்தன்மையையும் சகித்துக் கொண்டு இவ்வகை மீன்களால் உயிர் வாழ முடிகிறது. இதுவும் வழக்கத்திற்கு மாறான ஒன்றாகும்.



விஞ்ஞானிகளும், பரிணாம வளர்ச்சிக்கொள்கைகாரர்களும் எப்படி இந்த மீன் இத்தனை சிறப்பம்சங்களை பெற்றிருக்கிறது என்பதை கண்டுபிடிக்க முயற்சிக்கிறார்கள். சங்கீதக்காரன், நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன் உமது கிரியைகள் அதிசயமானவைகள் அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும் (சங்கீதம் 139:14) என்று சொல்வதை நாம் ஒத்துக்கொண்டே ஆக வேண்டும்.

சாட்சியங்கள்

# பூமி என்றென்றும் நிலைத்திருக்குமா?

# Will the Earth Last Forever ?

David Everson

**என்றென்றும்** எனும் தமிழ் வார்த்தை எபிரெய மொழியில் Olam என மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த Olam எனும் எபிரெய வார்த்தை பல இடங்களில் பல பொருள்களைக் கொடுக்கிறது. எனவே, இவ்வார்த்தை எந்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை சரியாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். சிலவேளைகளில், இது நாம் [சங்கீதம் 29:10; 45:6] இல் வாசிக்கிறது போல என்றென்றைக்கும் எனும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. சில வேளைகளில், இது வெறுமனே கால அளவை குறிக்கிறது. அதாவது, [சங்கீதம் 61:8] இல் நாம் பார்க்கிறது போல, தினமும் எனும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. அதுவும் குறிப்பாக, ஆதியாகமம் 6:4 ல் நாம் பார்க்கிறபடியே பூர்வத்தில் எனும் பொருளிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பூர்வத்தில் பேர் பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள் [ஆதியாகமம் 6:4]. இந்த Olam எனும் வார்த்தை ஏசாயா 42:14ல் வெகுகாலம் எனும் பொருளிலும் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. பத்தாம் தலைமுறையிலும், என்றைக்கும் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பெரும்பாலும், Olam எனும் இந்த எபிரெய வார்த்தை என்றென்றைக்கும் எனும் பொருளில் அநேக இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது [யாத்திராகமம் 21:6; உபாகமம் 15:17;I சாமுவேல் 27:12].

Olam எனும் எபிரெய வார்த்தை சிலவேளைகளில் தற்காலிக காரியங்களை குறிக்கிறதாக பயன்படுத்தப்பட்டாலும் சரி அது ஒதுக்கப்பட்ட அந்த கால அளவு வரை நிலைத்து இருக்கும் எனும் பொருளில் தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக, லேவிய ஆசாரியத்துவம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்படியாக கொடுக்கப்பட்டாலும் அது மாற்றத்திற்கு உட்பட்டது [எபிரெயர் 7:12]. அதேபோல், இதே கருத்து இஸ்ரவேலர்கள் தேசத்தை சுதந்தரிக்கிற காரியத்துக்கும் விருத்தசேதனத்துக்கும் பொருந்துகிறதாயிருக்கிறது [யாத்திராகமம் 17:7-13; யாத்திராகமம்; 32-13] பஸ்கா [யாத்திராகமம்

12:14–17] ஆசாரிப்புக்கூடாரத்தின் குத்துவிளக்கு [யாத்திராகமம் 27:21; லேவியராகமம் 24:3] சணல்நூல் உடை [ யாத்திராகமம் 28:43] கைகால்களைக் கழுவுதல் [யாத்திராகமம் 30:21]. ஓய்வு நாள் [யாத்திராகமம் 31:17], ஆசாரியர்களுக்குரிய பலிகள் [லேவியராகமம் 7: 34–36;10:15] போன்றவைகள் தலைமுறை தலைமுறைதோறும் என்றென்றும் ஆசாரிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருந்தாலும் கூட பிற்பாடு அவைகள் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டது. நாம் வாழும் பூமி தற்காலிகமானதாயிருக்கிறபடியால் [சங்கீதம் 102:25–26; மத்தேயு 24:35 II பேதுரு 3:10–12] பூமியை என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற இடமாக வேதாகமம் எங்கெல்லாம் பேசுகிறதோ, கிறிஸ்து வரும் வரை அது எப்போது வரை நிலைத்திருக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டதோ, அதுவரை நிலைத்திருக்கும்.

---

## ஏன் தாமதிக்கிறார்கள்?

- ☆ *சத்தியத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததால் (17:32)*
- ☆ *சத்தியத்திற்கு கீழ்ப்படியத் தேவையில்லை என்று நினைப்பதால் (அப்போஸ்தலர் 24:25)*
- ☆ *உலகத்தை அதிகம் சிநேகிப்பதால் ( யோவான் 12:42)*
- ☆ *சத்தியத்தில் நிலைத்திருக்க முடியாதென்று நினைப்பதால் (மத்தேயு 10:22)*
- ☆ *கொடுக்க வேண்டிய விலை அதிகமென்று எண்ணுவதால் (மாற்கு 8:34)*
- ☆ *ஆயினும் சத்தியத்ததிற்குக் கீழ்ப்படிய பவுல் தாமதிக்கவில்லை நீங்கள் எப்படி ?*

# தகப்பனே...

**தகப்பனே ...**

ஒரு மனிதனாக கீழிருந்து மேல்நோக்கி உம்முடைய கிரியை களின் விஸ்தாரத்தை எண்ணிப் பார்க்கும்போது உமது அருமை யையும், சிறுமையையும் நினைத்து நிலை குலைகிறேன்.

நீர் உண்டாக்கின மரங்கள்,

விண்ணைமுட்டும் உயர்ந்து வளர்ந்த மரங்கள்

நீர் உண்டாக்கின ஆகாயம்

ஆகாயம் எல்லையே இல்லாமல் பரந்து விரிந்திருக்கிறதே.

நீர் பொழியச்செய்கிற மழை

என் கால்களுக்குக் கீழ் இருக்கும் பூமியின் ஒவ்வொரு அங்குலத்தையும் நனைத்து இவ்வுலகிலுள்ள ஜீவராசிகளின் தாகத்தை தீர்க்கிறதே.

நான் நொறுங்கிப் போகிறேன்

உம்முடைய மகா வல்லமைக்கும் என் ஒன்றுமில்லாமைக்கும் இடையே ஒரு பெரும் பிளவு இருப்பதை எண்ணிப் பார்த்து தாழ்மைப்பட்டு நொறுங்கிப் போகிறேன்.


நான் ஆச்சரியப்படுகிறேன்

நீர் உம் விலையேறப்பெற்ற வார்த்தையை என் இருதயத்தில் வைத்தமையால் உம்முடைய கிரியைகளைப் பார்த்து ஆச்சரியப் பட்டு முழங்கால்படியிடுகிறேன்.

''தகப்பனே'' ..........!

## தேவனுடைய வார்த்தை
## தேவனுடைய வார்த்தை மீதான நம் வைராக்கியத்தை புதுப்பித்தல்
## Renewing Our Zeul For Gods Word

Dan R.Owen



**தே**வனுடைய வார்த்தையைக் குறித்து எப்படி உணர்கிறீர்கள்? அதை வாசிக்கும் போது, தியானிக்கும் போது மற்றவர்கள் பிரசங்கிக்க அதைக் கேட்கும் போது எப்படி உணர்கிறீர்கள்? நீங்கள் பரவசமடைகிறீர்களா, பாரா முகமாக இருக்கிறீர்களா? உற்சாக மற்றவர்களாக இருக்கிறீர்களா? குதூகலமாக இருக்கிறீர்களா? தேவனுடைய வார்த்தையை கேட்க மனதை திறந்த நிலையில் வைத்திருக் கிறீர்களா? மனதை அடைத்து வைத்திருக்கிறீர்களா? அது உத்வேகத்தை ஏற்படுத்துகிறதா? அல்லது சலிப்பை ஏற்படுத்துகிறதா? தேவனுடைய வார்த்தையோடு உங்கள் உதவி எப்படி இருக்கிறது? பொதுவான தியானத்திலும் உங்கள் தனிப்பட்ட தியானத்திலும் தேவனுடைய வார்த்தையை நீங்கள் எப்படி அணுகுகிறீர்கள்?

தேவனுடைய வார்த்தை மீது நமக்கு ஆர்வம் ஏற்படுவதற்கு குறிப்பிட்ட மனநிலை அவசியப்படுகிறது. உண்மையாகவே வேத வாக்கியங்களின் மதிப்பை நாம் உணர வேண்டும். வேத வாக்கியங்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்டவைகள். அவைகள் நித்திய ஜீவனை அளிப்பவைகள். அவைகள் நம்மை தேவனிடத்திற்கும், இரட்சிப்புக்கும் வழி நடத்தும் தெய்வீக வார்த்தைகளாக இருக்கின்றன. இது உங்களுக்குப் புரிகிறதா? வேத வாக்கியங்கள் நமக்குக் கொண்டு வரும் அற்புதமான நன்மைகளின் மதிப்பை நாம் உணர வேண்டும். தேவனுடைய வார்த்தை நம்மை **இரட்சிப்புக்கு** வழிநடத்துகிறது. **பாவத்திலிருந்து விலக்கி** காத்துக் கொள்கிறது. நாம்

துக்கமாயிருக்கும் போது நம்மை **பெலப்படுத்தப்படுகிறது.** நம் பாதைக்கு **வெளிச்சமாயிருக்கிறது.** தேவனுடைய வாக்குத் தத்தங்கள் மூலமாக நமக்கு **மகிழ்ச்சியைக்** கொண்டு வருகிறது. நம் பாடுகளின் போது நமக்கு **ஆறுதல்** அளிக்கிறது. வேத வாக்கியம் உண்மையாகவே என்னவாக இருக்கிறதோ? அதனால், நமக்கு என்ன செய்ய முடியும் போன்றவைகளை அறிந்து கொள்வது அதனிடத்தில் சரியான மனநிலையைக் கொள்ள நமக்கு உதவும்.



தேவனுடைய வார்த்தை மீது நமக்கு ஆசையும், உற்சாகமும் உண்டாக வேண்டுமென்றால் நமக்கு அதினிடத்தில் தனிப்பட்ட பரிச்சயம் ஏற்படவேண்டும். நாம் ஒருவரை தனிப்பட்ட ரீதியில் அறியவில்லையென்றால் அவரைக் குறித்து பரவசமடையமாட்டோம். தேவனுடைய வார்த்தையைச் வாசிக்க வேண்டும், அதை வாசிக்க உண்மையான முயற்சி எடுக்க வேண்டும். ஆரம்பத்தில் இது கஷ்டமாக இருந்தாலும் விடா முயற்சியுடன் இதில் ஈடுபடுங்கள். சிறிய வசனப்பகுதிகளை மனப்பாடம் செய்து அவைகளை திரும்பத் திரும்ப சொல்லிப் பார்க்க வேண்டும். உணர்வுப்பூர்வமாக தேவனுடைய வார்த்தையை உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை கேட்க உங்கள் இருதயத்தைச் சாய்க்க வேண்டும். நீங்கள் எந்த வசனத்தை வாசிக்கிறீர்களோ கேட்கிறீர்களோ அதைக்குறித்து மற்றவர்களிடம் பேசுங்கள். நீங்கள் ஏதாவது ஒன்றை

கற்றுக் கொள்ளும் போது அதன்படி வாழ்ந்து காட்டுங்கள். இந்த காரியங்கள் தேவனுடைய வார்த்தையைக் குறித்து ஆவலுக்குள்ளாக உங்களை வழிநடத்தும்.

இன்னும் பல நடைமுறை ஆலோசனைகள் உதவும். நோட்டுபுத்தகம் மற்றும் பேனா போன்றவற்றோடு தேவனுடைய வார்த்தையை கவனிக்கிறவர்களாக இருக்க வேண்டும். வேதாகமத்தில் சில வசனங்களை அடிக்கோடிடுங்கள். அப்படியே குறிப்பு எடுக்கும் பழக்கத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள். வேதாகமத்தில் ஒரு குறிப்பிட்ட புத்தகத்திலிருந்து வாசிக்கத் தொடங்கி, தொடர்ச்சியாக வாசியுங்கள். சில வசனப்பகுதிகளை குறித்து வைத்துக் கொண்டு அது உங்கள் வாழ்க்கைக்கு எப்படிப் பொருந்தும் என்று பாருங்கள். நீங்கள் எதை வாசித்தீர்களோ? அதற்காக, ஜெபித்து அதை மேலும் புரிந்து, கொள்ளவும், அதன்படி வாழவும் தேவ உதவியை நாடுங்கள். திறந்த மனதுடனும், தாழ்மையான மனதுடனும், வார்த்தையினிடத்தில் வந்து, தேவன் உங்கள் மனதையும், இருதயத்தை வனையவும், உருவாக்கவும் அனுமதியுங்கள். தேவனுடைய வார்த்தையோடு அன்றாடம் ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இவ்விதத்தில் நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் தேடுகிறவராகவும், வார்த்தையின்படி செய்கிறவராகவும் ஆக முடியும், இல்லையென்றால் தேவனுடைய வார்த்தையை விட்டு தனியே பிரிந்து சென்று , தூரத்தில் நின்று வேடிக்கை பார்ப்பவராகத்தான் இருக்க முடியும். நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் தேவனுடைய வார்த்தையின் மீது ஆவலாகவும், உற்சாகமாகவும் இருக்கும் தீர்மானத்தை ஒவ்வொருவரும் எடுத்தே ஆக வேண்டும்.

---

**ஜெபிக்கும் நேரம்**

**ஒரு நாளில் மிக இனிமையான நேரம் தேவனோடு ஜெபிக்கும் நேரம் தான். ஏனெனில், அந்த நேரத்தில் தான் இவ்வுலகத்திலேயே நம்மை அதிகமாக நேசிக்கும் ஒருவரோடு பேசுகிறோம். அதுமாத்திரமல்ல. அண்ட சராசரங்களை உண்டாக்கின தேவனோடு பேசும் சிலாக்கியம் இந்த இனிமையான நேரத்தில் தான் கிடைக்கிறது (எரேமியா 33:3).**

## தேவனுடைய வார்த்தை

தேவனுடைய வார்த்தை

God `s Word

Cecil may .Jr

**தே**வனோடு பேசுவதற்கும், செயல்படுவதற்கும், தேவனுடைய வார்த்தை ஒரு வழியாகவும், கருவியாகவும் இருக்கிறது. ஆதியில் தேவன் **உண்டாக்கக்கடவது** என்று சொன்னார். அது அப்படியே ஆயிற்று (ஆதியாகமம் 1-2). எனவே, அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் (சங்கீதம் 33:9).

(யோவான் 5:18) ல் இயேசு கிறிஸ்து தம்மை தேவனுக்கு சமமாக்கினதாகச் சொல்லி யூதர்களால் குற்றஞ்சாட்டப்பட்ட போது அதை மறுத்து கிறிஸ்து பதிலளிக்கவில்லை. மாறாக, பிதா தம்மிடம் இரண்டு காரியங்களைச் செய்யும்படியாகக் கொடுத்ததாகவும், அதை தேவனால் மாத்திரம் செய்ய முடியுமென்றும் சொன்னார்; மரித்தோரை உயிர்ப்பிக்கவும். நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரத்தையும் தமக்குக் கொடுத்ததாகவும் அவர்களுக்கு தெளிவுபடுத்தினார் (யோவான் 5:21-23). இவ்விரண்டையும் நம் இரட்சகர் தம்முடைய வாயின் வார்த்தை யினாலே செய்து முடித்தார். அவருக்காகவும், பிதாவுக்காகவும் வாயின் வார்த்தையைக் கொண்டே செயல்பட்டார். நம் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய வார்த்தையின் வல்லமையினாலே காரியங்கள் நடக்கும்படி செய்தார்.


நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து (யோவான் 5:25) ல் தேவ குமாரனுடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று திட்டவட்டமாகக் அறிவித்தார். இங்கே, கிறிஸ்து ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவும், அவர்களுக்கு ஆவிக்குரிய ஜீவனைக் கொடுக்கவும் அவர் தம்முடைய வார்த்தையின் வல்லமையினாலும், சுவிசேஷத்தின் வல்லமை யினாலும் பேசினார்.

இதற்கு வலுசேர்க்கும் விதமாக, இதைக் குறித்து நீங்கள் ஆச்சரி யப்பட வேண்டாம். ஏனென்றால், பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும் அப்பொழுது

நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருகிறவர் களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் என்று சொன்னார் [யோவான் 5:28,29].

மரித்தோரை உயிரோடு எழுப்புவதற்கு அவருடைய வார்த்தையின் வல்லமையையும், அவருடைய கட்டளையையும் நாம் அறிந்திருந்தோம். லாசருவே, வெளியே வா என்று கூறி இயேசு கிறிஸ்து தமது வாயின் வார்த்தையினாலே கெட்டுப்போன பிணத்துக்கு உயிர்கொடுத்தார். இதைக்குறித்து வேத அறிஞர் marshall Keeble சொல்லும் போது இயேசு கிறிஸ்து பேர் சொல்லி லாசருவை அழைக்காமலிருந்திருந்தால் அக்கல்லறைத் தோட்டத்திலிருந்து எல்லோருமே கல்லறையைவிட்டு வெளியே வந்திருப்பார்கள் என்று சொல்கிறார்.

இதே இயேசுகிறிஸ்துவின் வல்லமையான வார்த்தைதான் நியாயத்தீர்ப்பு நாளிலே உண்மையாகவே இதுவரை மரித்த எல்லோ ரையும் கல்லறையிலிருந்து எவ்வித பேதமுமின்றி உயிரோடு எழுப்பும் என்பதை நாம் நினைவில் கொள்வோம்.




சீர்திருத்தப்பட்ட மனமாற்றமடைந்த குடிகாரர் ஒருவரை பழைய கும்பல் பார்த்து கோபப்படும் படியாக இவ்விதமாகக் கேட்டார்கள். உன் இயேசு சாதாரண தண்ணீரை கலிலேயாவிலுள்ள கானாவூரில் நல்ல திராட்ச ரசமாக மாற்றியதை நீ நம்புகிறாயா? அதற்கு அந்த திருந்திய குடிகாரர் அவர் அப்படி மாற்றினார் என்பதை நம்புகிறேன். ஏனென்றால், வேதாகமம் அப்படித்தான் சொல்கிறது. மேலும், அவர் என் வீட்டில் இருந்த பீர், விஸ்கி, போன்றவைகளை உணவாகவும், மரச்சாமான் களாகவும், துணிகளாகவும் மாற்றுவதை நான் கண்டேன் என்றார். இன்றைய நாட்களில் நம் ஜீவியங்களை மாற்றுவதற்கு அது சுவிசேஷத்தின் வல்லமையாயிருக்கிறது.

நாம் தேவனுடைய வார்த்தை என்னும் வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம் [I பேதுரு 1;23] இல் தேவனுடைய வார்த்தை வெளிச்சமாக இருந்து நம்மை வழிநடத்துகிறது [சங்கீதம் 119:105] ல்; தேவனுடைய வார்த்தை நாம் புசிக்கும் ஆகாரமாயிருக்கிறது [எபிரெயர் 5:13,14]. தேவனுடைய வார்த்தை நம்மை கட்டி எழுப்புகிறது [அப்போஸ்தலர் 20 : 32]. தேவனுடைய வார்த்தை எனும் சத்தியத்தினாலே நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக் கிறோம் [யோவான் 17:17] ல். தேவனுடைய வார்த்தைதான் நம் ஆத்துமாக்களை இரட்சிக்கும் வல்லமை பெற்றிருக்கிறது [யாக்கோபு 1:21]. இந்த தேவனுடைய வார்த்தைதான் ஒட்டுமொத்த உலகத்தையும் நியாயந்தீர்க்கும் அளவு கோலாகும் [யோவான் 12:48].

தேவனுடைய வார்த்தையை ஒருபோதும் குறைத்து மதிப்பிட வேண்டாம். தேவன் தம்முடைய வார்த்தை மூலமாக செயல்படுகிறார். இரட்சிக்கப்படவும், மாற்றமடையவும் அதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

---

## வேதாகமத்தின் பயன்கள்?

- **வேதாகமம்** *மனிதனுக்கான தேவனுடைய கடிதமாயிருக்கிறது*
- **வேதாகமம்** *நித்திய ஜீவன் தொடர்பான தகவல்களின் ஆதாரமாயிருக்கிறது*
- **வேதாகமம்** *அனுதின வாழ்க்கைக்கான வழிகாட்டியாயிருக்கிறது*
- **வேதாகமம்** *மதசம்பந்தமான காரியங்களில் ஆதாரமாயிருக்கிறது*
- **வேதாகமம்** *நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கும் சத்தியத்தைச் சொல்கிறது.*
- **வேதாகமம்** *இவ்வுலகில் நாம் எப்படி மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமென்று போதிக்கிறது.*

# தேவனுடைய வார்த்தை

## வேதாகமத்தின் படி ஏன் வாழ வேண்டும்?

## Why Live by The Bible?

Larry Murdock

**உ**ங்கள் வாழ்க்கையை இயக்க வேதாகமத்தை ஏன் நீங்கள் அனுமதிக்க வேண்டும்? வேதாகம போதனைகளின்படி வாழ்கிறவர்களை பரிகாசம் செய்வதற்கென்றே இவ்வுலகில் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படிப்பட்ட விமர்சகர்கள், வேதாகமத்தை விசுவாசிப்பவர்களைத் தவறான அபிப்பிராயத்துடன் வேதாகம வெறியர்கள், முட்டாள்கள், ஒன்றும் தெரியாதவர்கள், மற்றவர்களை தீர்ப்பு செய்கிறவர்கள் என்றெல்லாம் பரிகாசம் செய்கிறார்கள். இப்படி அவர்கள் அழைக்கும் பெயர்களிளெல்லாம் அநேகமாக மிகவும் வெறுக்கத்தக்க பெயர் சகிப்புத்தன்மை இல்லாதவர்கள் என்பது தான். வேதாகமத்தை என் வாழ்வின் வழிகாட்டும் விதியாக இருப்பதை நான் தெரிந்து கொண்டால், மேற்சொல்லப்பட்ட பெயர்களால் அழைக்கப்படும் அபாயம் உண்டு. ஆனால், ஒரு பழங்கால புத்தகம் என் வாழ்வை வழிநடத்த நான் ஏன் அனுமதிக்க வேண்டும்? நீங்கள் ஏன் அனுமதிக்க வேண்டும்?

வேதாகமத்தை தேவனுடைய வார்த்தை என்று உண்மையாகவே விசுவாசிப்பவர்கள் வேதாகம விதிகளின்படி அல்லது போதனைகளின் படி வாழ விரும்புகிறார்கள். இவர்கள் வேதாகம போதனைகள் தேவனிடத்திலிருந்து வந்தது என்று விசுவாசிக்கிறார்கள். ஜனங்கள் வேதாகம விதிகளை நடைமுறைப்படுத்தும் போது, உலகில் எந்த இடத்திலானாலும் சரி மனித நடத்தைக்கு மிகச் சிறந்த மாதிரிகளாகிறார்கள். இதுவே, வேதாகமத்தின் போதனைகளை பின்பற்றுவதற்கு நல்லதொரு காரணமாகும். ஏனென்றால், அவைகள் தான் இவ்வுலகில் நாம் வாழ்வதற்கான மிகச்சிறந்த விதிகளாக இருக்கின்றன.

***இயேசு கிறிஸ்துவின் ஊழியர் இவ்விதமாகச் சொல்கிறார்:***

உங்களில் ஞானியும், விவேகியுமாயிக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதீர்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்

சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம், பரத்திலிருந்து இரங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகீக சம்பந்தமானதும், ஜென்ம சுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ? அங்கே, கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானமோ, முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமாயும், பட்சபாத மில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.

மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதி , இயேசு கிறிஸ்துவின் மீது தன் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டிருக்கும் ஒரு கிறிஸ்தவருடைய விளக்கமாயிருக்கிறது. இதன் பொருள், கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி வாழ்கிறார்களா? இல்லை, துரதிஷ்டவசமாக தங்களை கிறிஸ்தவர் களென்று சொல்லிக் கொள்கிறார்களா? எல்லோரும் வேதாகமத்தின் படி வாழ்வதில் விசுவாசம் வைப்பதில்லை.

யாக்கோபு என்னும் ஆசிரியர் இவ்வுலகில் இரண்டு வகையான ஞானம் இருப்பதாகச் சொல்கிறார். ஒன்று பூமிக்குரிய ஞானம் மற்றொன்று, பரத்திற்குரிய ஞானம். பூமிக்குரிய ஞானம் வாழ்க்கையில் முன்னேறுவதைப் பற்றியது. இதில் எல்லாமே நான் எனும் மனப்பான்மைதான் ஓங்கி நிற்கிறது. நான் பொறாமையினாலும், சுய இச்சையினாலும், வாழ்ந்தால் உன் நடத்தை வேத வசனத்திற்குப் புறம்பானது மட்டுமல்லாமல் பேய்த்தனத்துக்கடுத்ததாக இருக்கிறது. மறுமுனையில் நான் பரத்திற்குரிய போதனைகளின்படி வாழ்ந்தால் அவைகள் சுத்தமுள்ளவைகளாயிருக்கிறது. அதாவது, பரத்திற்குரிய போதனை அல்லது ஞானம் எவ்வித சுய நலமோ அல்லது உள் நோக்கமோ இல்லாதது. மற்றவர்களுடைய ஆசைகளோடு போட்டி போடாமல் என்னுடைய நடக்கையானது சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளதாயும், நற்கனிகளால் நிறைந்ததாயும், பட்சபாத மில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது. இப்படிப்பட்ட குணதிசயங் களை உடைய ஒருவரோடு பழக உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா? நண்பரே.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டாலும், பரத்திலிருந்து வருகிற ஞானத்தின்படி, நீங்கள் ஏற்கனவே நடந்து கொள்ளுகிற நபராக

இருந்தால் வாழ்க்கையை வாழ்வதற்கான சிறந்த வழியை நீங்கள் எப்படியோ கற்றுக் கொண்டு விட்டீர்கள். உண்மையில் மற்றவர்களை நீங்கள் இவ்விதத்தில் நடத்தினால் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறார்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் எனும் பொன்விதியை நீங்கள் நடைமுறைப்படுத்துகிறீர்கள் (மத்தேயு 7:12). அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்தவர்களுக்கு இவ்விதமாக எழுதுகிறார்.

பிரியமானவர்களே! அந்நியர்களும், பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகி, புறஜாதிகள் உங்களை அக்கிரமக்கார ரென்று விரோத மாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைக்களைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப் படுத்தும்படி, நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரி களுக்கானலுஞ்சரி கீழ்ப்படிங்கள். நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல் தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். எல்லோரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள். தேவனுக்குப் பயந்திருங்கள், ராஜாவைக் கனம் பண்ணுங்கள் (I பேதுரு 2: 11–17)

நண்பர்களே! பேதுருவின் ஆலோசனை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து வந்தது. இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் எப்படி பரிகாசம் செய்யப்படுகிறார்களோ? அதேபோல், தான் அன்றைய நாட்களிலும் பரிகாசப்படுத்தப்பட்டார்கள். இருந்த போதிலும், அந்தக் கிறிஸ்தவர்கள் பரம ஞானத்தைப் பின்பற்றினார்கள். அந்த ஞானத்தை அவர்கள் தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் மூலமாக பெற்றுக் கொண்டார்கள். அது சரிதான். ஆம், இப்பூமியில் நாம் சிறந்த வாழ்க்கையை வாழ வேதாகமம் நமக்கு வழிகாட்டுகிறபடியால் நாம் அதைப் பின்பற்ற வேண்டும்.

இதே நிருபத்தின் அடுத்த அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு ஒருவர் இப்பூமியில் எவ்விதமாக வாழவேண்டுமென்று தொடர்ச்சியாக சொல்கிறார்.

மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனதுருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள். ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி நன்மை செய்து சமாதானத்தைத் தேடி தொடரக்கடவன். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது. தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது. நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால் உங்களுக்குத் தீமை செய்கிறவன் யார்? நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும், கலங்காமலும் இருந்து; கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும், உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். தீமைசெய்து பாடநுபவிப்பதிலும் தேவனுக்குச் சித்தமானால் நன்மை செய்து பாடநுவிப்பதே மேன்மையாயிருக்கும் [1பேதுரு 3:8–17].

ஆம் நண்பர்களே, வேதாகமததின்படி பாடனுவிப்பதே நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான ஒரு மாபெரும் காரணம். அது இப்பூமியில் நமக்கு மிகப்பெரிய சந்தோஷத்தையும், நம் ஆத்துமாவுக்கு மிகப்பெரிய சமாதானத்தையும் தருகிறது. நாம் வேதாகம உபதேசத்தின்படி வாழ்வதற்கான மற்றொரு காரணமும் உண்டு. அக்காரணம் மிக எளிமையானது. இப்பூமிக்குரிய வாழ்க்கைக்குப் பிறகு நமக்கு ஒரு வாழ்க்கை உண்டு. அது இவ்வுலகில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிற யாவருக்கும் பிரதிபலனாகக் கொடுக்கப்படும். வேதாகமம் இவ்வுலகில் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தை பெற்றுக்கொள்ளும்படியாக தயாராயிருக்கிறது. [அப்போஸ்தலர் 26:18]. ஒருமுறை பேதுரு இயேசு கிறிஸ்துவை நோக்கி, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே என்று சொன்னார். அதற்கு, இயேசு கிறிஸ்து பிரதியுத்திரமாக

என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமுமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக வீடுகளையும் சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மாற்கு 10:28–30).

இவ்வுலகில் ஒருவர் கிறிஸ்துவுக்காகவும், அவருடைய சுவிசேஷத்திற்காகவும் எவைகளையெல்லாம் இழக்கிறாரோ அவைகளை இவ்வுலகிலேயே நூறுமடங்காக பெற்றுக் கொள் வார்கள். அந்த நபர் வருகின்ற உலகத்தில் இன்னொன்றையும் பெற்றுக் கொள்வார். ஆம், நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்வார். இவ்வுலகில் கிறிஸ்துவின் போதனையின்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் நித்திய இருப்பிடம் காத்திருக்கிறது. நண்பர்களே, அந்த போதனைகள் எல்லாம் வேதாகமத்தில் அதிலும் குறிப்பாக புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளது.

உண்மையாகவே நித்திய ஜீவன் என்பது ஒரு மாபெரும் வாக்குத்தத்தமாயிருக்கிறது. இதைக்குறித்து பழைய ஏற்பாட்டில் மறைமுகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகமான மல்கியா தீர்க்கதரிசன புத்தகத்தில் ஆசிரியராகிய மல்கியா இவ்விதமாகச் சொல்கிறார். அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள். கர்த்தர் கவனித்துக் கேட்பார். கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும், அவருடைய நாமத்தை தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புத்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது; என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைனக் கடாட்சிக்கிறபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன். அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும், துன்மார்க்கனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள் (மல்கியா 3:16–18).

நீதிமானுக்கும், துன்மார்க்கனுக்கும் உள்ள வித்தியாசத்தை தேவன் காண்கிறார். உங்களால் வித்தியாசத்தைக் காண முடியுமா? இவ்வித்தியாசத்தை தெளிவுப்படுத்தும், ஒரே புத்தகம் வேதாகமம் தான். துன்மார்க்கனைப் பற்றி இந்த வார்த்தைகளை ஆழ்ந்து சிந்தியுங்கள். (துன்மார்க்கன்) தன் பெருமையினால் சிறுமைப்

பட்டவனைக் கொடூரமாய்த் துன்பப்படுத்துகிறான். அவர்கள் நினைத்த சதிமோசங்களில் அவர்களே அகப்படுவார்கள் (துன்மார்க்கன் ) தன் உள்ளம் இச்சித்ததைப் பெற்றதினால் பெருமை பாராட்டி பொருளை அபகரித்து தன்னைத்தான் போற்றி, கர்த்தரை அசட்டை பண்ணு கிறான். (துன்மார்க்கன்) தன் கர்வத்தினால் தேவனைத் தேடான். அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே. அவன் வழிகள் எப்போதும் கேடுள்ளவைகள்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் அவன் பார்வைக்கு எட்டாமல் மிகவும் உயரமாயிருக்கிறது; தன் எதிராளிகளெல்லார் மேலும் சீறுகிறான். நான் அசைக்கப் படுவதில்லை, தலைமுறை தலைமுறை தோறும் தீங்கு என்னை அணுகுவதில்லையென்று தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவன் வாய்சபிப்பினாலும், கபடத்தினாலும், கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது. அவன் நாவின் கீழ் தீவினையும், அக்கிரமும் உண்டு. கிராமங்களின் ஒளிப்பிடங்களிலே பதிவிருந்து, மறைவிடங்களிலே குற்றமற்றவனைக் கொல்லு கிறான். திக்கற்றவர்களைப் பிடிக்க அவன் கண்கள் நோக்கிக் கொண்டிருக்கிறது. தன் கெபியிலிருக்கிற சிங்கத்தைப் போல் மறைவில் பதிவிருக்கிறான்; ஏழையைப் பிடிக்கப் பதிவிருந்து ஏழையைத் தன் வலைக்குள் இழுத்தும் பிடித்துக் கொள்ளுகிறான். திக்கற்றவர்கள் தன் பலவான்கள் கையில் விழும்படி அவன் பதுங்கிக் கிடக்கிறான். தேவன் அதை மறந்தார் என்றும் அவர் தம்முடைய முகத்தை மறைத்து ஒருக்காலும் அதைக் காணமாட்டார் என்றும் தன் இருதயத்திலே சொல்லிக் கொள்ளுகிறான். கர்த்தாவே, எழுந்தருளும், தேவனே, உம்முடைய கையை உயர்த்தும்; ஏழைகளை மறவாதேயும் (சங்கீதம் 10:2-12).

பரலோகத்தின் தேவன் ஏழைகளையும் மறக்கமாட்டார். அதே நேரத்தில் துன்மார்க்கரையும் மறக்கமாட்டார். இரண்டு வகையான வாழ்க்கை முறைகள் - இரண்டு வித்தியாசமான அல்லது வேறுபட்ட வாழ்க்கை முறை. ஒருவர் நேர்மையான நபர், இன்னொருவர் பொய்யர். ஒருவர் கொடுக்கிறவர், இன்னொருவர் எடுக்கிறவர். அதே போல், ஒருவர் சுயநலவாதி, மற்றொருவர் பிறர்மீது அக்கறைக் கொண்டு அவர்களுக்கு உதவுபவர். அதே போல், ஒருவர் ஒரு ரூபாய்க்காக கூட இச்சிக்கிறவர். மற்றொருவர் தன்னிடம் இருக்கும் கடைசி ரூபாயைக் கூட தேவையில் இருப்பவர்களுக்குக்

கொடுப்பவர். இப்படி ஒவ்வொருவருடைய வாழ்க்கை முறையை அடுக்கிக் கொண்டே போகலாம். ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரை யொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக (பிலிப்பியர் 2:3,4).

இரண்டு வகையான வாழ்க்கை முறைகள் – இரண்டு வகையான சேருமிடங்கள். வாழ்க்கைக்கான வழிகாட்டியாக வேதாகமத்தை நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? உங்கள் இரட்சிப்பின் அதிபதியாக இயேசு கிறிஸ்து இருக்கட்டும். அவரில்லாமல் அடுத்த உலகத்தை நீங்கள் எதிர்கொள்ளவேண்டாம். வேதாகமத்தில் மாபெரும் போதனைகள் நம்பப்பட்டு போதிக்கப்படுகிறது. அவற்றை அறிந்துகொள்ள உங்கள் அருகாமையிலுள்ள கிறிஸ்துவின் சபைக்குச் செல்லுங்கள். ✝

## பேழையும், சபையும்

| **வேதாகமம்** | **பேழை** | **சபை** |
|---|---|---|
| கட்டினவர் ஒருவரே | நோவா ( ஆதி 6 : 13 – 22 ) | கிறிஸ்து ( மத் 16 : 18 ) |
| ஒரே பொருள் | கொப்பேர் மரம் ( ஆதி 6 : 14 ) | ஜீவனுள்ள கற்கள் ( I பேதுரு 2 : 5 ) |
| ஒரே வெளிச்சம் | ஜன்னல் ( ஆதி 6 : 16 ) | வேதாகமம் ( சங்கீதம் 119 : 105 ) |
| ஒரே வாசல் | கதவு ( ஆதி 6 : 16 ) | கிறிஸ்து ( யோவான் 10 : 9 ) |
| ஒரே குடும்பம் | நோவாவின் ( ஆதி 6 : 18 ) | தேவனின் ( கலாத் 3 : 10 ) |
| ஒரே பெயர் | நோவாவின் ( ஆதி 6 : 18 ) | கிறிஸ்தவன் ( அப் 11 : 26 ) |
| ஒரே கட்டடம் | பேழை ( ஆதி 6 : 14 ) | சபை ( எபேசியர் 3 : 10 ) |
| ஒரே இரட்சிப்பு | பேழையில் ( ஆதி 7 : 21 – 23 ) | கிறிஸ்துவிலும் மற்றும் சபையிலும் ( அப் 2 : 47 ) |
| ஒரே அழிவு | எல்லாமே பேழைக்கு வெளியே ( ஆதி 7 : 21 ) | எல்லாமே கிறிஸ்துவின் சபைக்கு வெளியே ( II தெச 1 : 7 – 9 ) |
| ஒரே நம்பிக்கை | புதிய உலகம் ( ஆதியாகமம் 8 ) | நித்திய ஜீவன் ( I பேதுரு 1 : 34 ) |

## இரட்சிப்பு

# நியாயத்தீர்ப்பில் ஐந்து வகையான மக்கள்

# Five Groups at the Judgment

E. Clande Gardnet

என் மனதை அதிகமாக ஆட்கொண்ட விஷயம் என்னவென்றால்? அது நியாயத்தீர்ப்பிலே நான் தேவனை எதிர்கொள்ள வேண்டும் என்பதாகும். இவ்வார்த்தைகள் பிரசித்திப்பெற்ற அமெரிக்க ராஜதந்திரியாகிய Danle Webster என்பவரால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகளாகும். ஒவ்வொரு இருதயமும் இவ்விதமான நேர்மையான வார்த்தைகளை வெளிப்படுத்த வேண்டும். ஆம், அழைப்பு வரும்போது நாம் நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ளவேண்டும்.

தேவனால் நியமிக்கப்பட்ட நேரத்தில் நியாயத்தீர்ப்பு நிச்சயமாக உண்டு. அன்றியும் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே (எபிரெயர் 9:27). யாரும் தனிமைப்படுத்தப்பட்டு நியாயத்தீர்ப்புக்குத் தப்பமுடியாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள் என்று பிரசங்கித்தார் (மத்தேயு 25:32). அந்த நாளிலே அமெரிக்கர்களும், எல்லா தேசத்தாரும் ஒன்று சேர்க்கப் படுவார்கள். மனிதர்கள் யாருமே தப்ப முடியாது. ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாய சனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (II கொரிந்தியர் 5:10). ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தினருக்காக அல்லது நண்பர்களுக்காக பதில் கொடுக்க முடியாது, அதேபோல் யாரும் தங்கள் கணவனையோ அல்லது மனைவியையோ, தகப்பனையோ, தாயையோ குற்றஞ்சாட்ட முடியாது. இது மற்றவர்களை நூறு சதவீதம் முழுமையாக நம்புகிறவர்களுக்கு மிகப்பெரிய அச்சமாக இருக்கும்.

### பரலோகம் மற்றும் நரகம்

இயேசு கிறிஸ்து இறுதியாக இரு சேருமிடங்களை அறிவித்தார். பரலோகம் மற்றும் நரகம். அந்த உலகளாவிய நியாயத்தீர்ப்பின்போது எல்லா காலத்திலுமுள்ள எல்லோரும் இருப்பார்கள். கிறிஸ்து மனித இனத்தை இரண்டு நித்திய இடங்களுக்குப் பிரிப்பார். யாவருக்கும் என்ன நடக்குமென்று அவர் ஏற்கனவே அறிவித்துவிட்டார். அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்

(மத்தேயு 25:46). நல்ல இடமும், மோசமான இடமும் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நித்திய தண்டனையும், நித்திய ஜீவனும் ஒரே கால அளவைக் கொண்டது. அதாவது, பரலோகமும் நரகமும் முடிவே இல்லாதவைகள் இரண்டுமே நித்தியமானவைகள்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரு வேறுபட்ட வழிகளை ஒப்பிட்டு பரலோகம் மற்றும் நரகத்தைப் பற்றி தெளிவாக விளக்கி யுள்ளார். இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமா யிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் (மத்தேயு 7:13,14).

உலகத்தின் முடிவின்போது ஒருவன் நித்திய இடங்களில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதில் ஐந்து வகையான மக்கள் அல்லது குழுக்கள் இருப்பார்கள். எந்த குழுவில் ஒருவர் இடம் பெறுகிறார் என்பதை அந்த நபரே தெரிந்தெடுக்கும் உரிமை அவருக்கு கொடுக்கப்படுகிறது. அந்த ஐந்து வகையான குழுக்கள் அல்லாத பிரிவினர், குழந்தைகள், எம்மதத்திலும் இல்லாதவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டவர்கள், கிறிஸ்துவின் சபையின் உண்மையற்ற அங்கத்தினர்கள் மற்றும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள்.

**குழந்தைகளும், பொறுப்பில்லாதவர்களும்**

குழந்தைகளும், மனரீதியாக வளர்ச்சி அடையாதவர்களும் இழந்து போகாதவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள். அப்படியென்றால், கிறிஸ்து மூலமாய்க் அவர்களுக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது? கிறிஸ்து மூலமாக அவர்களுக்கு உயிர்த்தெழுதலில் உத்திரவாதம் உண்டு. ஆதாமுக் குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார் (I கொரிந்தியர் 15:22). குழந்தைகளிதனிடத்தில் பாவம் இல்லாதபடியால் அவர்களுக்கு பாவ மன்னிப்புத் தேவை இல்லை. அவர்கள் ஆதாமின் பாவத்தை சுதந்தரிப்பதில்லை. ஏனென்றால், பாவம் என்பது ஒரு செயல். அது, ஒரு சுதந்தரமல்ல. அப்போஸ்தலனாகிய யோவான் இதைத் தெளிவுபடுத்துகிறார். பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (I யோவான் 3:4) என்கிறார்.

ஒரு பச்சிளங்குழந்தை பிறக்கும் போது தன்னகத்தே பாவத்தைக் கொண்டு பிறக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கவே அருவருப்பாகவே இருக்கிறது. ஒரு குழந்தை பாவத்தில் பிறக்கிறது என்னும் உபதேசம் புகழ் பெற்ற புராட்ஸ்டென்ட் சீர்திருத்தவாதி John Calvin ஆல் போதிக்கப்பட்டது. அவர் இந்த தவறான உபதேசத்தை 1600 களில்

எல்லா இடங்களிலும் பரப்பினார், அது இன்று தற்காலிக மார்க்கப் பிரிவினைக் கூட்டங்களிலும் பரந்து விரிந்து கிடக்கிறது. John Calvin ன் இந்த உபதேசத்திற்கு David Hester என்பவர் ஒரு விளக்கத்தைக் கொடுக்கிறார்.

John Calvin என்பவர் எல்லா குழந்தைகளும் பாவத்தில் பிறந்திருக்கிறது என்றும் அந்தத்தன்மை மாற்றப்பட வேண்டு மென்றும் நம்பினார். அவர் தன்னுடைய கொள்கைப் புத்தகத்தில் குழந்தைகள் தங்கள் தாயின் கருவிலேயே பாவத்தை சுமந்து விடுகின்றன. உண்மையாகவே, குழந்தைகளின் ஒட்டுமொத்த தன்மையும் பாவ விதையாக இருப்பதால் குழந்தைகள் தேவனுடைய பார்வையில் அருவருப்பாக இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாக சுத்திகரிக்கப்பட வேண்டும். ஏனென்றால், தீட்டுள்ள எதுவும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாதே என்று எழுதியிருக்கிறார்.

குழந்தைகளால் விசுவாசிக்க முடியவில்லையென்றால், அவர் களால் ஞானஸ்நானம் பெற முடியாது. இயேசு கிறிஸ்துவினிடத்தில், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான் (மாற்கு 16:16).

**கிறிஸ்தவர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்ளாதவர்கள்**

திரளான மக்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்ற சொல்லிக் கொள்வதில்லை. அவர்களுடைய நிலைமை என்ன? அவர்களுடைய நித்திய உறைவிடம் என்னவாயிருக்கும்?

தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும் விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும் அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (IIதெசலோனிக் கேயர் 1:7-10).

இவர்கள் ஏன் வேதாகம உபதேசத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவதில்லை? இவர்கள் தாங்கள் வேதாகமத்திற்குக்கீழ்ப்படிய

அவசியமில்லை என்று நினைத்திருக்கலாம், அதே போல், தாங்கள் சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படிய அவசியமில்லை என்று நினைத் திருக்கலாம். ஆனால், ஒட்டுமொத்த மனித இனமும் தேவனுக்கு கணக்குக் கொடுக்கவேண்டும். எல்லோரும் மனந்திரும்ப வேண்டியது அவசியமாயிருக்கிறது. அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார், இப்பொழுதோ, மனந்திரும்ப வேண்டு மென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளை யிடுகிறார் (அப்போஸ்தலர் 17:30).

ஜனங்கள் ஏன் இழந்துபோகிறார்கள்? தாங்கள் கேட்ட சுவிசேஷத்தை நிராகரித்ததினால் இழந்து போயிருக்கிறார்களா? சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய அவர்கள் மறுக்கும்போது இழந்து போவார்கள் என்பது உண்மையாக இருந்தாலும் கூட அவர்கள் இழந்த போனதற்கான அடிப்படைக் காரணம் அவர்கள் பாவம் செய்தது தான். சுவிசேஷம் ஜனங்கள் இழந்துபோகும்படி கொடுக்கப்படவில்லை. மாறாக, அவர்கள் பாவிகளாயிருக்கிறபடியால் அவர்கள் பாவத்தில் இழந்து போகாதபடிக்கு அவர்களுக்கு சுவிசேஷக் கயிற்றை நீட்டி காப்பாற்ற வேண்டும். அவர்கள் பாவத்தில் மூழ்கிப் போயிருக்கிறார்கள், அவர்களுக்கு விடுதலை அவசியமாயிருக்கிறது. மூழ்கும் நிலை மையில் இருக்கும் ஒருவருக்கு சுவிசேஷம் அருமருந்தாய் அமைகிறது. தேவனை அறியாத மக்கள் ஏன் இழந்து போகிறார்கள். அவர்களுக்கு ஏன் சுவிசேஷம் அவசியமாகிறது எனும் கேள்விக்கு இது பதிலாக இருக்கிறது. அவர்கள் மூழ்கும் நிலையில் பாவத்தில் இருக்கிறார்கள். இவர்களைப் காப்பாற்ற சுவிசேஷக் கயிற்றை நீட்ட வேண்டும்.

**தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டவர்கள் :**

தங்களை பக்திமான்களாகப் பாவித்துக் கொண்டு நாங்களும் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளும் ஒரு கூட்டம் இவ்வுலகில் உண்டு. இதில், வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், இந்த பக்திமான்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதில்லை. அவர்கள் தங்களை சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியச் சொல்லும் வேதாகம உபதேசத்திற்கு பல விளக்கங்களைக் கொடுத்து தப்பித்துக் கொள்கிறார்கள் (மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38; I பேதுரு 3:21). இயேசுவின் நாமத்தில் நாங்கள் அதைச் செய்தோம். இதைத் செய்தோம் என்று சொல்கிற ஒரு கூட்டம் உண்டு என்று நம் கர்த்தரே சொல்லியிருக்கிறார். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின் படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேய ல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று

சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருகாலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் [மத்தேயு 7:21-23].

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நான் ஒருக்காலும், உங்களை அறியவில்லை என்று சொன்னதைக் கவனியுங்கள். நாம் [மத்தேயு 7:21] யை தொடர்ந்து போதிப்பது அவசியமாயிருக்கிறது. நாம் நீதிபதிகள் அல்ல. கிறிஸ்துவே நீதிபதி அல்லது நியாயாதிபதியாக இருக்கிறார். என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாத வனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் [யோவான் 12:48].

**ஏற்கனவே கிறிஸ்தவர்களாக இருந்தவர்கள்:**

இவர்கள் ஒரு காலத்தில் உண்மையாகவே, சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து சில காலம் உண்மையான கிறிஸ்துவ வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் தான். இவர்கள் மனப்பூர்வமாக மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றவர்கள்தான். இவர்கள் பவுல் சொன்னது போல் நடந்து கொண்டார்கள். முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப் பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் [ரோமர் 6:17]. ஆனால், சில காலத்திற்குப் பிறகு அவர்கள் தங்கள் உண்மையான அறிக்கையிலிருந்து திரும்பி நம்பிக்கையற்ற உலகத்திற்குப் போனார்கள். கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப் பட்டால், அவர்களுடைய பின்னிலைமை, முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும் [II பேதுரு 2:20]. ஒருவர் கிறிஸ்தவ நடையைத் தொடங்கும் போது, கர்த்தருக்காக வேலை செய்வது அவசியமா யிருக்கிறது. பலர் ஆரம்பத்தில் கிறிஸ்துவுக்கு விசுவாசமாயிருப்பேன் எனும் உறுதிமொழியை புதுபித்துக்கொள்ள வேண்டும்.

தேவனுடைய வார்த்தைக்கு அடங்காதவர்களுக்கும் அக்கறையில்லாதவர்களுக்கும் தேவன் மன்னிப்பின் திட்டத்தை வைத்திருக்கிறார். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்

பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார் [I யோவான் 1:7]. ஒருவர் மனந்திரும்பி ஜெபிக்க வேண்டும். ஆகையால், நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள். ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் [அப்போஸ்தலர் 8:22].

**உண்மையாக இருந்தவர்கள்**

இவர்கள் தான் சபை ஸ்தாபிக்கப்பட்ட அன்று கீழ்ப்படிந்த அந்த மூவாயிரம் பேரின் மாதிரியைப் பின்பற்றியவர்கள்.

ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே, தேவனும் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றார். இதை அவர்கள் கேட்ட பொழுது இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் , நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டா யிருக்கிறது. என்று சொல்லியவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் [அப்போஸ்தலர் 2:36-39, 47]. இவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைக் சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்று மகிழ்ச்சியாக வரவேற்கப் படுவார்கள் [மத்தேயு 25:34].

**எந்த குழு**

நியாயத்தீர்ப்பில் ஒன்று சேர்க்கப்படும் ஐந்து வகையான மக்களில் நீங்கள் எந்த வகையைச் சேர்ந்தவர்கள் என்பதை குறித்து ஆழ்ந்து சிந்திப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாம் உண்மையுள்ள கிறிஸ்தவர்களோடு சேரும் முடிவை எடுப்போமாக. ✝

**இரட்சிப்பு**

# தேவனால் கோணலாக்கப்பட்டது

# Bent by God

Denny Petrillo

**தே**வனுடைய செயலைக் கவனித்துப்பார்; அவர் கோணலாக்கினதை நேர்மையாக்கத்தக்கவன் யார்? [பிரசங்கி 7:13]. இங்கே சாலொமோன் தேவனுடைய கிரியைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கும்படியாக அழைப்பு விடுக்கிறார். தேவன் சிருஷ்டிப்பில் செய்திருக்கிற காரியங்கள் ஆழ்ந்து சிந்திக்கத் தகுந்தது. ஏனென்றால், அவைகளிலிருந்து நாம் அநேக காரியங்களைக் கற்றுக் கொள்ள முடியும். ஞானி தன் வாழ்க்கையில் பெரும்பாலும் தேவனுடைய செயலை ஆழ்ந்து கவனித்திருக்கிறார். அவர் அப்படிச் செய்தபோது கீழ்க்காணும் உண்மைகளை உற்றுக் கவனித்தார்.

**முதலாவது தேவன் கோணலாக்கியிருக்கிற காரியங்கள் உண்டு.**

தேவன் இவ்வுலகத்தை உண்டாக்கின போது, சில மாறாத விதிகளையும் நிலைநிறுத்தினார். பறவைகளுக்கு காற்றுத்தேவை, மீன்களுக்கு தண்ணீர் தேவை, மனிதனுக்கு உணவு தேவை, பிழைப்பது அல்லது உயிர் வாழ்வது மேற்சொல்லப்பட்ட காரியங்களை அடிப்படையாக வைத்துதான் அமைகிறது.

இருப்பினும், தேவன் சில காரியங்களை கோணலாக்கியிருக் கிறார் என்பதன் பொருள் என்ன? தெய்வீகத்திட்டத்தின் நிலைகளிலும் சிலகாரியங்களை கோணலானவைகளாக இருக்கின்றன. அவைகள் எப்போதும் கோணலானவைகளாகவே இருக்கின்றன. ஏற்கனவே சாலொமோன் ஞானி கோணலானதை நேராக்கக்கூடாது; குறைவானதை எண்ணி முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார் [பிரசங்கி 1:15]. மனிதர்கள் முட்டாள்தனமாக சிலவேளைகளில் தேவனுடைய திட்டங்களை மாற்றுவதற்கு தங்களுக்க உரிமை அல்லது அதிகாரம் இருப்பதாக நம்புகிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிடம் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்க வேண்டுமென்று புத்திமதி சொன்னார் [II தீமோத்தேயு 2:15]. இன்றைய நாட்களில் ஜனங்கள் தேவனுடைய மாறாத ஆவிக்குரிய உண்மைகளை கண்டுபிடிக்க தேவனுடைய வார்த்தையைப் படிக்க வேண்டுமென்று உணர்ந்திருக்கிறார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் (ரோமர் 7:7,8) வசனங்களில் இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று தனக்கு தெரிந்திருக்காது என்று சொல்கிறார். இங்கே, தேவன் இச்சையை கோணலானவையாக அறிவித்திருக்கிறார். நாம் வேதாகமத்தை ஆழ்ந்து சிந்தித்துப் படித்தால் தான் தேவன் கோணலாக்கினவைகளை நாம் புரிந்து கொள்ள முடியும்.

**இரண்டாவது மனிதன் நேராக்க நினைக்கும் சில காரியங்கள்.**

தேவன் சில மாறாத ஆவிக்குரிய விதிகளை வைத்திருக்கிறார் என்பதை மனிதன் அறிந்திருந்தாலும் கூட அவன் அவைகளை மாற்றவும் நீக்கவும் முட்டாள்தனமாக முயற்சிக்கிறான். மனிதன் தேவன் வகுத்த சட்டதிட்டங்களின் கீழ் வாழ விரும்பாத படியால் அவன் அப்படிச் செய்கிறான். இயேசு கிறிஸ்து இவ்வகையான மக்களைப் பற்றி பேசியிருக்கிறார். பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியை பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டுபிடிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான் (யோவான் 3:20). தேவன் ஏற்கனவே இந்தக் கிரியைகளை வெளியரங்கப்படுத்திவிட்டார். அவைகள் கோணலானவைகளாயிருக்கிறது. அவைகள் தீங்கானவைகளாயிருக்கின்றன. மனிதர்களால் என்ன செய்ய முடிந்தாலும் எத்தனை மனிதர்கள் செய்தாலும் சரி தேவன் கோணலாக்கினதை நேராக்க முயற்சிப்பது முற்றிலும் தவறானது, தேவன் கோணலாக்கினதை நேராக்க நினைப்பவர்கள் மீது தயை பாராட்டுவதில்லை. தீமையை நன்மையென்றும், நன்மையை தீமையென்றும் சொல்கிறவர்களுக்கும் ஐயோ (ஏசாயா 5:20). ஓரினச்சேர்க்கையும் கருக்கலைப்பும் எத்தனை பேர் அது நல்லது என்று சொன்னாலும் பாவம் தான்; திருமணத்திற்கு முந்தைய உறவு எப்படிப்பார்த்தாலும் தவறே. பல மனிதர்கள் அது நல்லது தான் என்று ஆதரவாகப் பேசினாலும் அது பாவமே.

எல்லா மனிதர்களும் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனை எதிர்கொள்ள வேண்டும் என்பது உண்மையாயிருக்கிறபடியாலும் (வெளிபடுத்தின விசேஷம் 20:11-14) எல்லோரும் தேவனுடைய கட்டளைகளுக்கு எப்படி கீழ்ப்படிந்தார்கள் என்பதை அடிப்படையாக வைத்து நியாயந்தீர்க்கப்படப் போகிறபடியாலும் கோணலாக்குகிறது. நேராக்குகிறதெல்லாம் தேவனுடைய வேலை. அதனால், தான், சாலொமோன் ஞானி அவர் கோணலாக்கினதை நேர்மையாக்கத் தக்கவன் யார்? என்று கேள்வி கேட்கிறார். இதற்கான பதில் யாருமே இல்லை! அப்படி முயற்சிக்கிறவர்களுக்கு ஐயோ!

## இரட்சிப்பு

# நியாயத்தீர்ப்பில் இருக்காத சில காரியங்கள்

# Something That Will Not be at the Judgment

Denny Petrillo

நியாயாசனம் எப்படி இருக்கும்? நியாயாதிபதியாகிய கிறிஸ்து எப்படி இருப்பார்? அந்த நியாயத்தீர்ப்பை நாம் நம்முடைய கண்களால் பார்த்து அனுபவிக்க முடியுமா? இவ்வாழ்க்கையிலிருந்து அங்கே என்ன வித்தியாசமாக இருக்கும்? எது மாற்றப்படும்?

வேதாகமம் கணக்கொப்புவிப்பதைப் பற்றி பல இடங்களில் பேசியிருக்கிறது. மரித்த நீதிமான்களும், துன்மார்க்கரும், உயிரோடிருக்கிறவர்களும் [யோவான் 5:28–29; மத்தேயு 25:31–33]. சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயா சனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் [II கொரிந்தியர் 5:10] நியாயத்தீர்ப்பு நாள் இவ்விதமாக இருக்கும் என மனச் சித்திரத்தை தீட்ட முயற்சிக்கும் போது சில காரியங்களை நம் மனக்கண்களுக்குள் கொண்டு வரக்கூடாது. ஏனென்றால், அவைகளெல்லாம் அங்கே இருக்காது.

**நியாயத்தீர்ப்பில் அவிசுவாசி யாரும் இருக்கமாட்டார் [பிலி. 2:10–11]**

பரலோகத்தைப் பற்றி யோவான் விவரிக்கும் போது இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக்காணும், அவரை குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள், பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள் [வெளிப்படுத்தின விசேஷம் 1:7]. அவிசுவாசத்தைத் தொடர யாரும் அனுமதிக்க மாட்டார்கள், அவிசுவாசம் என்பது நிரந்தரமாக கடந்த காலமாகத் தான் இருக்கும். தேவனைப்பற்றியும், தேவனுடைய வார்த்தைகளைப் பற்றியும் பரிகாசம் செய்பவர்கள் அங்கே இருக்கமாட்டார்கள். அங்கே சந்தேகப் பேர்வழிகளோ, தேவன் இருப்பதை அறிந்து கொள்ள முடியாது என்று சொல்பவர்களோ, அவிசுவாசிகளோ இருக்கமாட்டார்.

**நியாயத்தீர்ப்பில் பூமிக்குரிய பொக்கிஷங்கள் எதுவும் இருக்காது [II பேதுரு 3:10]**

இப்பூமியிலுள்ள மக்கள்தான் சதா பொக்கிஷங்களைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். நம் கர்த்தர் இப்பூமிக்குரிய வஸ்துக்கள் அழிவுள்ளவைகள் என்று அழைக்கிறார் [II பேதுரு 1:18]. இவ்வுலகில் ஜனங்கள் தங்களுக்கு சௌகரியம், சமாதானம், சந்தோஷம் கிடைக்க வேண்டுமென்பதற்காக சரீரப்பிரகாரமான வஸ்துக்களை தேடி அலைகிறார்கள். நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் இப்பூமிக்குரிய வஸ்துக்களை எப்படிக் கையாண்டோம் என்பதைக் குறித்து கணக்கொப்புவிக்க வேண்டும். நாம் தேவனை வஞ்சித்தோமா? என்ற கேள்விக்கு ஆம் அல்லது இல்லை என்று மாத்திரம் பதிலளிக்க வேண்டும் [மல்கியா 3:8], ஆனால், எந்த ஒரு மனிதனாலும் இப்பூமியில் சேர்த்து வைத்த சம்பத்துக்களை மரியாதையையும், மதிப்பு மிக்க நியாயசங்கத்தினிடத்தில் கொண்டு வர முடியாது.

**நியாயத்தீர்ப்பில் தவறான விசாரணை எதுவும் நடைபெறாது [அப்போஸ்தலர் 17:31].**

நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே [ரோமர் 14:10] நியாயாசனத்திற்கு முன்பாக நின்று நம்முடைய கிரியைகளைக் குறித்து கணக்கொப்புவிக்க வேண்டும். சத்தியத்தின்படி நியாயத்தீர்க்கிற [யோவான் 8:16], நீதியாய் நியாயந்தீர்க்கிற [அப்போஸ்தலர் 17: 31], ஆயத்தமாயிருக்கிற [I பேதுரு 4:5]. பட்சபாதமே இல்லாத [எபேசியர் 6:9] பரலோகத்திலுள்ள ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளின்படியே [வெளிப்படுத்தின விசேஷம் 2.:12] இயேசு கிறிஸ்து நீதியாய் நியாயந்தீர்ப்பார் [யாக்கோபு 1:25]. சட்டப்படி யாரும் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க முடியாது. சட்டபுத்தகம் மூடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்ட பின் சட்டத்தில் ஏதாவது ஓட்டையைக் கண்டுபிடித்து அல்லது விசாரணையில் ஏதாவது தவறை கண்டுபிடித்து தப்பித்துக்கொள்ள முடியாது.

**நியாயத்தீர்ப்பின் போது எந்த இரகசியமும் இருக்காது [ரோமர் 2:16].**

தேவன் ஒவ்வொரு மனிதனுடைய இரகசிய பாவங்களையும் அறிந்திருக்கிறார் [சங்கீதம் 90:8]அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் [பிரசங்கி 12:14]. தேவன்

தூரத்திற்கும் தேவனாயிருக்கிறார்; [எரோமியா23:23]; அவர் ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார் [ தானியேல் 2;22]. தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத் தீர்ப்புக் கொடுப்பார். அந்நாளிலே இது விளங்கும் [ரோமர் 2:16]. அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். [எபிரெயர் 4:13].



**நியாயத்தீர்ப்பின் போது ஞானஸ்நானத்தொட்டி எதுவும் இருக்காது.**

பெரும்பாலான மக்கள் கழுவப்படாமலும், பரிசுத்தமாக்கப் படாமலும், நீதிமானாக்கப்படாமலும் நித்தியத்திற்குள் போவார்கள் [I கொரிந்தியர் 6:11]. மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் பிரிக்கிறது போல சுவிசேஷத்திற்கு முழுமையாக கீழ்ப்படிந்த நபர் முக்கியத்துவம் பெறுவார் [I பேதுரு 3:21; ரோமர் 6:3 –4; கொலோ 2:12; ரோமர் 6:34; கொலோ 2:12, அப்போஸ்தலர் 22:16; மாற்கு 16:16] நியாயத்தீர்ப்புநாளிலே ஞானஸ்நானம் பெறுவதை தவிர்த்தவர்கள், தள்ளிப்போட்டவர்கள் கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கும் போது அவருடைய இரத்தத்தினாலே கழுவப்படாததைக் குறித்து கவலைப்படுவார்கள்.

**நியாயத்தீர்ப்பின் போது அழைப்புப் பாடல் எதுவும் இருக்காது**

எக்காளம் ஊதப்படும் போது சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும்படி யாரையும் சம்மதிக்கப்பண்ணும்படி எந்தப் பிரசங்கமும்

பிரசங்கிக்கப்படமாட்டாது. அனலும் இல்லாத, குளிருமில்லாத கிறிஸ்தவர்களை தக்கவைக்க அவர்களிடம் யாரும் மன்றாடப் போவதில்லை. சபைகளில் பாடல்களை வழி நடத்துபவர்கள் இறுதியில் பாடல் ஒன்றைப் பாடி பாவிகளை மனந்திரும்ப அழைப்பது போன்ற ஒரு காட்சி அங்கே இருக்காது. தேவனுடைய வல்லமை யினாலே ஏராளமான இருதயங்கள் உருகிப்போம். கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தமில்லாதவர்கள் மிகவும் கலங்குவார்கள். அநேகமாக பலர் இரண்டாம் வாய்ப்புக்காக கதறுவார்கள். ஆனால், கடைசி வாய்ப்பு கிடைக்காது.

நீதியான நியாயத்தீர்ப்பை ஒவ்வொருவருக்கும் வழங்க நீதியுள்ள நியாயதிபதி அங்கே இருப்பார், எல்லோரும் கணக்கொப்புவிக்க வேண்டும். நித்தியத் தீர்ப்பு என்பது கிறிஸ்துவின் தியாகத்தை ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அமையும். அங்கே ஜாமீனில் வெளியே வருவதோ அல்லது மன்னிப்போ சாத்தியமே இல்லாத ஒன்றாகும். அவருடைய வலது பாரிசத்தில் நிற்க நமக்கு அபரிதமான கிருபை அவசியப்படுகிறது. அந்த கிருபை நமக்கு எப்படி நீட்டிக்கபடுகிறது என்பதைப்பற்றி வேத வாக்கியங்கள் நமக்குச் சொல்கின்றன. நாம் அதற்காக இந்த வாழ்க்கையில் ஆயத்தமாக வேண்டும் (எபிரெயர் 9:27). ✝

---

**சமுதாயங்கள் காரியங்களை தலை கீழாக மாற்றுகிற பிரச்சனை எப்போதுமே இருந்து வருகிறது. தேவனுடைய ஜனங்கள் கூட அப்படிச் செய்திருக்கிறார்கள். எரேமியாவின் நாட்களில் குழந்தைகளைக் கூட பலியாக கொடுத்திருக்கிறார்கள். கிறிஸ்துவுக்கு முன்பு சுமார் 700**




**ஆண்டுகளுக்கு முன்பு ஏசாயாவின் நாட்களில் ஏசாயா இவ்விதமாகச் சொன்னார். தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாக பாவித்து, கசப்பைத் தித்திப்பென்றும், தித்திப்பைக் கசப்பென்றும் சாதிக்கிறவர்களுக்கு ஐயோ! (ஏசாயா 5:20). தேவனுடைய ஒழுக்க நெறிகள் மறக்கப்படும் போது மனித இனம் எவ்வளவு மோசமான நிலைக்கு தள்ளப்படும் என்று சில வேளைகளில் நாம் சிந்திக்கத் தவறுகிறோம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் மக்கள் அழைக்கும் காலகட்டங்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா?**

# கொரிந்து பட்டணத்து சபை

## The Church at Corinth

Dennis Gulledge



**கொ**ரிந்து பட்டணத்து சபை எல்லா கிறிஸ்துவின் சபைகளைப் போல்தான் தொடங்கப்பட்டது. அப்போஸ்தலர் 18:8 இல் இவ்விதமாகச் சொல்கிறது. ஜெப ஆலயத்தலைவனாகிய கிறிஸ்து என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான். கொரிந்தியரில் அநேகர் சுவிசேஷத்தைக்கேட்டு விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள். இதிலிருந்து நாம் எதைக் கற்றுக்கொள்கிறோம்? இந்த நிருபம் யாருக்கு எழுதப்பட்டது என்பதை நாம் அறிந்திருக்கிறோம் – ஆம், கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. சுவிசேஷத்தோடு அவர்களுக்கு எப்படி தொடர்பு ஏற்பட்டது? கேள்விப்படுவதினாலே (ரோமர் 10:17). அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபோது அவர்கள் அதற்கு எப்படி பதிலளித்தார்கள். – அவர்கள் அதை விசுவாசித்தார்கள். சுவிசேஷத்தை விசுவாசித்த பிறகு அவர்கள் என்னச் செய்தார்கள்? ஞானஸ்நானம் பெற்றார்கள் (மாற்கு 16:15-16). விளைவு என்ன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கிறிஸ்தவர்கள் கொரிந்துவிலே ஓரிடத்தில் தேவனை ஆராதிக்கும்படியாக கூடினார்கள்.அவர்கள் சுவிசேஷத்தினாலே பரிசுத்தவான்களாகும்படி இருந்தார்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் ஐக்கியத்தில் இருந்தார்கள்(I கொரிந்தியர் 1:9)

இதன் பொருள் கொரிந்து சபையில் எல்லாம் நன்றாகப் போய்க் கொண்டிருந்து என்று காணப்படுமா? கொரிந்து சபையிலே காரியங்கள் நன்றாகப் போகவில்லை. இன்றைய நாட்களிலே சில சபைகளில் பிரச்சனைகள் இருப்பது போல, கொரிந்து சபையிலும் பல பிரச்சனைகள் இருந்தன. அந்தச் சபையார் மிகவும் பிரச்சனைக் குரியவர்களாயிருந்தார்கள். நம் ஆண்டவரும், பவுலும் ஏன்? அவ்வளவு பொறுமையாக அவர்களிடத்தில் இருந்தார்கள் என்று நாம் ஆச்சரியப்படலாம். பவுல் ஒரு அப்போஸ்தலனாகவும் ஊழியக்

காரனாகவும் அவர்களை நேசித்து, அவர்களுடைய பிரச்சனைகளை சரிசெய்ய விரும்பியிருக்கிறார். சுவிசேஷப் பிரசங்கமானது சபைப் பிரச்சனைகளை தவிர்க்காது. மாறாக, அது வேதாகம தீர்வுகளை அளிக்கும் [II தீமோத்தேயு 4:2]

கொரிந்துபட்டணத்து சபையிலிருந்த பிரச்சனைகளை பவுல் எப்படி சமாளித்தார்? எப்படி பிரச்சனைகளுக்கு தீர்வைக்கண்டார்? என்பவைகளிலிருந்து நாம் பாடங்களை கற்றுக்கொள்ளவேண்டும். அதிலும், குறிப்பாக புதிய ஏற்பட்டு சபையை மீட்டெடுக்கவேண்டும் என நினைப்பவர்கள், பிரச்சனைகளால் பின்னப்பட்டிருந்த கொரிந்து சபையை பார்த்து பவுல் அங்கிருந்த பிரச்சனைகளுக்கு தீர்வைக் கொண்டு வந்ததுபோல் செய்யலாம். அதே, நேரத்தில் சில பிரசங்கி யார்கள் கொரிந்து சபையை முதல் மாதிரியாக எடுத்துக்கொண்டு அங்கே உபதேசத்திலும் நடைமுறை ஜீவியத்திலும் எப்படி வேறு பாடுகள் இருந்ததோ அது அனுமதிக்கப்பட்டதோ அதே போல் நாமும் செய்யலாம் என்று தாராளமயக் கொள்கையை மேம்படுத்த முயற்சிக்கிறார்கள்.

**நாமும் செய்யலாம் என்று தாராளமயக் கொள்கையை மேம்படுத்த முயற்சிக்கிறார்கள் :**

சபைகளில் பிரச்சனைகள் ஏற்பட அடிப்படையாக இரண்டு காரணங்கள் உண்டு. சபையானது வேறுபட்ட ஆவிக்குரிய முதிர்ச்சி யுடைய உறுப்பினர்களை உள்ளடக்கியதாகும். சிலர் குழந்தை களாயிருக்கிறார்கள் [Iகொரிந்தியர் 3:1-3]. சிலர் ஆவிக்குரிய ஜாம்ப வான்களாயிருக்கிறார்கள். எல்லோரும் விழுந்துபோவதற்கு வாய்ப்பு அதிகமாக இருக்கின்றது [கொரிந்தியர் 10:12]. ஆவிக்குரிய முதிர்ச்சியின்மை சபைகளில் கள்ள உபதேசங்கள் ஆதிக்கம் செலுத்த அனுமதிகொடுக்கிறது,[ரோமர்16:17,18].

இரண்டாவது, சபையானது பகையுணர்வு உடைய பொல்லாத இவ்வுலகில்தான் இருக்கிறது. [IIகொரிந்தியர் 6:9,10]. அதே போல் கொரிந்துப்பட்டணத்து சபையும் உலகத்தில் தான் இருந்தது. ஆனால், உலகம் சபைக்குள்ளிருந்தது தான் பெரிய பிரச்சனையாக இருந்தது [I கொரி5:9,10] புதிய ஏற்பாட்டில் மற்றெந்த சபையையும் விட கொரிந்து சபைதான் தற்கால சபைகளை மிகப்பொருத்தமாக பிரதிபலிக்கிறது.

கொரிந்து சபையைப்பற்றி பார்ப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனென்றால், அங்கேயிருந்த பிரச்சனைகளையும் பவுல் அதற்கு வழங்கிய தீர்வுகளிலிருந்தும் நாம் அநேக காரியங்களை கற்றுகொள்ளமுடியும். I கொரிந்தியர் நிருபமானது கொரிந்து சபையின் நன்மைக்காகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்காகவும் எழுதப்பட்டது [Iகொரிந்தியர் 1:2] அதாவது, கொரிந்து சபையிலிருந்து கிடைக்கும் பாடங்கள் இன்றைக்கும் முக்கியத்தும் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# சபை என்பது என்ன?

## What Is The Church?

Dwight Inqna

மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை [மத்தேயு 16:18] சபை மேன்மையான ஒன்றாகவும், மற்றவைகளிடமிருந்து, வேறுபடுத்தியும் காட்டப்பட்டிருக்கிறபடியால் ஒருவர் சபையை தவறாகப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பே இல்லை.

சபை என்னும் வார்த்தை கிரேக்கத்தில் **எக்லீசியா** என்றழைக் கப்படுகிறது. அதற்கு, தமிழில் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, சபை என்பது சுவிசேஷத்தால் உலகத்திலிருந்து அழைக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய ஒன்றாகும் [II தெசலோனிக்கேயர் 2:14] இவர்கள். இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப்படுகிறார்கள் [கொலோ 1:13,24] இவர்கள் தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறார்கள் தனியாக பிரித்தெடுக்கப்படுகிறார்கள் [I கொரி1:2].

சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய ஓர் அமைப்பாகும். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்க்கிறார் [அப்போஸ்தலர் 2:47] சபைக்கு வெளியே ஒருவர் இரட்சிக்கப்படுகிறார் எனும் வாதம் எப்படி இருக்கிறது? அது கேலிக்கூத்தாக இருக்கிறது! இரட்சிக்கப்பட்டவர்களை உள்ளடக்கியது தானே சபை. இவ்வாறு சபையைப் பற்றி மதஉலகில் காணப்படும் குழப்பங்களையும், தவறான புரிந்துகொள்ளுதலையும் தெளிவாக விளக்குகிறது.

புதிய ஏற்பாட்டில் சபை எனும் வார்த்தை ஒருபோதும் மார்க்கப் பிரிவினை கூட்டத்தைக் குறிப்பிடும்படியாக பயன்படுத்தப்படவில்லை ஏன்? முதலில் கர்த்தருடைய சபை மார்க்கப் பிரிவினை கூட்டங்கள்

தோன்றுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே கர்த்தருடைய சபை இருந்தது. எனவே, ஒருவரால் எந்த ஒரு மார்க்கப்பிரிவினை கூட்டத்திலும் அங்கத்தினராக இல்லாமலேயே கர்த்தருடைய சபையிலே அங்கத்தினராக முடியும்.

அதேபோல் புதிய ஏற்பட்டில் சபை எனும் வார்த்தை ஒருபோதும் கட்டிடத்தை குறிக்கும் விதத்தில் பயன்படுத்தப்படவில்லை மனிதர்களால் சபைகூடும் கட்டிடங்களை கட்ட முடியும். கிறிஸ்துவால் தான் சபையைக் கட்ட முடிந்தது. ஆனால், சபை என்பது கிறிஸ்தவர்களை உள்ளடக்கிய ஆவிக்குரிய வீடாகும் (I பேதுரு2:5) கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஆதிக்கிறிஸ்தவர்கள் கேட்டு விசுவாசித்தபோது இரட்சிக்கப்பட நாங்கள் என்னச் செய்யவேண்டுமென்று கேட்டார்கள். (அப்போஸ்தலர் (2:47) தேவ சித்தத்தின்படி அவர்கள் செய்த போது அவர்களுடைய பாவங்களை மன்னித்து கர்த்தர் அவர்களைத் தம்முடைய சபையிலே சேர்த்தார் (அப்போஸ்தலர் 2:41,47).

நீங்கள் கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக விரும்புகிறீர்களா? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆண்களும் பெண்களும் எவைகளைச் செய்தார்களோ அவைகளைச் செய்து இன்றும் நீங்கள் கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக முடியும். ✝

---

**பரம அழைப்பு**

- ❀ **தேவன் நம்மை அழைக்கிறார் (எபிரெயர் 11:29)**
- ❀ **கிறிஸ்து நம்மை அழைக்கிறார் (மத்தேயு 11:28)**
- ❀ **நற்செய்தி நம்மை அழைக்கிறது (II தெசலோனிக்கேயர் 2:14)**
- ❀ **சபை நம்மை அழைக்கிறது (வெளிபடுத்தின விசேஷம் 22:17)**
- ❀ **தேவனுடைய வார்த்தை நம்மை அழைக்கிறது ( II தீமோத்தேயு 3:16,17)**

# 21 ஆம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவம்

## New Testament Christianity in the 21 st Century

Robert Johnnson



சமீப காலமாக பல்வேறுபட்ட மார்க்கப் பிரிவினைக் கூட்டங்கள் உபதேசத்தை காற்றில் பறக்க விட்டுவிட்டு, நோக்கத்திலும் செயலிலும் அவர்களுக்குள்ளே ஐக்கியமாயிருப்பதை நம்மால் காணமுடியும். அரசியல் ரீதியாக சரியான சமுதாயத்தில் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்வது தான் பெரும்பாலானோருடைய சுலோகமாக இருக்கிறது. அவர்கள் உபதேசங்களைப் பொருட்படுத்துவதே இல்லை. உண்மையில், ஒரு புகழ்பெற்ற மார்க்கப்பிரிவினை பிரசங்கியார் சற்று கரடுமுரடான தொனியில் உபதேசக் காரியங்களுக்கெல்லாம் நாம் அந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் பெரும்பாலானோருக்கு தேவனைப் பிதாவாகவும் இயேசு கிறிஸ்துவை குமாரனாகவும் ஏற்றுக்கொண்டால் அதுவே போதுமானது மற்ற காரியங்களெல்லாம் சம்மந்தமில்லாததும் கட்டாயமற்றது மாயிருக்கிறது.

இது வேதவாக்கியங்களின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளாத மார்க்கப் பிரிவினைக்கூட்டங்களுக்கு பரவாயில்லை. ஆனால், கர்த்தருடைய சபை அதன் அழைப்புக்கு உண்மையாக இருந்தால் அதில் பங்கெடுக்காது. யூதா இதைக் குறித்து தெளிவாக



பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டு மென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது என்று சொன்னார் [யூதா 1:3] இரட்சிப்புக்கு வழிவகுக்கும் தேவனால் கொடுக்கப் பட்ட விசுவாசம் ஒன்று தான் [ எபேசியர் 4:5] அந்த ஒரே விசுவாசத்தில் எந்த வேறுபாடோ மாறுபாடோ கிடையாது. அந்த ஒரே விசுவாசத்தை கைவிடுவது என்பது கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரட்டி சுவிசேஷத்தின் மூலமாக தேவன் நிறைவேற்ற விரும்புகிற காரியங்களை சீரழிக்கும் முயற்சியாகும். [கலாத்தியர்1:6 – 9] வெளிபடுத்தப்பட்ட தேவ சித்தத்திற்கு விசுவாசத்தின் மூலமாக கீழ்ப்படிவதே அவருடைய விருப்பமாகும். [மத்தேயு 7:21–23].

ஒரு காரியத்தைத் தெளிவாக நேர்மையாகச் சொல்ல வேண்டு மென்றால் மார்க்கப் பிரிவினை கொள்கைகள் தேவனால் ஆனதல்ல, அவைகள் மனிதனால் உண்டானவைகள். இவ்வுலகில் ஒரே சபை தான் உண்டு [எபேசியர் 1:22–23;4:4] விசுவாச காரியங்களில் சிலவற்றை நாம் மார்க்கப்பிரிவினை சபையாரோடு பகிர்ந்து கொள்ளலாம். ஆனால், கர்த்தருடைய சபை மார்க்கப் பிரிவினைப் கூட்டமல்ல. கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்ட சபை கிறிஸ்துவின் சபை மட்டுமே. அதுவே சத்தியத்திற்கு தூணும் ஆதாரமு மாயிருக்க முடியும் [I தீமோத்தேயு3:15]. அவர்களை இணைப்பது நம் பொறுப்பல்ல. ஆனால், அவர்களை சத்தியத்தை அறிகிற அறிவுக் குள்ளாக கொண்டு வந்து அந்த சத்தியத்திற்கு கீழ்ப்படியச் செய்யவேண்டும். பின்பு தேவன் தம்முடைய சத்திய சபையில் சேர்த்துகொள்வார். இது புதிய ஏற்பாட்டு சபையின் தனித்துவ மாயிருக்கிறது. இது மனித சித்தத்தின் கண்டுபிடிப்பு அல்ல. இயேசு கிறிஸ்து மூலமாக தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாயிருக்கிறது [மத்தேயு 16:18]. இந்த புதிய ஏற்பாடு சபை வேத வாக்கியங்களில் வெளிபடுத்தப்படும் தேவனுடைய அதிகாரத்திற்கு கீழ்ப்படிகிற தினாலே தனியாக அடையாளங்கொள்ளப்பட்டிருக்கிற ஒன்றாக இருக்கிறது.

# ஜெப ஆலோசனைகள்

**1. காலை எழுந்தவுடன் ஜெபியுங்கள்.**

ஒரு நாளைத் துவங்குவதற்கு அதைவிடச் சிறந்த வழி இல்லை.

**2. ஒவ்வொரு முறையும் சாப்பிடும் முன் ஜெபியுங்கள்.**

கர்த்தரின் நன்மைகளுக்கு நன்றி சொல்வது நல்லது.

**3. நேரம் ஒதுக்கி ஜெபியுங்கள்**

வாழ்க்கையின் பரபரப்பு தேவனுடனான தொடர்பை துண்டிக்கக் கூடாது.

**4. ஜெபிக்கத் தோன்றும் போது ஜெபியுங்கள்.**

ஜெபிக்க நேரம் பார்க்கத் தேவையில்லை. ஆர்வமே முக்கியம்.

**5. படுக்கைக்குச் செல்லும் முன் ஜெபியுங்கள்**

அந்த நாளின் காரியங்களையும், கவலைகளையும் தேவனிடம் கூறுங்கள்.

**6. சோர்வான நேரங்களில் தேவன்:**

நெருக்கடியான நேரங்களில் தேவன் செவி கொடுக்கிறார் என்பது ஆறுதல் தரும்.

**7. மகிழ்ச்சியாயிருக்கும் போது ஜெபியுங்கள்:**

நல்ல தருணங்களுக்காக தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

**8. வாய்விட்டு ஜெபியுங்கள்**

இது ஜெபத்தைப் பொருளுடையதாக்கும்.

**9. எளிமையாகவும், இயல்பாகவும் ஜெபியுங்கள்**

ஜெபம் இருதயத்திலிருந்து வர வேண்டும்.

**10. ஊக்கமாக ஜெபிக்க வேண்டும்.**

இதன் மூலம் ஜெபம் வல்லமையுள்ளதாக மாறும்.

**11. அமைதியாக ஜெபியுங்கள்**

எப்படியிருந்தாலும் ஜெபம் அவருடைய செவிகளில் விழும்.

**12. ஜெபம் ஒரு வழக்கமாக மாறும் வரை ஜெபியுங்கள்.**

இந்த பழக்கத்தை தேவன் அங்கீகரித்து ஆசீர்வதிப்பார்.

# பணக்கார முட்டாள்
# The Rich Fool

Randall Evans

**லூ**க்கா 12:16 –20 ஆகிய வசனங்களில் பணக்கார முட்டாளின் உவமையை நாம் வாசிக்கிறோம். இந்த மனிதன் முட்டாள் என்றழைக்கப்படுவதை நாம் அடிக்கடி கவனிப்போம். ஆனால், இந்த நபர் ஏன் முட்டாள் என்றழைக்கப்படுகிறான் என்று எப்போதாவது தான் கேட்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அந்த மனிதனை முட்டாள் என்றழைப்பதற்கான காரணங்களை கவனியுங்கள்.

இந்த மனிதன் தனக்கு கொடுக்கப்பட்டதைக் குறித்தே சிந்தித்துக்கொண்டிருந்தான், கொடுத்தவரைப் பற்றி அல்ல.

நமக்கு எல்லா ஆசீர்வாதங்களையும் தருகிறவர் தேவன் ஒருவரே (யாக்கோபு 1:17) ஆனால், இந்த மனிதன் தன்னுடையவைகளெல்லாம் தன்னால் சம்பாதிக்கப்பட்டதென்று தனக்குள் பெருமைபட்டுக் கொண்டிருந்தான். இந்தப் பணக்காரனுக்கு **தான்** என்கிற பிரச்சனை இருந்தது. எனவேதான், 'நான்' இதைச் செய்வேன் **நான்** அதைச் செய்வேன் என்று சொன்னான். தனக்கு ஐசுவரியத்தைத் தந்தவரை மறந்து விட்டு ஐசுவரியத்தின் மீது கவனமாயிருந்தான். இன்று நாம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், அந்த ஆசீர்வாதங்களெல்லாம் தேவனிடத்திலிருந்துதான் வந்தது என்பதை நாம் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. பணத்தை சம்பாதிப்பதற்கு தேவையான திறமைகளும் தேவனிடத்திலிருந்து தான் வருகிறது என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. தேவனில்லாமல் நாம் ஒன்றுமேயில்லை. அந்த மனிதன் தன்னைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு தன் அயலகத்தாரை மறந்துவிட்டான்.

இந்தப் பணக்கார முட்டாள் தன்னுடைய செல்வங்களுக்காக மிகப்பெரிய திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தான். அவன் தன் களஞ்சியங்களை இடித்து மிகப்பெரிய களஞ்சியங்களாகக் கட்டத் திட்டமிட்டிருந்தான். அவன் எல்லாப் பணத்தையும் தனக்காகவே சேமித்து வைக்க ஆசையாயிருந்தான். அவன் மற்றவர்களுக்கு உதவி செய்யத்திட்டமிட்டிருந்ததாக திட்டவட்டமான தகவல் எதுவுமில்லை.

இன்றைய நாட்களில் தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இந்தப் பணக்கார முட்டாளிடமிருந்து வித்தியாசமானவர்களாக இருக்க விரும்பினால் மற்றவர்களுக்கு உதவ நம்முடைய உடமைகளை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும். (Iயோவான் 3:17) இவ்விதமாகச் சொல்கிறது. 'ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து தன் சகோதரனுக்கு குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால் , அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்ளுகிறதெப்படி? நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து 'வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்' என்று சொன்ன வார்த்தைகளையும் நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். தேவையில் இருப்பவர்களோடு தேவன் உங்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.

**அவன் தன் சரீரத்தை மாத்திரம் சிந்தித்துக் கொண்டு தன் ஆத்துமாவை மறந்துவிட்டான்.**

இந்த பணக்கார முட்டாளுக்கு தன் சரீரத்தைப் பராமரிக்க மாபெரும் திட்டங்கள் இருந்தன. அவன் புசிப்பதிலும், குடிப்பதிலும் மகிழ்ச்சியாக இருப்பதிலும் தன் மனதைப் பதித்தான். தன் ஆவிக்குரிய நிலைமையைப் பற்றி அவன் அக்கறைப்படவேயில்லை. நம் சரீரங்கள் அழிந்து மண்ணோடு மண்ணாகி விடுகிறது. ஆனால், நம் ஆத்துமாக்கள் நித்தியமானவைகள். கிறிஸ்தவர்களாக நாம் ஆவிக்குரிய காரியங்களுக்கு முதலிடம் கொடுப்போம்.

அவன் தன் ஜீவனைப் பற்றி சிந்தித்துக் கொண்டு மரணத்தை மறந்துவிட்டான். இந்த பணக்கார முட்டாள் மரணத்தைப் பற்றி கவலைப்படவில்லை. மரணத்தைப்பற்றி நினைக்காமல் எப்படி இவனால் இருக்க முடிந்திருக்கிறது. தன் பணத்தை வைத்துக் கொண்டு செய்யப் போகிற காரியங்களைக் குறித்து திட்டமிடுவதில் பரபரப்பாக இருந்திருக்கிறான். அவன் இவ்வுலகில் நிரந்திரமாக நிலைத்திருக்கலாம் என்று நினைத்திருக்கிறான். ஆனால், தேவனுடைய திகிலூட்டும் வார்த்தைகள் இவனைத் திக்கு முக்காட செய்கின்றன. லூக்கா 12:20 -ல் தேவனோ அவனை நோக்கி: **மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்.**

இந்த உவமையில் நமக்குப் பாடம் என்ன? நம் ஜீவன் குறுகிய கால அளவை உடையது ( யாக்கோபு 4:14). மரணம் நிச்சயமானது (எபிரெயர் 9:27). இக்காரியங்களை நாம் மனதில் கொண்டு, நமக்காக இப்பூமியில் அல்ல, பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்போம் ( மத்தேயு 6:19-21). ✞


வாழ்வதற்கான உபதேசம்

# உயிர்த்தெழுதலை உணர்ந்து வாழ்தல்

## Living The Resurrection

Royce Frederick

**ஞா**யிற்றுக்கிழமை அதிகாலை வேளையிலே மிகுந்த துக்கத்தோடு சில ஸ்திரீகள் இயேசு கிறிஸ்துவின் கல்லறையைக் காண வந்தார்கள். ஆனால், அவர்கள் ஓர் அதிசயக்காட்சியைக் கண்டார்கள். அவர்கள், கல்லறையை அடைந்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டார்கள். அப்போது, திடீரென பிரகாச முள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள் அந்த ஸ்திரீகள் பயப்பட்டுதலைக் கவிழ்த்து தரையை நோக்கி நிற்கையில் அந்த இரண்டு பேரும் அவர்களை நோக்கி; உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, **அவர் உயிர்த்தெழுந்தார்** என்றார்கள் (லூக்கா 24:2-6).



அவர் இங்கே இல்லை.....! இந்த வார்த்தைகள் கிறிஸ்தவ நம்பிக்கையையும், மகிமையையும் சுருக்கமாக வெளிப்படுத்து கின்றன. (1பேதுரு 1:3,21). கிறிஸ்தவம் இரத்தம் படிந்த சிலுவையையும், வெறுமையான கல்லறையையும் மையமாகக் கொண்டுள்ளது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற நம்முடைய வாழ்க்கையில், உயிர்த்தெழுதல் என்பது நாம் நம்புகிற நடைமுறைப் படுத்துகின்ற, வாழ்கின்ற ஒவ்வொன்றின் மையமாக இருக்கிறது.

துரதிஷ்டவசமாக, சில கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுதலின் உபதேசத்தை கொண்டாட்டத்திற்கான காரணமாக எடுத்துக் கொள்வது வேதனைக்குரியதாகும். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய நாட்களிலேயே இது உண்மை என்பதைக் கண்டறிந்தார். உயிர்தெழுதலைப் பற்றிய அவருடைய ஊழியம் பலருடைய பரிகாச வார்த்தைகளையும் [அப்போஸ்தலர் 17:32]. பலருடைய பரிகாசப் பார்வைகளையும் எதிர் கொண்டது [ அப்போஸ்தலர் 26:24]. இந்நிலை இன்றும் இப்படித்தான் இருக்கிறது. இங்கிலாந்தில், சமீபத்தில் ஆங்லிகன் சபையில் ஒரு பிஷப்பை நியமனம் செய்து பெரிய சர்ச்சையில் சிக்கிக் கொண்டுள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட அந்த பிஷப் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றிய வரலாற்று உண்மையை வெளிப்படையாகவே மறுத்தார். அமெரிக்க ஐக்கிய தேசத்தில் அதிக முயற்சிகள் எடுக்கப்பட்டு உயிர்த்தெழுதல் உண்மையாக நிகழ்ந்திருக்காது என்பதை நிரூபிக்க பல போலியான காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள். அதேப்போல், வேதாகம கல்லூரியின் ஒரு பேராசிரியர் உயிர்த்தெழுதல் எனும் கற்பனைக் கதையை இதற்கு மேல் நம்புவதற்கு சாத்தியமில்லை என்று தன் சந்தேகத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இது போன்ற சந்தேகப் பேர்வழிகளை சாத்தான் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறான்.

நாம் தேவனையும், அவருடைய வார்த்தையையும் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் கிறிஸ்துவின் உயிர்தெழு தலை லேசாக எடுத்துக்கொள்ளக்கூடாது. கிறிஸ்து எழுந்திருக்க வில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா, கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள் [I கொரிந்தியர் 15:15-17]. கிறிஸ்தவர்களாகிய நாம் உயிர்த்தெழுதலை ஒரு வரலாற்று உண்மையாக்க வேண்டும் [பிலிப்பியர் 3:7-11]. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிப்பது மட்டும் போதுமானதல்ல. நம் விசுவாசம் நம்முடைய ஜீவியங்களில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும். நாம் வாழ்கின்ற வாழ்க்கை மூலமாக கிறிஸ்துவின் உயிர்தெழுதலில் நமக்கு இருக்கிற விசுவாசத்தை நாம் பிறருக்கு அறிவிக்க வேண்டும்.

பல கிறிஸ்தவர்கள் கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தது போல, வாழ்க்கை வாழாதது பரிதாபகரமானதாகும். அவர்களுடைய

அடிப்படை மனநிலைகள், ஒழுக்க நெறிகள், வாழ்க்கை முறைகள் தங்கள் அவிசுவாசியான அயலகத்தாரை விட எந்த விதத்திலும் வித்தியாசப்படுவதே இல்லை.

உண்மையாகவே, நாம் உயிர்தெழுதலை உணர்ந்து வாழ வேண்டுமென்றால் நாம் மாற்றமடைந்த வாழ்க்கையை வாழ வேண்டும்.

நாம் ஒருபோதும் இவ்வாழ்க்கையே சதம் என்றும், இதுவே இறுதி என்பது போலவும் வாழக்கூடாது. நாம் எப்போதுமே இவ்வுலகத்தை நிரந்தரமற்ற ஒன்றாக பார்க்க கற்றுக்கொள்ள வேண்டும். நாம் உண்மையாகவே, உயிர்த்தெழுதலை பெரிதான ஒன்றாகக் கருதினால் அது நமக்கு ஒழுக்க நெறிகளில் புதிய தரத்தையும், மற்றவர்களை தீர்ப்பு செய்வதில் புதிய விதத்தையும், புதிய விகிதாச் சாரத்தையும் நமக்கு காண்பிக்கும். நாம் உண்மையாக உயிர்தெழுதலை உணர்ந்து வாழத் தொடங்கினால் நாம் வாங்குவதை விட கொடுப்பதையே விரும்புவோம். அதே போல் பழிவாங்குவதை விட மன்னிப்பதையே விரும்புவோம். காரியங்கள் நம் சமகாலத்தில் வாழ்கிறவர்களுக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படியல்ல, தேவனுக்கு எப்படி தோன்றுகிறதோ அப்படிப் பார்க்க கற்றுக் கொள்வோம்.

உயிர்த்தெழுதல் என்பது உண்மையானது. தூரத்திலுள்ள யூதேயாவில் அந்த காலை வேளையிலே கிறிஸ்துவின் கல்லறையைக் காண வந்த ஸ்திரீகளிடத்தில் தேவ தூதர்கள் உயிரோடிருக்கிற வரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார் என்று சொன்னது உண்மைதான். அதை நீங்கள் நம்புகிறீர்களா? ✝

---

## நீங்கள் இவைகளை உடுத்தியிருக்கிறீர்கள்

| | |
|---|---|
| இரட்சிப்பு | ஏசாயா 61:10 |
| கிருபை | II கொரிந்தியர் 9:1315 |
| அன்பு | I யோவான் 3;1 |
| நீதி | ஏசாயா 32  புு17 |
| வல்லமை | லூக்கா 24:49 |

# பதிவு செய்யப்பட்ட வேதாகம வரலாற்றின் வருடங்கள்

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை சுமார் 4,100 வருடங்களை உள்ளடக்கிய பதிவு செய்யப்பட்ட வேதாகம வரலாறு உண்டு.

அவைகளுள் .......



பழைய ஏற்பாடு
4000 வருடங்கள்



புதிய ஏற்பாடு
100 வருடங்கள்

4000 வருட வரலாறு பழைய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

100 வருட வரலாறு புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

2,286 வருட வரலாறு ஆதியாகம புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

2000 வருட வரலாறு ஆதியாகமம் 1-11 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.


286 வருட வரலாறு ஆதியாகமம் 12-50 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

1714 வருட வரலாறு யாத்திராகமம் - மல்கியா வரை உள்ள புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

1814 வருட வரலாறு யாத்திராகமம் - வெளிப்படுத்தின விசேஷம் வரை உள்ள புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு பிரசங்கி 3:1.

# மரித்தவர்கள் எங்கே இருக்கிறார்கள்?



## செயலில் கிறிஸ்தவம்

## போர்ச்சேவகன், விளையாட்டு வீரன், மற்றும் விவசாயி

## The Soldier, The Athlete and The Farmer

Glenn Colley

**அ**ப்போஸ்தலனாகிய பவுல் ரோமச் சிறைச்சாலையில் இருந்தார். தன் மரணம் நெருங்கிவிட்டதை அறிந்த அவர் தேவ ஆவியினால் ஏவப்பட்டு தீமோத்தேயுக்கு சில காரியங்களை அறிவுரைகளாக எழுதுகிறார். (II தீமோத்தேயு 2:3-6] வசனங்களில் அவர் பிரசங்கியாரின் வேலையை பொதுவான மூன்று தொழில்களோடு ஒப்பிடுகிறார். போர்ச்சேவகர், விளையாட்டு வீரர் மற்றும் விவசாயி. எனவே, இங்கே ஒரு கேள்வி எழுகிறது. பொதுவான அடிப்படையில் பிரசங்கிமார், போர்ச் சேவகர், விளையாட்டு, வீரர் மற்றும் விவசாயியோடு எப்படி ஒத்திருக்கிறார்கள்?

**நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி:**

கடினமான காலங்களில் படையை விட்டுவிட்டு ஓடும் ராணுவ வீரனால் படைத்தளபதிக்கு எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை. உண்மையில், வீரர்கள் தங்கள் உயிரையே விலையாகக் கொடுக்க நேர்ந்தாலும், அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றுவார்கள் என்பதை படைத்தளபதி அறிந்து கொள்ள வேண்டும். இது வெறுமனே வார்த்தை ஜாலம் அல்ல. பவுல் கிறிஸ்துவுக்காக எத்தனையோ பாடுகள்பட்டார். அதைப் போல கிறிஸ்தவர்களாகிய நாமும் கடினமான காலகட்டங்களை எதிர்கொள்ளும் போது முறுமுறுக்காதபடி பார்த்துக் கொள்ளும்படி. எங்கள் விசுவாசத்துக்கு சவால்விடப்படும் போது, நாங்கள் விசுவாசத்தை விட்டு விலகாதபடி எங்களுக்கு உதவும் என்பது நம்முடைய ஜெபமாயிருக்க வேண்டும்.

தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்.

ஒரு போர்ச்சேவகன் தன் கடமையைச் செய்யத் தடையாக இருக்கும். எல்லா கவனச்சிதறல்களையும் அடியோடு அகற்ற வேண்டும். ஒரு கிறிஸ்தவனுக்கும் இது அப்படியே பொருந்தும். கடந்த காலங்களில் எத்தனை கிறிஸ்தவர்கள் உலகக்காரியங்களில் பற்று வைத்து, அவைகளில் சிக்கிக் கொண்டு அடுத்த உலகத்திற்கான தங்கள் கடமையைச் செய்ய நேரமில்லை என்று சொல்வதை நாம் பார்க்கிறோம்? தேமாவை நினைவில் கொள்ளுங்கள் [தீமோத்தேயு 4:10].

மேலும், ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான். இது பழங்காலத்து கிரேக்க விளையாட்டுக்களைக் குறிக்கிறது. இது இன்றைய ஒலிம்பிக் போட்டிகளைப் போன்றதாகும். இப்போட்டியில் சுற்றி நிற்பவர்களின் ஆரவாரத்தடனும் கைதட்டல்களுடனும் ஒரு விளையாட்டு வீரர் தொடுகோட்டைத் தொட்டாலும், விளையாட்டு விதிகளின்படி தொடவில்லையென்றால் அந்த வீரனுக்கு பரிசு கொடுக்கப்பட மாட்டாது. அந்த விளையாட்டு வீரன் ஏதாவது ஏமாற்று வேளையில் ஈடுபட்டால், அது அவனுடைய வெற்றியின் நம்பிக்கையைப் பறித்துவிடும். சபையை வளர்க்க விரும்பும் ஒரு பிரசங்கியர் புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் சமரசம் செய்து கொண்டு பல பாராட்டுகளைப் பெறலாம். ஆனால், தேவனுடைய அங்கீகரத்தை அவர் இழந்து போவார். நாம் சத்தியத்தால் பரிசுத்தமாக்கப்படுகிறோம் (யோவான் 17:17). இந்த சத்தியம்தான் நம்மை விடுதலை ஆக்குகிறது (யோவான் 8:32). சபைதான் சத்தியத்திற்கு தூணும், ஆதாரமுமாயிருக்கிறது (I தீமோத்தேயு 3:15).



பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடைய வேண்டும் (II தீமோத்தெயு 2:6) இது பவுல் ஏற்கனவே (I கொரிந்தியர் 9:14 ) ல் அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார் என்று சொன்ன வார்த்தைகளின் விளக்கம் போல் உள்ளது. இங்கே, தீமோத்தேயு கடுமையாக பிரயாசப்பட்டு, தன் கடமையை உணர்ந்து, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் போதித்து தன்னுடைய பணிக்காக சபையாலே உதவிபெற வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருந்திருக்கிறது.

## செயலில் கிறிஸ்தவம்

## கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துதல்

## Winning Souls For Christ

Dale Grission

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:16-17). விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும் போது சபை வளர்கிறது. இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்க்கிறார் (அப்போஸ்தலர் 2:47). ஒரு பிராந்திய சபையிலிருந்து, மற்றொரு சபைக்கு மாறும் கிறிஸ்தவர்கள் சபை வளர்ச்சியில் எந்தப் பங்களிப்பையும் ஆற்றுவதில்லை. ஒரு விசுவாசி இரட்சிப்பின் திட்டத்திற்கான சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் வரை வளர்ச்சி எதுவும் இருக்காது.

நம் சமுதாயத்தில் சபை வளரவில்லையென்றால், நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கொண்டு மக்களை சந்திக்கவில்லை என்று தான் பொருள். பல நேரங்களில் எங்கள் வார்த்தைகளுக்கு யாரும் செவிகொடுக்க மாட்டார்கள் என்று நாம் சாக்கு போக்கு சொல்கிறோம். யாரும் செவிகொடுக்க மாட்டார்கள் என்பது நமக்கு எப்படித்தெரியும்? நாம் உண்மையாகவே முயற்சித்தோமா? விளை யாட்டைப் பற்றியோ, உலகப்பிரகாரமான காரியங்களைப் பற்றியோ பேசுவதில் நமக்கு எந்தப்பிரச்சனையும் இல்லை. ஆனால், சுவிசேஷ த்தை பரப்பாததைக் குறித்து நம்மால் சாக்கு போக்குகளைத் தான் சொல்லமுடியும். நாம் ஆவிக்குரிய காரியங்களைப் பற்றி பேச கற்றுக்கொண்டு, இழந்து போன ஆத்துமாக்களை சந்தித்து அந்த ஆத்துமாக்கள் நித்தியத்தை எங்கே கழிக்கும் என்பதைப் பற்றி பேச வேண்டும்.

கர்த்தருக்குச் சேவை செய்வதைக் குறித்து கனவு காண்பது எளிதானதாகும். ஆனால், நம்மை கிறிஸ்துவுக்கு முழுமையாகக் கொடுப்பதற்கு நம் பங்கில் மிகப்பெரிய முயற்சி அவசியப்படுகிறது.

அநேக ஆத்துமாக்களை நித்தியத்தில் சேர்க்கவேண்டும். அம்முயற்சியை எடுப்பதற்கு நம் விருப்பம் எப்படி இருக்கிறது மற்றும் சார்ந்திருக்கிறது. ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதில் நம் பங்கை ஆற்ற நாம் ஒவ்வொருவரும் தீர்மானித்துக் கொள்வோம். இழந்து போன ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச்செல்ல, தேவையான தியாகங்களை செய்ய இழந்த போனவர்களைப் பற்றிய அன்பால் நம் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் நிரப்ப நாம் தேவனை வேண்டிக் கொள்வோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் சீஷர்களிடம் சுவிசேஷத்தை அறிவிக்கும் படி கட்டளையிட்டார். ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும், சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் (மத்தேயு 28:19,23) என்றார்.

✝

---

**பரிசுத்தம் எங்கெல்லாம் காணப்பட வேண்டும்?**

- ✿ **இருதயத்தில்** மத்தேயு 5:8
- ✿ **கைகளில்** சங்கீதம் 24;4
- ✿ **வழிகளில்** சங்கீதம் 119:9
- ✿ **வார்த்தையில்** யோபு 11:4
- ✿ **மனச்சாட்சியில்** I தீமோத்தேயு 3:9


செயலில் கிறிஸ்தவம்

## தலைமைத்துவத்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறோமா அல்லது சேவை செய்ய அழைக்கப்பட்டிருக்கிறோமா?

## Called To Lead or To Serve?

Claude Thompson

**தலைவர்** அல்லது **தலைமைத்துவம்** போன்ற வார்த்தைகள் இன்றைய நாட்களில் சபைகளில் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டு தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, இவ்வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. பெரும்பாலும் நாம் நம் பிராந்திய சபைகளில் மூப்பர்களையோ அல்லது பிரசங்கியார்களையோதான் தலைமை ஏற்று நடத்துபவர்களாக அழைக்கிறோம். பொதுவாகவே, நாம் தலைமைத்துவம் என்னும் வார்த்தைக்கு நிர்வகிப்பவர் அல்லது வழி நடத்துபவர் அல்லது எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறவர் என்றுதான் விளக்கம் கொடுக்கிறோம். இருந்தபோதிலும், வேதாகமம் உண்மையான ஆவிக்குரிய தலைமைத்துவத்துக்கான முழுமையான வித்தியாசமான விளக்கத்தைக் கொடுக்கிறது.



Lead எனும் ஆங்கில வார்த்தை தமிழில் தலைமை ஏற்று நடத்துதல் அல்லது வழி நடத்துதல் என்று மொழியாக்கம் செய்யப்படுகிறது. இதற்கான கிரேக்க வார்த்தை nodegeo இது சத்தியத்தை போதிப்பது (எபிரெயர் 5:12) அல்லது தவறுகளை போதிப்பதை குறிக்கும் (II பேதுரு 2:1).

புதிய ஏற்பாடு வழிகாட்டுதல் அல்லது வழிகாட்டி போன்ற வார்த்தைகளை அரிதாகத்தான் பயன்படுத்துகிறது. அப்படியே பயன்படுத்தினாலும் கூட

எதிர்மறையான பொருளில்தான் பயன்படுத்தியிருக்கிறது. இயேசு கிறிஸ்து தம்முடைய நாட்களில் வாழ்ந்த ஆவிக்குரிய போதகர்களை குருடருக்கு வழிகாட்டுகிற குருடாயிருக்கிறார்கள் என்று அழைத்தார், (மத்தேயு 15:14). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மையோ அல்லது மற்றவர்களையோ தலைவர்கள் என்றோ குருக்கள் என்றோ, அடையாளப்படுத்த வேண்டாமென்று அறிவுறுத்துகிறார். ஏனென்றால், கிறிஸ்து ஒருவரே நமக்கு குருவாயிருக்கிறார் (மத்தேயு 23:10). நம் ஆண்டவர் ஆரம்பத்தில் சபையை தொடங்கி வழி நடத்த மனிதர்களை தெரிந்தெடுத்தபோது அவர் கடல் தளபதிகளைத் தெரிந்தெடுக்கவில்லை. மாறாக, மீன் பிடிப்பவர்களைத்தான் தெரிந்தெடுக்கிறார் (மத்தேயு 4:18-21). அவர் தம்முடைய ராஜ்யத்துக்கு மேற்பார்வை செய்பவர்களையோ அல்லது தலைவர்களையோ விரும்பவில்லை. மாறாக, மற்றவர்களுக்கு சேவை செய்யும் மனிதர்களைத்தான் விரும்புகிறார் (லூக்கா 10:2). இவர்கள் தான் சபையின் உண்மையான தலைவர்களாக இருக்கிறார்கள். **உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன் (லூக்கா 22:26).**

கிறிஸ்து நம்மை தலைவர்களாக இருக்கும்படி அல்ல சேவை செய்யும்படி அழைக்கிறார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எல்லா கனத்துக்கும் பாத்திரமாயிருந்தும் (வெளிப்படுத்தின விசேஷம் 4:9-11). ஒரு வேலைக்காரனாகவே மாறி ஒரு தலைவன் பணிவிடைக்காரனாக இருக்க வேண்டுமென்பதை தம்முடைய சீடர்களுடைய கால்களைக் கழுவி சிறந்த முன் மாதிரியை காட்டினார் (யோவான் 13:5-16). இயேசு கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தில் விசுவாசத்தை வெளிப்படுத்தினவர்களையும் (மத்தேயு 8:10-13), சத்தமில்லாமல் சேவை செய்கிறவர்களையும்தான் அங்கீகரித்தார் (மத்தேயு 26:10-13). கிறிஸ்தவர்கள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டு நற்கிரியைகளைச் செய்யும்படியாக கிறிஸ்துவுக்குள் மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்டார்கள் (எபேசியர் 2:10).

ஆவிக்குரிய சேவை என்பது அங்கீகரிப்புக்காகவோ அல்லது பலனுக்காகவோ அல்ல. அன்பினால் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அன்பை அடிப்படையாக வைத்து சேவை செய்வதற்கு தேவனே சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார் (யோவான் 3:16) கிறிஸ்தவர்கள்

அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யும்படி கட்டளை யிடப்பட்டிருக்கிறார்கள் [கலாத்தியர் 5:13]. இதில் கிறிஸ்துவை பின்பற்றுபவர்களாக நாம் நம் சத்துருக்களை சிநேகிக்கும்படி கட்டளையும் பெற்றிருக்கிறோம் [லூக்கா 6:35]. நாம் மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யும்போது அல்லது சேவை செய்யும்போது, அது நம்முடைய இருதயத்திலிருந்து உண்மையானதாக இருக்க வேண்டும் [எபேசியர் 6:5–6].

ஆவிக்குரிய சேவைக்கு அங்கீகாரமும் பலனும் உண்டு [I கொரிந்தியர் 3:8]. கிறிஸ்தவர்கள் தங்களை சேவையில் வழிநடத்து கிறவர்களை, அது சரீரப்பிரகாரமான உலகத்திலிருந்தாலும் சரி கனத்துடன் நடத்த வேண்டும் [எபேசியர் 6:2; ரோமர் 13:78; I தீமோத் தேயு 6:1]. இது ஆவிக்குரிய உலகத்திற்கும் பொருந்தும் [I கொரிந்தியர் 12:23–25; பிலிப்பியர் 2:19,20; I தீமோத்தேயு 5:17]. இப்பூமியில் இவ்வாழ்க்கையில் நமக்கு அங்கீகாரமும், பலனும் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, நமக்கு உயர்வான முக்கியமான பலன் பரலோகத்தில் நிச்சயமாக கிடைக்கும். [மத்தேயு 5:11,12; வெளிப் படுத்தின விசேஷம் 11:18]. நாம் பொறுமையோடு பலனை எதிர்நோக்கிப் பணியாற்ற வேண்டும் [யாக்கோபு 5:7]. நாம் மனுஷர் நம் கிரியைகளைக் கண்டு நம்மை ஏற்றுக்கொள்ள வேண்டும். கனம் பண்ண வேண்டுமென்று எண்ணாமல் தேவனிடத்திலுருந்து நமக்கு பலன் உண்டு என்று எண்ணி சேவை செய்ய வேண்டும் [மத்தேயு 6:1–6]. ✝

## பிறக்கும் முன்னே தேவனால் பெயரிடப்பட்டவர்கள்

| | |
|---|---|
| **இஸ்ரவேல்** | **ஆதியாகமம் 16:1112** |
| **சாலொமோன்** | **I நாளாகமம் 22:9** |
| **யோசியா** | **I ராஜாக்கள் 13:2** |
| **கோரேஸ்** | **ஏசாயா 44:28** |
| **இயேசு** | **மத்தேயு 1:21** |

# ஆராதனையின் குறிக்கோள்
# Purpose of Worship

Louis Rushmore

கிறிஸ்தவ ஆராதனையின் மையப்பொருள் தேவனாயிருக்கிறார். (யாத்திராகமம் 20:1-6; யோவான் 4:23). அவர் மாத்திரமே ஆராதிக்கப்படத்தக்கவர் (மத்தேயு 4:10). கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (யோவான் 4:24). அதாவது, கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆவியானவர் மூலமாக எவ்விதமாக நாம் அவரை ஆராதிக்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறோமோ அவைகள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கிறது. அதன் படிதான் நாம் தேவனை ஆராதிக்க வேண்டும் (II பேதுரு 1:20,21). ஆகவே, கிறிஸ்தவ ஆராதனை சம்மந்தமாக மனித தெரிந்து கொள்ளுதலும் விருப்பமும் தேவன் தம்முடைய பிள்ளைகளிடமிருந்து எதை எதிர்பார்க்கிறாரோ அதைப் பொறுத்தவரை முக்கியத்துவம் குறைந்தவைகளாகவே இருக்கின்றன. எனவே, ஒருவர் தேவனை ஆராதிப்பதற்கு எவ்வளவு தன்னை ஒப்புக் கொடுக்கிறாரோ அல்லது ஆராதனையிலிருந்து தனக்கு என்ன கிடைக்கிறதென்று எண்ணுகிறாரோ அதைவிட முக்கியமானதாகும்.

ஆராதனையை சுவாரஸ்யமாகவோ அல்லது இன்னும் அதிக ஆவிக்குரியதாகவோ மாற்ற வேண்டிய அவசியமில்லை. தேவன் தம்மை ஆராதிக்கும்படி மனித இனத்துக்கு என்ன வழிமுறைகளை வைத்திருக்கிறாரோ அதன்படி அவரை ஆராதிப்பதை விட ஆவிக்குரியதாக எதுவும் இருக்க முடியாது. நிச்சயமாக இன்றைய நாட்களில் பலர் தேவனுக்கேற்றவாறு ஆராதிப்பதை விட்டுவிட்டு தங்களுக்கு ஏற்றவாறும், திரளான ஜனங்களை ஈர்க்க அவர்களுக்கு ஏற்றவாறும் ஆராதனை முறைமைகளை மாற்றுகிறார்கள். இருந்தபோதிலும், புதிய ஏற்பாட்டு சபை இயேசு கிறிஸ்துவின் எளிய சுவிசேஷத்தினாலே உலகத்தை கலக்கியிருக்கிறது (அப்போஸ்தலர் 17:6). எவ்வித அலங்காரமுமில்லாத பரிசுத்த சுவிசேஷந்தான் இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது (ரோமர் 1:16). அதில்தான் ஒருவர் தேவனுக்கேற்ற ஆராதனையை எப்படி ஏறெடுப்பது என்பது பற்றி பகுத்தறிய முடியும் (மத்தேயு 15:8,9).

ஆராதனை

# நீங்கள் எங்கே இருப்பீர்கள்?

## Where Will You Be?

Dalton Krey

எப்பஜ ஒரு நல்ல ஆகாரம் சரீரத்திற்குத் தேவையாய் இருக்கிறதோ? அதேபோல், ஆராதனை நம் ஆத்துமாவுக்கு இருக்கிறது. ஆராதனை நம் ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் நலனுக்கும் மிகவும் அவசியமாயிருக்கிறது. நாம் ஜெபத்தில் நம் இருதயங்களை வானத்தை நோக்கி ஏறெடுக்கும்போது, பாடலில் நம் குரல்களை கலக்கும்போது, கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கெடுக்கும்போது, கல்வாரி சிலுவையை பயபக்தியோடு நினைவுகூரும்போது, தேவன் நமக்குத் தந்தவைகளிலிருந்து அவருக்குக் காணிக்கைக் கொடுத்து தேவ சித்தத்தை கற்றுக்கொள்ளும்போது, புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடனும், பெலத்துடனும் தெய்வீக பரிசுத்தமாக்கப் படுதலினாலும் நிரப்பப்படுகிறோம்.

சங்கீதக்காரனாகிய தாவீது **கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன்** எனும் வார்த்தைகளை விரும்பியிருக்கிறார் [சங்கீதம் 122:1]. அப்போஸ்தலனாகிய பவுல் சீஷர்களோடு தேவனை ஆராதிக்கும்படியாக கர்த்தருடைய நாள்வரை துரோவாவிலே ஏழு நாட்கள் காத்திருந்தார் [அப்போஸ்தலர் 20:61]. இதற்கு முன்பு பிலிப்பிவிலே பவுலும் சீலாவும் உட்காவலறையிலே அடைத்து வைக்கப்பட்டு அவர்கள் கால்களைத் தொழு மரத்தில் மாட்டி வைத்தார்கள். அச்சூழ்நிலையை கூட அவர்கள் தேவனை துதித்துப் பாடுவதற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள் [அப்போஸ்தலர் 16:24,25].

நீதிமான்களின் ஆத்துமாக்கள் தூய்மையான இதயம் கனிந்த ஆராதனையால் இன்றும் பெலப்படுத்தப்படுகிறது. ஆராதனை ஆத்துமாவுக்கு நல்லது.

சத்தியத்தின் வெளிச்சத்தில் தேவ ஆவியினால் ஏவப்பட்ட இந்த கடுமையான எச்சரிப்பைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லை **சபை கூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்** [எபிரெயர் 10:25].

வருகின்ற கர்த்தருடைய நாளிலே நீங்கள் எங்கே இருப்பீர்கள்? ஆராதனையில் பரிசுத்தவான்களை சந்திப்பீர்களா? அப்படி இல்லையென்றால், ஏன் இல்லை?

# ஆராதனையை மேம்படுத்த பத்து கட்டளைகள்

# Ten Commandments to Improve The Worship

**ஆ**ராதனையிலிருந்து எனக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை என்று யாராவது எப்போதாவது சொல்லக் கேட்டிருக்கிறீர்களா? சில வேளைகளில் இது ஆராதனையைப் பற்றி இல்லாமல் ஆராதனையை நடத்துகிற பிரசங்கியாரைப் பற்றிய விமர்சனமாக இருக்கும். நீங்கள் கர்த்தருடைய நாளிலே பரிசுத்தவான்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்கும்போது, ஆராதனையின் தரத்தை மேம்படுத்த இதோ சில ஆலோசனைகள்.

**1. ஞாயிற்றுக்கிழமையை முதன்மைப்படுத்துங்கள்**

இது வாரத்தின் மிக முக்கியமான கடமையாயிருக்கிறது. இது தேவனை சந்திப்பதைவிட குறைவான நிகழ்வு அல்ல.

**2. மீதமானவைகளை தேவனுக்குக் கொண்டுவராதீர்கள்.**

தேவன் எப்போதுமே முதற்கனிகளை தான் கேட்டிருக்கிறார். அவரால் மீதமானவைகளில் திருப்திப்படவே முடியாது. சனிக்கிழமை இரவு நல்ல உறங்கி புத்துணர்வுடனும், விழிப்புடனும் ஞாயிற்றுக் கிழமை காலை ஆராதனையில் பங்கெடுக்க வேண்டும்.

**3. மனதைத் தயார் படுத்துங்கள்**

ஒழுங்கு என்பது மனதில்தான் தொடங்குகிறது. சீஷத்துவமும் மனதில்தான் தோன்றுகிறது. ஆவிக்குரிய காரியங்களில் கவனம் செலுத்த உங்ககள் மனதை பயிற்றுவியுங்கள்.

**4. சரியான சமயத்தில் வாருங்கள்.**

ஆராதனை வேளையில் அவசர அவசரமாகப் போய் அமருவது, நாம் வேத வாக்கியங்களை தியானிப்பதற்கு இடையூறாக இருக்கும். மற்றவர்களுக்கும் அது இடையூறாக இருக்கும். தேவைப்பட்டால் ஞாயிற்றுக்கிழமை காலையில் சற்று முன்னதாக எழுந்தால் நலமாயிருக்கும்.

**5. உங்கள் வேதாகமத்தை கொண்டு வாருங்கள்**

ஆராதனைக்கு வேதாகமம் இல்லாமல் வருவது சாவியில்லாமல் வாகனத்தை ஓட்ட முயற்சிப்பது போன்றதாகும்.

**6. உங்கள் வாயைத் திறந்து பாடுங்கள்.**

பாடல் பாடுவது என்பது நம் விருப்பப்படியான ஒன்றல்ல. இது கட்டளையாகும். இக்கட்டளையை மீறுவோர் ஆராதனையை அலட்சியப்படுத்தும் குற்றத்திற்கு ஆளாவார்கள்.

**7. முன்பாகப்போய் அமருங்கள்.**

தங்களை முக்கியமற்றவர்களாக கருதும் சில சபை அங்கத்தினர்கள் தங்கள் இருக்கையை மாற்றுவதற்குப் பதிலாக சபையை மாற்றுவதற்கே அதிகம் விரும்புவார்கள். ஆராதனை வேளையில், ஒருவர் பின் இருக்கைகளில் அமர விரும்புகிறார் என்றால் அவருடைய உணர்வுப்பூர்வமான பங்களிப்பும், மனரீதியான பங்களிப்பும் குறைவாகவே இருப்பதாக ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.

**8. ஆராதனைக்கு முன்னும், பின்னும் நட்பு பாராட்டுங்கள்.**

குடும்பமாக தேவனை ஆராதிக்கும்போது ஆராதனை மேம்படுகிறது. குடும்ப அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஒருவரிலொருவர் அன்பு கூர வேண்டும்.

**9. பிரசங்கத்தை ஜாக்கிரதையாக கவனியுங்கள்**

பிரசங்கத்தின்போது குறிப்பு எடுப்பது உங்களுக்கு உதவியா யிருக்கும். பிரசங்க வேளையில் அப்படியே வேதாகமத்தைப் பின்பற்றுங்கள். செய்தியை விளையாட்டாக எடுத்துக்கொள்ள வேண்டாம். நீங்கள் பிரசங்கத்தை உற்றுக் கவனிப்பது பிரசங்கியாரை உற்சாகப்படுத்தும்.

**10. ஆராதனை மனிதனை மையப்படுத்தின ஒன்றாக இல்லாமல் தேவனை மையப்படுத்தின ஒன்றாக இருக்க வேண்டும்.**

ஆராதனையில் நம்மை நாமே தேவனுக்கு ஒப்புக்கொடுப்பது முக்கியமானதாகும். ஆராதனையிலிருந்து எனக்கு ஒன்றுமே கிடைக்கவில்லையென்று சொல்பவர்கள் தவறான நோக்கம் கொண்டிருக்கிறார்கள். ஆராதனையில் நாம் எவ்வளவு நம்மை நாம் ஒப்புக்கொடுக்கிறோமோ அவ்வளவு நாம் பெற்றுக்கொள்வோம். கொடுத்தல் இல்லையேல் பெற்றுக் கொள்ளுதலும் இல்லை.

கிறிஸ்தவ இல்லம்

# கிறிஸ்துவுக்காக தகுதியாய் வாழ்வது

Martha Lynn Rushmore

**நா**ம் கிறிஸ்தவர்களாகும்போது, என் வாழ்க்கை கிறிஸ்துவுக்கானது சாத்தானுக்கானதல்ல என்பதை உலகிற்கு சொல்லுகிறோம். நான் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவை தரித்துக் கொள்வதற்கு முன்பாக வாழ்ந்ததை விட வித்தியாசமாக வாழப் போகிறேன் என்று நாம் சொல்லாமல் சொல்கிறோம்.

ஒரு கிறிஸ்தவப் பெண்ணாக கிறிஸ்துவுக்காக நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள்? நீங்கள் மகளாக, ஒரு மனைவியாக, ஒரு மாமியாராக அல்லது ஒரு பாட்டியாக இருக்கலாம். கிறிஸ்தவ பெண்களாக மேற் சொல்லப்பட்ட பங்குகளை விட மேலான பங்குகளை வகிக்க முடியும். இவ்வுலகில் நாம் எப்படி வாழ்கிறோம். செயல்படுகிறோம் என்பதன் மூலமாக நாம் கிறிஸ்துவுக்காக வாழ விரும்புகிறோமா அல்லது சாத்தானுக்காக வாழ விரும்புகிறோமா என்பதை உலகிற்கு தெரியப்படுத்துகிறோம் என்பதை எப்போதும் நினைவு கொள்ள வேண்டும். நாம் நம்முடைய குடும்பத்தால், நண்பர்களால், தெரிந்தவர்களால், அயலகத்தாரால், இன்னும் நாம் ஒரு போதும் சந்தித்திராதவர்களால் கூட பார்க்கப்படுகிறோம். நாம் கிறிஸ்துவைப் போல் சிந்திக்கவும், செயல்படவும் வாழவும் நம்மை நாம் அர்ப்பணிப்போம்.

ஓர் இளம்பெண்ணாக கிறிஸ்துவுக்காக வாழ்வது சற்று கடினமான காரியந்தான். ஏனென்றால், இப்பருவத்தில் தான் பலரால் விரும்பப்பட வேண்டும் என்கிற உணர்வு இயற்கையாகவே ஏற்படுகிறது. சில வேளைகளில் நம் சக தோழிகள் மற்றும் நண்பர்களிடையே பிரபலமாக வேண்டும் என்கிற ஆவல் தவறான பாதையில் நடத்திவிடுகிறது. சில வேளைகளில் சில பெண்கள் தாங்கள் கிறிஸ்தவர்களே அல்லாதவர்கள் போல உடை அணிந்து பல இடங்களுக்குச் செல்வதை நாம் பார்க்கிறோம். நம் நண்பர்கள் நம்மை உலகத்தின் வழியில் அழைத்துச் செல்லாமல் காத்துக்கொண்டு, நம் நண்பர்கள் மீது நாம் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். துரதிஷ்ட வசமாக, சில பெண்கள் மெல்லிய உடைகளையும், வெளிப்படையாக உடல் தெரியும்படியான உடைகள் மற்றும் சிறிய ஆடைகளை அணிந்து தங்களை உலகிற்கு வெளிக்காட்டுகிறார்கள். சில

சந்தர்பங்களில் சில பெண்கள் ஆண்களை கவர்ந்திழுக்கும் வகையில் மிக இறுக்கமான ஆடைகளை அணிந்து தங்களை உலகிற்கு வெளிக்காட்டுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் சில பெண்கள் ஆண்களை கவர்ந்திழுக்கும் வகையில் மிக ஒட்டிய ஆடைகளை அணிந்து தங்களை தரம் தாழ்த்திக் கொள்கின்றனர். துரதிஷ்டவசமாக, ஒல்லியான பெண்கள், குண்டான பெண்கள் என்று எல்லா வயதினரும் இத்தகைய காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இவ்வகையான ஆடைகளை உடுத்துவது கிறிஸ்துவப் பெண்களுக்கு தகுதியில்லாத ஒன்றாக இருக்கிற படியால் இது பாவமான காரியமாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் இளம் ஊழியரான தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பன்னாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு என்று எழுதுகிறார் (I தீமோத்தேயு 4:10). இளம்பெண்களே, நீங்கள் சம வயதினர் மீதும், வயதானவர்கள் மீதும் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.



துரதிஷ்டவசமாக, பெற்றோர்கள் தங்கள் இளம் வயது மகள்களுக்கு ஒழுங்காக உடை அணிய கற்றுக் கொடுப்பதில்லை. மகள்கள் தகுதியற்ற பொருத்தமற்ற ஆடைகள் உடுத்திக் கொண்டு வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள்.

பெற்றோர்களாக நம் பிள்ளைகளுக்கு ஒழுங்காக உடைகளை உடுத்து வதின் அவசியத்தை கற்றுக் கொடுக்கும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. பெற்றோர்களாக நாம் இந்த இளம் பெண்களுக்கு சுயமரியாதையைக் கற்றுக் கொடுத்து அவர்களை வழி நடத்த வேண்டும். எனவே, பெற்றோர் முதலில் ஒழுங்காக உடை அணிய வேண்டும். பெற்றோர்களாகிய நாம் ஒழுங்காக உடை அணியாமல் நம் பிள்ளைகள் அணிய வேண்டுமென்று நம்மால் எதிர்பார்க்க முடியாது.

I தீமோத்தேயு 2:9-10 வசனங்கள் ஸ்திரீகளும் மயிரைப் பின்னு தலினாலாவது பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல் தகுதியான வஸ்திரத்தினாலும் நாணத்தினாலும், தெளிந்த புத்தி யினாலும் தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும் என்று சொல்கிறது. தகுதியான என்னும் வார்த்தை மூலமொழியிலே ஒருவர் தனக்கு அதிக கவனம் கொடுக்காத நிலை என்று பொருள் கொடுக்கிறது. நாம் நம் உடையினாலே தேவபக்தியைச் சொல்ல வேண்டும். இவ்வசனம் இவ்வுலகிலுள்ள எல்லா வயது பெண்களுக்கும் பொருந்தும்.

முதிர் வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீகளுக்கு தங்கள் மாதிரி மூலமாக போதிக்க வேண்டும். பவுல் தீத்து 2:3-5 வசனங்களில் இவ்விதமாகச் சொல்கிறார். முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களும், அவதூறுபண்ணாதவர் களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களாக இருக்கவும், வேதவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி அவர்களுக்கு படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்கு புத்திச் சொல்லு.

பெண்களே, நாமெல்லோரும் பரிசுத்தத்தை தரித்துக் கொள்வோம் – சாத்தானுக்காக வாழ்வதற்கு அல்ல, கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கு. நம் ஆத்துமாக்கள் நம் வாழ்க்கை முறையைச் சார்ந்தவைகளாக இருக்கின்றன! அதே போல் நம் மகள்களின் ஆத்துமாக்களும் நம் வாழ்க்கை முறையைச் சார்ந்தே இருக்கின்றன!

### அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

## சீஷன் என்பவன் யார்?

Donny Weimar

இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையை சுருக்கமாகச் சொன்னால், ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்பதாயிருக்கிறது (மத்தேயு 28:19). இப்படிப்பட்ட மனமாற்றமடைந்த ஆத்துமாக்கள் வெறுமனே மாணாக்கர்களாயிராமல் அதற்கு மேற்பட்டவர்களாயிருக்கிறார்கள். பொதுவாக, ஓர் ஆசிரியர் அல்லது போதகருக்கு முன்பாக மாணாக்கர்கள் பாடங்களை கற்றுக்கொள்ளும் படியாக அமருவார்கள்; ஆனால், சீஷர்கள் என்பவர்கள் சற்று மேலானவர்கள். சீஷர்கள் தங்கள் ஆசிரியர்கள் அல்லது குருக்களின் மாதிரியை அப்படியே பின்பற்றி தாங்களும் ஆசிரியர்கள் அல்லது குருக்களாகிறார்கள்! நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான் என்று சொன்னார் ( லூக்கா 6:40). தன் குருவைப் போலிருப்பது அல்லது இயேசு கிறிஸ்துவைப் போலிருப்பது என்பது கிறிஸ்துவின் குணாதிசயங்களையும், வாழ்க்கை மாதிரியையும் அப்படியே பிரதிபலிப்பதாகும்.

யோவான் சுவிசேஷப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி சீஷர்கள் மூன்று காரியங்களைச் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். முதலாவது, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் சீஷர்களாயிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து தம்மை விசுவாசிக்கிறவர்களைப் பார்த்து நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள் என்றார் (யோவான் 8:31). வேதாகமத்தை ஒருவர் தானாக புரிந்து மெய்யான விசுவாசத்தை உடையவராக இருக்க முடியாது. ஏனென்றால், உண்மையான விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17).

அடுத்ததாக, சீஷர்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருக்கிறார்கள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நீங்கள்

ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார் [யோவான்13:35]. அன்பில்லாத கிறிஸ்தவனால் ஒரு உண்மையான சீஷனாக இருக்கவே முடியாது [I யோவான் 4:20]. தேவனுடைய பிள்ளைகள் வேதாகம அன்பை முழுமையாகப் புரிந்து கொள்கிறார்கள். ஏனென்றால், தேவன் அன்பாகவே இருக்கிறார் [I யோவான் 4:8]. அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் [I யோவான் 3:16].

கிறிஸ்துவின் சீஷர்கள் மிகுந்த கனிகளைக் கொடுக்கிறார்கள். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள் [யோவான் 15:8]. வேதாகமத்தின் கனிகொடுப்பதென்பது, பலன் கொடுக்கிற விசுவாசத்தோடு சம்மந்தமுடையதாயிருக்கிறது. இத்தகைய விசுவாசம் அடிப்படையில் இரண்டு வகையான கனிகளைத் தருகிறது. நீதியின் கனி [யாக்கோபு 3:18]. நம் எஜமானுக்காக அதிக சீஷர்களை உருவாக்குதல் [பிலிப்பியர் 1:22]. எல்லா ஜீவராசிகளும் பலுகிப் பெருகுகின்றன [ஆதியாகமம் 1:22] கனி கொடுத்தல் தான் உண்மையான சீஷர்களை தீர்மானிப்பதற்கான பரீட்சையாயிருக்கிறது.

உண்மையான சீஷர்களாயிருப்பதென்பது கிறிஸ்துவிடமிருந்து கற்றுக்கொள்வதையும், அவரை அப்படியே பிரதிபலிப்பதையும் அவருடைய சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்வதையும் உள்ளடக்கியதாகும். சீஷர்கள் அடுத்து, சீஷர்களை உருவாக்கும் சீஷர்களை உருவாக்குகிறார்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் [மத்தேயு 28:20]. ✝

## தேவன் தம்முடைய வார்த்தையாலே நம்மை தேற்றுகிறார்.

**இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள் (I தெசலோனிக்கேயர் 4:18).**

### அனுதின கிறிஸ்தவ ஜீவியம்

## பரலோகம் போவதை சாத்தியமாக்குதல்

Wes Mc Adams

**பெ**ரும்பாலான ஜனங்கள் தாங்கள் மரிக்கும் போது அவர்களுடைய முக்கிய குறிக்கோள் பரலோகம் போவது தான் என்று என்னிடம் சொல்கிறார்கள். உண்மையில், இதே வார்த்தைகளை நான் எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டதை நான் கொஞ்சம் நிச்சயப் படுத்திக் கொள்ளுகிறேன். ஒருவர் கொண்டிருக்கும் மிகச்சிறந்த குறிக்கோள் இதுவாகத்தான் இருக்கும் என்று எப்போதுமே நினைத்திருக்கிறேன். ஆனால், இப்போது நான் என் மனதை மாற்றிக் கொண்டேன். இச்சொற்றொடரை நான் எவ்வளவு அதிகமாக சிந்திக்கிறேனோ அவ்வளவு அதிகமாக இது நம் இருதயங்களில் ஒரு தவறான புரிந்து கொள்ளுதலை பெரும்பாலும் வெளிப்படுத்துகிறது என்று நினைக்கிறேன்.

பரலோகம் போகிற நம் இலக்கைக் குறித்து நாம் பேசும் போது மிகத் துல்லியமாக என்ன பொருள்படும்படி நாம் பேசுகிறோம்? நமக்கு ஒரு இலக்கு அல்லது குறிக்கோள் இருக்குமானால் அதை அடைய ஏதோ ஒரு வழி நமக்கிருக்க வேண்டும். அப்படித்தானே? நான் உங்களிடம் என் இலக்கு 15 பவுண்டுகள் எடை குறைப்பது என்று சொன்னால் இந்த இலக்கை எப்படி அடைந்து விடுவீர்கள் என்று நம்புகிறீர்கள் என்று என்னிடம் கேட்கலாம். அப்போது நான் இலக்கை அடைய என்னிடமிருக்கும் எல்லா நல்ல பழக்கவழக்கங்களையும் பட்டியலிடுவேன். சோககரமாக, நம்மில் பலர் பரலோகத்திற்கு போவதையும் இவ்விதமாக நினைக்கிறோம்.

நம்முடைய நற்கிரியைகள் நாம் பரலோகம் போவதற்குப் போதுமானதென்று நினைப்பது மனித இயல்பாக இருக்கிறது. அதன் காரணமாக பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு நாம் எல்லாவற்றையும் செய்துவிட்டோம் என்று அதீத நம்பிக்கையில் இருக்கிறோம். அதே நேரத்தில் பலரை பூரணமற்ற நிலைகாரணமாக பரலோகம் போக முடியாதோ என்கிற பயம் பற்றிக் கொண்டிருக்கிறது. சிலர் காரியங்களை குறைவாகச் செய்ய முயற்சிக்கிறார்கள். சிலர் முடியாதவைகளைச் செய்ய முயற்சிக்கிறார்கள். இவைகளெல்லாம் நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதற்கு அடையாளங்களாக இருக்கின்றன.

**கிருபையைப் புரிந்து கொள்ளுதல்**

உதாரணமாக, நாம் ஏதாவது பொருளை வாங்க விரும்பினால். பொதுவாக நாம் பணம் சேமித்து அதை வாங்குவோம். வேதாகம காலங்களில் கூட ஒரு சராசரி மனிதனால் தான் விரும்பிய எல்லாப் பொருள்களையும் வாங்க முடியாமல் இருந்தது. அதிலும் குறிப்பாக சமுதாய ஏணியின் அடித்தட்டில் உள்ள மக்களுக்கு இது எட்டாக் கனியாக இருந்திருக்கும்.

ஒரு சராசரி மனிதனால் ஒரு பொருளை வாங்க முடியாமல் போய் அப்பொருள் அந்த மனிதனுக்கு தேவைப்படும் போது உயர் தட்டில் இருக்கும் ஒருவரிடம் இந்த நபர் உதவி கோருவார். இந்த ஏழையின் வேண்டுகோளை ஏற்று உதவ முன்வரும் அந்த ஐசுவரியவான் நன்கொடையாளர் என்றழைக்கப்படுவார். இந்த நன்கொடையாளர் செய்யும் உதவி அல்லது தயை கிரேக்க மொழியில் Charis என்றழைக்கப்படுகிறது. இந்த Charis தமிழில் கிருபை என்று மொழியாக்கம் செய்யப்படுகிறது.

இப்படி செய்யப்படும் உதவி சில எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கி யதாகும். உதாரணமாக, யாராவது உங்களுக்கு கிருபை காட்டினால், எப்போதெல்லாம் நீங்கள் அவருக்கு தேவைப்படுகிறீர்களோ அப்போதெல்லாம் அவருக்கு நீங்கள் விசுவாசமாக சேவை செய்வதும், அவருடைய புகழைப் பரப்புவதும் உங்கள் வாழ்நாள் கடமை யாயிருக்கிறது. இது உதவி பெறுபவரை வலுக்கட்டயமாக உதவியை திரும்பச் செலுத்த வைப்பதற்கான ஒரு முயற்சி அல்ல. உதவி பெறுபவரின் நன்றியுணர்வை பிரதிபலிக்கும் ஒரு செயலாகும்.

புதிய ஏற்பாடு எபேசியர் 2:45 வசனங்களில் இவ்விதமாகச் சொல்கிறது. தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார், கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் (எபேசியர் 2:45). இப்படித்தான் இரட்சிப்பு வேலை செய்கிறது. தேவன் இரட்சிப்பை ஒரு ஈவாக தருகிறார் (வசனம் 8). பாவிகளுக்கு தயவுபாராட்டி அவர்களுக்குத் தேவையான மன்னிப்பையும் கொடுப்பதால் இந்த இடத்தில் தேவனே உதாரத்துவமும், ஐசுவரியமும் உள்ள நன்கொடையாளராக இருக்கிறார்.

**நற்கிரியைகளைப் புரிந்து கொள்ளுதல்**

முதல் நூற்றாண்டு உலகில் ஒருவர் செய்யும் மிக மோசமான காரியம் நன்றி கெட்டவராக இருப்பது தான். அப்படி இருந்தால் அவர் சமுதாயத்தால் ஒதுக்கப்படுவார். அவர் நன்றியில்லாதவராக சமுதாயத்திற்கு தம்மை நிருபித்துவிட்டால், ஒருவர் கிருபையைப் பெற்றுக் கொண்டு நன்றி கெட்டவராக மேலும் தொடர்ந்து அவருக்கு யாரும் உதவிச் செய்ய முன்வரமாட்டார்.

கிருபை மற்றும் நன்றி போன்ற வார்த்தைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணையப்பட்டிருக்கின்றன. தற்கால ஆங்கில வார்த்தை களில் கூட **நன்றி** போன்ற வார்த்தைகள் ஒரே வேர்சொற்களாக இருக்கின்றன. கிருபை என்பது ஈவு எனும் வார்த்தையைக் குறிப்பதற்காக பயன்படுத்தப்படும் வார்த்தை மட்டுமல்ல, அந்த ஈவுக்கு ஒருவர் காட்டும் பிரதி உபகாரமாகவும் இருக்கிறது. ஸ்பானிஷ் மொழியில் உங்களுக்கு நன்றி என்பதை gracias என்றுதான் சொல்கிறார்கள்.

இது தான் தேவனுக்கு நம்முடைய கீழ்ப்படிதலாயிருருக்கிறது. அதனால் தான் நாம் அவருடைய துதிகளைப் பாடுகிறோம். அதனால் தான், நாம் நம் அயலகத்தாரிடம் சுவிசேஷத்தை அறிவிக்கிறோம். தேவன் நம்மை கிறிஸ்து இயேசுவுக்குள் அவரோடே கூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தபடியால் நமது நன்றியை தேவனுக்கு நாம் தெரியப்படுத்துகிறோம் [எபேசியர் 2:6]

தேவன் தம்முடைய கிருபையினாலே பரலோகத்திலே நமக்கு ஒரு இடத்தைத் தந்திருக்கிறபடியால் அவருக்கு நம் நன்றிவுணர்வைக் காட்டுவதற்காக அவருடைய சித்தத்தை செய்ய வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற காரியங்களுக்காக நம் நன்றியை வெளிப்படுத்துவதற்காக தேவன் நாம் செய்ய விரும்பும் காரியங்களை எல்லாம் செய்ய வேண்டும்.

கலாத்தியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் தவறான சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதன் மூலமாக நன்றியில்லாதவர்களாக மாறினார்கள். மோசேயின் பிரமாணத்தை கைக்கொள்வதன் மூலமாக ஒருவர் நீதிமானாக்கப்பட முடியும் என்பது தான் அந்த தவறான சுவிசேஷம். அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் 5:4 ல் நியாயப்பிரமாணத் தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் என்று சொன்னார்.

நீதிமானாக்கப்படுவது எனும் ஈவை நன்றியுணர்வோடு ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக தங்கள் முயற்சியினாலே அதை சம்பாதித்துக் கொள்ள விரும்பியிருக்கிறார்கள்.

எபிரெய ஆசிரியரும் கூட இதே விதமாக வார்த்தைகளை வெளிப்படுத்தியிருக்கிறார். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு, நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால். பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்ப்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும் [எபியெர் 10:26:27].நாம் மனபூர்வமாக தொடர்ச்சியாக பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், நாம் நன்றிகெட்டவர்களாயிருந்து தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிற ஈவுகளை பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாகி விடுவோம்.

**நாம் கிறிஸ்துவிடம் விசுவாசம் வைத்து, மனந்திரும்பி ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவை தரித்துக்கொள்ளும்போது [கலாத்தியர் 3:27] தேவன் கிருபையாக பரலோகத்தில் நமக்கு ஒரு இடத்தைத் தருவார்.....** தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரம ங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார், [எபேசியர் 2:4-7]. கிறிஸ்துவின் மரணத்தில் நாம் பரலோகம் போவதற்கு தேவையான எல்லா காரியங்களையும் அவர் ஏற்கனவே செய்து முடித்துவிட்டபடியால் நமக்கு ஒரு புதிய குறிக்கோள் இருக்க வேண்டும். நம் குறிக்கோள் இடைவிடாத துதியினாலும் உண்மை யுள்ள சேவையினாலும் நம் நன்றியுணர்வை வெளிப்படுத்துகிறதாக இருக்க வேண்டும்.

நாம் தொடர்ச்சியாக உண்மையாக அவரை சேவித்தால் நாம் கவலைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. ஏனென்றால், நம் இரட்சிப்பு நம்மால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.

# அதிக மேன்மையான வழி

## Move Excellent Way

**(1 கொரி. 12 : 31).**

அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து போம். அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போம் அறிவானாலும் ஒழிந்துபோம் (1. கொரி. 13 : 8).

பவுல், 1. கொரி. 12–14 அதிகாரங்களில், கொரிந்தியருக்கு ஆவிக் குரிய வரங்களைப் பற்றின விளக்கங்களை கொடுக்கிறார்.

காரணம் அவர்கள் ஆவிக்குரிய வரங்களை அவமாக்கி வந்தனர்.

எது அந்நிய பாஷை? எப்படி இதை அவமாக்கினர்? அந்நிய பாஷையை பற்றி பேசும்போது ஏன் அன்பு அங்கே ஊடாக பேசப்படுகிறது?

இன்றைக்கும் மக்கள் அந்நிய பாஷையை பேசுகிறார்களா? இந்த கேள்விகளுக்கு நாம் பதிலைக் கண்டு பிடித்தல் வேண்டும்.

**1. முதலாவது :- அந்நிய பாஷை என்பது ஒரு மொழியாகும்.**

அந்நிய பாஷை பேசும் வரமென்றால், கற்றுக் கொள்ளாத வேறொரு மொழியை பேசும் திறமையாகும். இது இரண்டு காரணங் களினால் முக்கியமானது. ஒரு தனிப்பட்ட மனிதனில் தேவன் கிரியை நடப்பிக்கிறதற்கான சான்று. மற்றொன்று ஊழியப் பணியில் இது மிகவும் உபயோகமானது. பெந்தெகொஸ்தே நாளில், அப்போஸ்தலர் களுக்கு பரிசுத்த ஆவியானவர், அந்நிய பாஷையில் பேசும் வரத்தை பொழிந்தருளினார். அவர்கள் (அப்போஸ்தலர்கள்) அந்நிய பாஷையில் பேசினார்கள். அந்நாளில் தேசாந்திரிகளாக திரிந்த யூதர்கள் ஒன்று கூடி வந்திருந்தனர். அவர்களுக்கு எபிரேய பாஷை அவ்வளவாகத் தெரியாது. இரண்டாம் மொழியான கிரேக்க மொழி தெரியும். அவர்கள் உலகெங்கிலும் சிதறியிருந்ததினால் பல மொழிகளை பேசினர். பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் பேசுவதை அவர்கள் கேட்டு ஆச்சரியப்பட்டனர். தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் கேட்டதினால் கலக்கமடைந்தனர் (அப். 2 ; 6).

நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே இதெப்படி? (அப்.2 ; 8) என்று ஆச்சரியப் பட்டனர். 4 ம் வசனத்தில், அப்போஸ்தலர்கள் வெவ்வேறு பாஷை களிலே பேசத் தொடங்கினர். இவர்கள் பேசின பாஷைகளை மொழிகள் என்று 6ம் வசனத்திலும், 8ம் வசனத்திலும் விளக்கமளிக் கின்றார் ஆவியானவர். ஆகவே, அந்நிய பாஷை (Tongue) என்பது மொழி (Language) என்று பவுல் விளக்குகிறது (1. கொரி. 14 : 27, 28).

இன்றைய அந்நிய பாஷை பேசுதலை ஆராய்ச்சி செய்து கண்டு பிடிக்கப்பட்ட உண்மையென்னவென்றால், இது ஒரு வகையான அர்த்தமற்ற உளருதல் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

அந்நிய பாஷை பேசுபவர் ஒரு நிமிடம் பேசினால் விளக்க மளிப்பவர் ஐந்து நிமிடங்கள் எடுத்து கொள்வார் காரணம்.

ஏதாவது கற்பனை செய்து புனைந்து பேசவே இந்த நேர நீடிப்பு.

அந்நிய பாஷை பேசுபவர்கள் ஒரே மாதிரியானவைகளையே எங்கும் பேசுவார்கள். விளக்கமளிப்பவர்கள் சூழ்நிலைக்கேற்ப வெவ்வேறு விளக்கங்களை சொல்லிக் கொண்டு வருவார்கள்.

ஒரு முறை – சில கல்லூரி மாணவர்களிடம் தங்களுக்கு தெரியாத பாஷையில் ஏதாவதொன்றை உளரச் செய்து தங்களால் எவ்வளவு உளர முடியுமோ அவ்வளவு உளரச் செய்து அதை டேப் ரிக்கார்டரில்'' பதிவு செய்தனர். அடுத்தபடியாக, பெந்தெகொஸ்தே பிரிவு கூட்டத் தார் பேசின அந்நிய பாஷையை பதிவு செய்தனர். இந்த இரண்டு பதிவுகளையும், வேறொரு பெந்தெகொஸ்தே கூட்டத்தாரிடம் போட்டு கேட்கச் செய்தனர். இந்தக் கூட்டம், மேலே பதிவு செய்யப்பட்டுள்ள இரண்டும் அந்நிய பாஷைதான் என்று அங்கீகாரமளித்தனர். சிரிப்பு! என்னவென்றால், கல்லூரி மாணவர்கள் வேடிக்கையாக உளறினது தான் உண்மையாகவே அதிகமாக ஆவியில் நிறைந்து பேசப்பட்ட அந்நிய பாஷை என்றனர்.

ஒரு மிஷினரியின் மகன் ஆப்பிரிக்காவில் படித்துக் கொண்டி ருந்தபோது, ஆப்பிரிக்க மொழியை பேசக் கற்றுக் கொண்டான். பெந்தெகொஸ்தெகாரர்களின் அந்நிய பாஷை கூட்டத்தில் ஒரு முறை கலந்து கொண்டபோது இவர் என்ன செய்தார் தெரியுமா? ஆப்பிரிக்க மொழியில் கர்த்தர் கற்பித்த ஜெபத்தை சொன்னார் [மத் 6; 9–13]. அந்நிய பாஷைக்கு விளக்கமளிப்பவர் எழுந்து நின்று என்ன விளக்கம் சொன்னார் தெரியுமா?

'இயேசுவின் இரண்டாம் வருகையை பற்றின செய்தி இது வென்று சொன்னாராம். எல்லோரையும் எப்படி முட்டாளாக்குகிறார்கள் பாருங்கள்.

அப்போஸ்தலர்கள் பெற்றிருந்தது பரிசுத்த ஆவியானவரின் வரம் போன்றதல்ல., இவர்கள் பெற்றிருக்கிற வரம். இன்றைக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தியும், கற்றுக் கொடுத்தும் அந்நிய பாஷையில் பேசுகின்றனர்.

I **இரண்டாவதாக : எப்படி கொரிந்தியர் இந்த வரத்தை அவமாக்கினர்?**

கொரிந்தியர் – சபையின் பக்தி விருத்திக்காக இதை பயன்படுத்தா மலும், இழந்து போனதைத் தேடி, ஆத்தும ஆதாயப் படுத்துவதற்கு பதிலாக, தங்களை உயர்த்தி காட்டுவதற்கே அதிகமாக பயன்படுத்தினர் [1 கொரி. 14; 4, 5, 17, 18] அற்புத வரங்களிலேயே இது தான் கடை யாந்தர வரமாகும். [1 கொரி. 12; 31, 14:5] அநேக வரம்புகளை பவுல் அவர்களுக்கு பாஷைகளை பேசுவதற்கு விதிக்கிறார். வியாக்கியானம் செய்கிறவரில்லையென்றால் பாஷை பேசுகிறவர்

அமைதலோடிருக்கச் சொல்லுகிறார். ஏனெனில் இவர்கள் சபைக்கு எந்த வகையிலும் பிரயோஜனமில்லை என்கிறார் [1. கொரி. 14 ; 5, 19, 27, 28].

ஆரம்ப கால சபையில் பாஷை பேசுவது, விசுவாசத்தின் தலையாய ஒன்றல்ல. ஆனால், இன்றைக்கு இதை தலையாய ஒன்றாக பெந்தேகொஸ்தே மக்கள் பேசுகின்றனர்.

**3. மூன்றாவதாக :– அந்நிய பாஷையைப் பற்றி பேசும்போது, ஏன் அன்பைப் பற்றி ஊடாக பேசுகிறார்?**

கொரிந்தியர்களுடைய மேட்டிமையான சிந்தைகளில் ஒன்றாக இந்த அந்நிய பாஷை வரமிருந்தது. பேசுகிற இவர்கள் பேசாத மற்றவர்களை மிகவும் கேவலமாக பேசித் திரிந்தனர். இன்றைய பெந்தெகொஸ்தவினரைப் போல பவுல் சொல்லுகிறார் 1. கொரி. 12; 12–31–ல் எல்லாவற்றையும் சரீரமான சபையில் பக்தி வளர்ச்சிக்கு ஏதுவாக இசைந்து செயல்பட வேண்டும் என்று. ஆகவேதான், இதனிலும் மேன்மையான வழியை காட்டுகிறதாக சொல்லுகிறார் [1 கொரிந்தியர். 12 ; 31].


அன்பு இல்லாமல் பாஷையை பேசுகிறது முட்டாள் தனம் என்கிறார் [I கொரிந்தியர் 13 ; 1]. அன்புதான் எல்லாவற்றிற்கும் திறவு கோல் – தன்னைதானே வளர்ப்பதற்கு பதிலாக மற்றவர்களுடைய வளர்ச்சிக் கேதுவ அன்பு கூருதல் வேண்டும் [ 1. கொரி. 14 ; 4].

**4. நான்காவதாக : இன்றைக்கும் மக்கள் அந்நிய பாஷை, பேசுகிறார்களா?**

இன்று படித்து கற்று பல பாஷைகளைப் பேச முடியும். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வரத்தினால் அல்ல. காரணம் புதிய ஏற்பாடு முழுமையாக்கப்பட்டவுடன் இந்த வரம் எடுபட்டு போய்விட்டது. இந்த ஒரு காரணத்தினால் இந்த வரத்தை தவறாகப் புரிந்துள்ளனர். அதினிமித்தம் தவறான விளக்கம் அளித்து வருகின்றனர். ஆண்டவருடைய மகிமையினால் நிறைந்து உணர்ச்சி வசப்பட்டு ஏதோ ஒன்றை உளருவதை, அந்நிய பாஷையென்று தவறுதலாக போதிக்கின்றனர். ஆகவே, ஈடு இணையற்ற கிறிஸ்தவத்தின் ஒருமைப்பாடு அழிக்கப்பட்டுவிட்டது. இன்றைக்கும் அழிக்கப் படுகிறது.

ஆராதிக்கும் போது உணர்ச்சி வயப்பட்டு உச்சநிலையில் தாறுமாறாக ஏதாவது ஒன்றை உளருவதை நாம் மறுக்கவில்லை . ஆனால், அது பரிசுத்த ஆவியானவரின் வரம் என்பதைத்தான் மறுக்கிறோம். இது தேவனிடத்திலிருந்து வரவில்லை. இது மனித சிந்தை மனோநிலையில் ஏற்படுகிற உணர்வுகளின் குழப்ப நிலை விளைவு – உளருதல் பாஷை இதில்லாமல் வேறேயில்லை .....

## திருமறை தியானம்



**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

நம்பிக்கை TV வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் TV சனி காலை 7:00 - 8.00 மணி

**மாத இதழ் : திருமறை ஆசான்**

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.


பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்


E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382

P.R. **சுவாமி** : 098440 70763

P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420


B. **அர்ஜுனன்** : 994435 58041

## சத்திய வழி

❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி**
❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

---


## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜுனன்**
❖ தமிழன் TV : செவ்வாய் மாலை 6:00 – 6:30 மணி
❖ நம்பிக்கை TV : வெள்ளி 8:00 – 8:30 மணி
❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**
❖ தமிழன் : ஞாயிறு காலை 6:45 காலை 7.00 மணி
அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
❖ நம்பிக்கை TV : ஞாயிறு மாலை 3:30 காலை 4.00 மணி
❖ **Good News TV** : செவ்வாய் இரவு 7:30 – 8.00 மணி
❖ பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி
<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( 4 இதழ்கள் ) (அ) ரூ. 200 ( 8 இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய ............................................... முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**

“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________

தெரு / ரோடு : ______________________

நகரம் : ______________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________